# கூவ நூல்



பதிப்பாசிரியர்

டாக்டர் ச.வே.சுப்பிரமணியன்

யாதும் ஊரே யாவரும் கேளிர்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

# கூவ நூல்

டாக்டர் ச. வே. சுப்பிரமணியன்
இயக்குநர்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
International Institute of Tamil Studies
அடையாறு—சென்னை-600 020.

## BIBLIOGRAPHICAL DATA

| | | |
|---|---|---|
| Title of the book | — | Kūva Nūl<br>(Treatise on well-divining) |
| Editor | — | Dr. S V. SUBRAMANIAN, M.A.,PH.D.,<br>Director<br>I. I. T. S, Adaiyaru, Madras-20 |
| Publication Number | — | 26 |
| Language | — | Tamil |
| Edition | — | First |
| Date of Publication | — | December, 1980 |
| Paper used | — | 18.2 Kg. |
| Size of the book | — | 21 × 14 cms. |
| Printing type used | — | 10, 12 Points |
| No. of Copies Printed | — | 1200 |
| Number of Pages | — | xii + 148 |
| **Price** | — | **Rs. 7/= (Rupees Seven)** |
| Printers | — | Novel Art Printers<br>Madras 600 014-Phone 82731 |
| Binding | — | Card Board |
| Artist | — | Amudhone |
| Subject | — | Well-divining |
| Summary | — | This is the first book in Tamil on well-divining |

இந்நூல் 1981 சனவரியில் மதுரையில் நடைபெறவிருக்கும் ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டை யொட்டி வெளிவருகின்றது.

# முன்னுரை

**டாக்டர் ச. வே. சுப்பிரமணியன்**
இயக்குநர்—உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

தமிழர் பல கலைகளிலும் வல்லவர். எந்தத் துறையை எடுத்துக் கொண்டாலும் ஆழ்ந்து நோக்கு கின்ற ஆற்றல் உடையவர். எனக்குச் சிறு வயதில் இருந்தே கிணறு பற்றிய ஆர்வம் இருந்துகொண்டே இருந்தது. கிணறு பற்றிய தமிழ் நூல்கள் உண்டா? ஏடுகள் கிடைக்குமா? என்று பல ஆண்டுகளாக முயன்று கொண்டிருந்தேன். முதன் முதலில் டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் நூல்நிலையத்தில் 'கூவ நூல்' என்ற ஏட்டினைக் கண்டேன். அதற்குப் பின்பு இந்த எண்ணம் வளர்ந்தது. அதனால் கூவநூல் பற்றிய சுவடிகள் என் னென்ன கிடைக்கும் என்று முயன்றேன். தஞ்சை சரஸ்வதி மஹால் சுவடி இயல் நிலையத்தில் ஒரு சுவடி கிடைத்தது. திருவனந்தபுரத்திற்குச் சென்றபோது அங்கு, கூவ நூல் சுவடிகள் கிடைக்குமா என்று முயன்றதில் கேரளப் பல்கலைக் கழகக் கீழ்த்திசைச் சுவடி இயல் நிலையத்தில் 6 சுவடிகள் கிடைத்தன. அடுத்தாற்போன்று என்னுடைய ஆசிரியப் பெருந்தகை உயர்திரு ந. சேதுரகுநாதன் அவர்கள் தன்னுடைய சுவடிகளில் இருந்து கூவ நூல் சுவடிகளைத் தந்தார்கள். அந்த 9 சுவடிகளையும் இணைத்துப் பார்த்தபோது சில சுவடிகள் ஒரே செய்திகளைத் தந்தன. ஆனால் பல சுவடிகள் படிக்கப்படிக்கப் புதுமையான பல கருத்து களைக் கூறின.

தமிழில் இதுவரை கூவ நூல் பற்றிய நூல் வந்த தில்லை. இதுதான் முதல் நூலாக அமைகின்றது. 9 சுவடிகளில் 5 சுவடிகளைத் தேர்ந்தெடுத்து இந்நூலை வெளியிட்டுள்ளேன். அதை முழு நிலையில் ஆய்வு செய்ய இயலவில்லை, காலம் காரணமாக. ஆய்வு செய்து அடுத்த பதிப்பில் மிகச் சிறப்பாக எல்லாக் கருத்து களையும் தர இயலும் என நினைக்கின்றேன். சுவடிகள் அனைத்தும் 18-ஆம் நூற்றாண்டுக்குப்பின்பு எழுதப் பட்டாலும் இது பரம்பரை பரம்பரையாகச் சொல்லிச் சொல்லி எழுதப்பட்டு வந்த நூலாக இருத்தல் வேண்டும் என்று நம்புகிறேன்.

'கூவல்' என்ற சொல் கிணறு என்ற பொருளைச் சங்க இலக்கியங்களில் இருந்தே குறித்து வருகிறது. கிணற்றைக் குறிக்கும் கூவம் என்ற சொல் கம்பன் காலத்தில் இருந்து வழக்கில் காணப்படுகிறது. ஆகவே கூவ நூல் மிகப் பழங்காலத்தில் இருந்தே இருத்தல் வேண்டும். நமக்குக் கிடைத்தது மிகப் பிற்காலத்தில் தான்.

இந்நூலில் முக்கியமாக 'மரக்கரு' அதாவது நிலத்தில் வளர்கின்ற மரங்கள், செடிகள், கொடிகள், புல் இவற்றை வைத்துக்கொண்டு இந்நிலத்தில் எவ்வளவு ஆழத்தில் நீர் கிடைக்கும், எந்த நீர் தெளிவான நீராக இருக்கும், என்பதைப் பற்றியெல்லாம் அனுபவம் வாயிலாகத் தம் அறிவு கொண்டு உணர்ந்துள்ளனர். அந்தச் செய்தி அவர்களுடைய அறிவைக் காட்டுகிறது.

அதுபோன்று நிலத்தில் ஊருகின்ற விலங்கினங்களை வைத்து அந்நிலத்தில் உள்ள நீரின் தன்மையைப் பற்றிக் கூறுகின்றார்கள். அடுத்து, நிலத்தில் உள்ள புற்றுகளின் வகைகளை அடிப்படையாக வைத்து நிலத்தினுள் இருக்கும் நீரின் தன்மையைக் கூறுகின்றனர். அதோடு நம் மரபுப்படி குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற நிலங்களாகப் பகுத்துக்கொண்டு ஒவ்வொரு நிலத்திலும் மண் வகைகள் இத்தனை, அதன் கீழ் இருக்கின்ற பார் வகைகள் இத்தனை என்பதைப் பற்றியெல்லாம் கூறும்போது தமிழருக்கு மண் வளம் பற்றிய (Soil Science) அறிவும், வளம் பற்றிய அறிவும் உள்ளமை தெளிவாகின்றன. தமிழில் முதன் முதலில் கூவ நூல் இப்போது தான் அச்சாகி வருகிறது என்பதை நினைக்கும்போது மகிழ்வாகவும் மன நிறைவாகவும் இருக்கின்றது. இத்துறையைப் பற்றிய ஆய்வு இன்னும் பல நிலைகளில் வளர வேண்டும் என்று நான் விரும்புகிறேன். இத்துறைக்கு இது ஒரு அறிமுக நூலாக அமைகின்றது.

இந்நிறுவனத்தின் எல்லாச் செயற்பாடுகளுக்கும் ஊக்கமும், ஆக்கமும் தருகின்ற மாண்புமிகு கல்வி அமைச்சர் செ. அரங்கநாயகம் அவர்களுக்கு என்றும் நன்றி உடையோம்.

குறுகிய காலத்தில் சிறப்பாக அச்சிட்டுத்தந்த நாவல் ஆர்ட் அச்சக உரிமையாளர், நாரா. நாச்சியப்பன் அவர்களுக்கு எங்கள் நன்றி.

## *Tamil Treatises on the Science of Well-Divining*

**Dr. S. V. Subramanian**

The Tamils, right from the pre-historic days through the early phases of the Christian era, had been an extraordinarily rich and resourceful race. Their literatures bear compelling evidences of their mastery in almost all the disciplines of human thought and emotion. Their encyclopaedic genius has had its manifestations not only in literature, art and architecture but also in such complex and scientific fields as medicine, astronomy, psychology and so on. The secret behind their astonishing vitality of heart and head is that they had been a people most vitally *alive* and most vividly human, having an unshakable zest in the *art* of living. It is natural that such a people could explore every avenue of human interest and utility. However, the fruits of their intellectual and emotional potentiality lay scattered in their artefacts, and it is our bounden duty to extract, and systematize them, if we are to remain the true inheritors of that great tradition. This paper attempts at studying the prophetic supremacy of the Tamils in the science of 'well-divining' on the basis of the graphic evidences in some of the priceless manuscripts which I had the opportunity to come across.

The art of well-divining is as old as the culture of this race. The Caṉkam art works speak of the practice of the Tamils to

dig wells on the highways for the weary travellers (Naṟṟiṇai: 240), Puṟanāṉūṟu: 306). The ethical work *Tirikkaṭukam* (14) refers to the virtuous act of digging 'drinking water wells' bounteously. *Tivākaram* and *Kayātara Nikaṇṭu* refer to those well-versed in well-divining as 'ulliyar' and 'calliyar' respectively with the unmistakable implication that this science flourished in this land.

Although 'Kūval', 'acumpu', 'kūpam', 'Kuḷi', 'pūval', 'keṇi', 'turavu' are used synonymously to denote *well*, cankam classics speak of kūval only. And a look into the references to *well* in these works (Patiṟṟuppattu:51, Aiṅkuṟunūṟu:203) reveal that the wells of those days, generally, were not so deep as that we have now. Apart from the reasons pertaining to geological evolution and, perhaps, over exploitation, we may not go wrong if we conclude that it is the 'scientific' knowledge they had had of this field by applying which they located the right place for digging wells, that they could get water at a compara tively lower depth.

As for the word 'kūvam' we may take it as the 'marriage' of the morphemes 'Kū' meaning the earth and 'am' meaning water. It is possible that when kūval and nūl are combined we have kūvaṉūl. As the word 'calliyam' denotes the prediction of what is there underneath the earth, it is right that, the experts in this art were called 'calliyar', and as 'ulliyam' refers to water, we have the word 'ulliyar' to denote those well-versed in well-divining.

The science of well-divining is part of the folk-lore tradition. Hence the 'techniques' of these science might have been orally transmitted from generation to generation and might have settled down in the palmyra leaves during the 18th, 19th centuries, as the style of these writings suggests. Such a belief gets authenticity when we look into the evolution of the history of Siddha medicine and into the thoughts concerning the birth of *Irayanar Akapporul.* Again, we may readily infer that as the terms 'calliyar' and 'calliyam' refer to prophecy of telling about

what is underneath the earth's surface and magic, and those class of people who had mastery in magic respectively, prediction and magic were the cardinal constituents of the art of well-divining. Here it is worth-noting that even though the works on well-divining following the Tamil tradition, have Akatiyar as their author, they are for all practical purposes anonymous.

Now, entering into the techniques of the science, we come across an amazing wealth of materials in the form of an inseparable blend of scientific information and aesthetic vision. The fundamental features which characterize this science are the facts about the probable sources of water depending on the nature of the soil and the propeties of this water, locating the water-sources on the basis of trees, plants and creepers growing on the soil, indicating the nature of the springs and the anthill found in the locations of water sources, the mutual influence of the planets and the springs and so on. These treatises have adopted the traditional Tamil classification of land in that they have analysed the nature of the soil on the basis of the classification. According to manuscripts A and D (they are classed so for the sake of convenience rocky lands were classed *Kurinci*, the land with coarse sand *neytal* the land abounding in scattered minor rocks *Mullai*, muddy land *marutam* and the unused tract *palai* of which the Neytal tract was supposed to have moisture, Manuscript C goes farther than A and D in that it talks about the brownishness of Mullai water, whiteness of Palai water, Kurinci's blackish water, Marutam's drinking water and the saltish water of Neytal. Script A has an additional body of information regarding the characteristics of the particular soil and gives detailed explanation of the different anthills and the nature of water found there. Our ancient's profound knowledge, of the soil science has its exemplication in Manuscript E where we find a minute study of the different layers of the soil, we come across as we dig more and more in a particular class of land. For example when we dig the land at the kurinci tract, the first six cans (1 can is nearly 9 inches) will be the coarse soil, the next two cans will have black soil, after that we have white lime

earth for eight 8 cans, next come acid rocks for three cans, the fifth layer will be the black sticky lime soil for four cans, the succeeding layer will be the soft, moistured stones for ten cans and so on. Manuscript A talks of the depths of the water source from the surface in different lands. In kurinci springs will be found at a depth of 33 cans, in Palai 30 cans, in Mullai 36 cans, in Neytal 35 cans and in Marutam 22 cans. Manuscript C takes it further by explaining besides the details noted above, the type of the spring, the characteristics of its water found in particular tracts of land of particular depths, the 'connectedness' of these springs with the stars and so on. These details are found in the manuscript with Dr. U. Ve. Ca. library at Madras and the Kerala University manuscripts numbered 6356, of course with certain contradictions. Again the C manuscript speaks of the different types of plants and creepers, and different layers of soil found in different classes of land.

Another remarkable advance of the early Tamils in this science is seen in their *ability* to read the water source on the basis of the plants and animals characteristic of a particular place. Thus it was widely believed that the soil fit for the growth of banyan tree, tamarind, mango and so on might have water springs at different depths. Manuscript B contains in abundance information about the probable sources of water depending on the plants growing there. Again, it was believed that the places where white rats, scorpion, the double tongued lizard, toad and so on inhabit might have water sources, as revealed in manuscript B.

The various sorts of anthills, their form, the reptiles which live in them, the springs underneath each type, the strength and vitality of such springs, the probable differing depths of water sources in places of different anthills, the kinds of creatures which might have their existence in different layers of the source of water, the amount of labour one might give to dig wells in the respective places-all these find elaborate, vivid, graphic portrayals in these manuscripts. The Kerala university manuscripts numbered 9176 and 6356 talk of the types of

reptiles and other creatures and the different types of rocks at each layer of the earth underneath the particular type of the anthill and the probable depth of water in each of such places. And the manuscript B provides us with a technique to measure the water-depth which is a blend of astronomical and astrological calculations.

This is a fully empirically verifiable information in manuscript D with the help of which we can trace a well, now disappeared due to human or natural calamities, on the basis of certain varieties of Grass getting withered in winter and flourishing in summer; another clue is that in such places there would be a swarm of flies and ants; also anthills appearing in places where certain grassy plants grow, and such trees as *vanci* and *notci* flourishing during the hot summer season, would be sure indications of the existence of wells-now disappear in such places. What is more, when science was in its infancy in the other parts of the world during the early centuries of the Christian era, the Tamils had possessed an astonishing degree of scientific knowledge. They were capable of determining the water sources under the surface of the earth through changes in the phenomena of nature. The climatic atmosphere, the ways trees and plants adapt themselves to the different and differing seasons were some of the criteria for determining strength of the water sources.

Even though the manuscripts C and E contain extensive studies on the nature and the characteristics of the fountains of water underneath the earth's surface, they have in them more of prophetic and visionary material than of empirical data. Thus, manuscript A has references in abundance to the relatedness of these springs with the stars and the planets, and strangely enough, the E manuscript tries to harmonize the fluctuating relationships of the humans with the vitality of the springs of water; Invariably, all these manuscripts do have a pervasive atmosphere of an impressively organic blend of artistic whole-

someness and astrological perfection. Not surprisingly, works of such nature embody in them, though in a lesser degree, 'unscientific', superstitious beliefs and practices widely prevalent in those days. These convictions have in them an unmistakable things of religious atmosphere of the age in which these works were conceived. We cannot dismiss them as the off-springs of an unthinking, undeveloped civilization. As the cultural anthropology of Fraser and the 'collective unconscious' of Jung' and their illustrious followers bring out most convincingly, such rites and convictions and customs are part of the human civilization, part of the universal culture, part of the myths of mankind. Our modern Scientific, economic civilization may mask them but cannot undo them. After all, human nature itself is far beyond the scrutiny of the empirical sciences.

To conclude. The science of well-divining is but one territory which we have been able to hint at in this paper. Many such sophisticated realms of thought have found expression in the invaluable human documents which our ancient literatures really are. It is possible to construct a theory of human psychology from the Akam classics. We *can* enrich and supplement Freud's formulations on Dreams and sex from the same source. A systematic analysis of human mind on the lines of the Western philosophical works is possible from a study of Tolkappiyam and the other cankam classics. Our ancestors have left behind an inexhaustibly rich treasure in the form of literary works. What is needed is the *collective* endeavour of dedicated scholars and university teachers in unfathoming the priceless pearls which lie hidden in the depths of our aesthetic records. The uniqueness, the individuality of the Tamils lies not so much in the fertile, wholesome *literary* works as in the prophetic revelations on every field of human activity which they embody. Well-divining is one such area, as pointed out repeatedly in this article, the materials in these works cannot stand complete scientific scrutiny as they are the offsprings of *poets* whose function is certainly not to add to the scientific or philosophical wisdom of the people but to represent the 'collective unconscious' of the age. A careful exploration of which will not only contribute greatly to this and the allied sciences but also will take the already exalted culture of the Tamils to still greater heights.

# உள்ளே...


| | |
|---|---|
| முன்னுரை | III |
| Introduction | V |
| பதிப்புரை | 1 |
| நூல் அறிமுகம் | 4 |
| கூவநூல் உணர்த்தும் செய்திகள் | 7 |
| அ. கூவ சாத்திரம் | 29 |
| ஆ. கூவல் சாத்திரம் | 41 |
| இ. கூவ நூல் | 61 |
| ஈ. கூவல் சாத்திரம் | 81 |
| உ. கூப சாஸ்திரம் | 100 |
| பின்னிணைப்பு | |
| இலக்கியத்துள் கூவல் பயிலும் இடங்கள் | 113 |
| அட்டவணைகள் | 117 |
| சொல்லகராதி | 139 |

# பதிப்புரை

தமிழரின் பெருமைகள் பல ஓலைச் சுவடிகளுள் அடங்கி வெளிக்குத் தெரியாது மறைந்துள்ளன. அவற்றுள் ஒன்றே அவர் தம் அறிவுத்திறனை அறிவிக்கும் கூவ சாத்திரம் பற்றிய சுவடிகளாம். கூவ சாத்திரத்தில் வல்லோர் பலர் அன்று முதல் இன்றுவரை இருப்பினும் இதுவரையிலும் அஃது நூல்வடிவில் வெளிவரவில்லை. தமிழ் உலகிற்கு அதனைத் தரவேண்டும் என்ற நிலையில் அச்சுவடிகள் இன்று அச்சுவாகனம் ஏறி வலம் வருகின்றன.

கூவ சாத்திரம் பற்றிக் கிடைத்த 9 ஏடுகளுள் 6 கேரளப் பல்கலைக்கழகச் சுவடிகள் நூலகத்தினின்றும், ஒன்று டாக்டர். உ.வே. சாமிநாதையர் நூலகத்திலிருந்தும், ஒன்று தஞ்சை சரபோஜி மன்னரின் சரசுவதிமகால் நூல் நிலையத்தினின்றும், மற்றொன்று என் ஆசிரியப் பெருந்தகை உயர்திரு ந. சேதுஇரகு நாதன் அவர்களது சுவடிகள் சேமிப்பினின்றும் கிடைத்தன. இவற்றுள் 5 சுவடிகள் தேர்தெடுக்கப்பட்டுப் பதிப்பிக்கப் பட்டுள்ளன. எஞ்சியவற்றுள் ஒன்று, பதிப்பிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள முதல் ஏட்டின் பிரதி; ஒன்று ஒரு சில பக்கங்களே கொண்டு மீதி அழிந்துபட்டது; மற்றொன்று இடையிடையே மிகச் சிதைந்து முழுமையான கருத்தினைப் பெற இயலாவாறு அமைந்தது; ஏனையது பதிப்பிற்குக் கொண்ட ஏடுகள் கூறுவனவற்றையே கூறுவது. எனவே இவை இப் பதிப்பிற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

பதிப்பிற்கு எடுத்துக் கொண்ட சுவடிகள் பொதுநிலையில் கூவ நூல், கூவ சாத்திரம் எனப் பெயர் கொள்கின்றனவே அன்றி

சிறப்புப் பெயர் பெறாமையானும், ஆசிரியர் பெயர் பற்றிய குறிப் பின்மையானும் அவை அ, ஆ, இ, ஈ, உ எனும் குறியீட்டு வரிசைப் படுத்தப்பட்டுள்ளன.

பொது நிலையில் இச்சுவடிகள் சில கூறுகளில் ஒன்றுபட்டு அமைந்துள்ளன. அனைத்திலும் வழக்கு மொழி மிகுதியாகக் கையாளப்பட்டுள்ளது. நூலின் தன்மை இதற்குக் காரணமாக இருக்கலாம். தேவையற்ற இடங்களில் ஒற்றுகள் இடுதல், ர, ற, ல, ள, ழ, ன, ந ஆகிய வேறுபாடுகளின்றி எழுதுதல் முதலிய குறைபாடுகள் மலிந்திருந்தன. இத்தன்மை, பொருளை முழுமையாகப் புரிந்து கொள்வதில் இடர்படுத்திற்று. சரியான புணர்ச்சி விதிகள் பின்பற்றப்படாமையின் சொற்களைப் பிரித்து, கூறவந்த கருத்தினை விளங்கிக் கொள்வதும் கடினமாயிற்று. இயன்றவரையில் இத்தவறுகள் நீக்கப்பட்டு, இயலா இடங்கள் அவ்வாறே கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றாலும் இவை போன்ற குறைபாடுகளாலும் கூவ சாத்திரம் பற்றிய முன்நூல்கள் இன்மையாலும் இப்பதிப்பில் சில விடங்களில் தவறுகள் இருக்கலாம்.

நிலத்தில் நீராழங்களைக் கணக்கிடும் பொழுது அவற்றின் கூட்டல் தொகை தவறாகப் பலவிடங்களில் அமைந்திருந்தது. அவை திருத்தம் செய்யப்பட்டுள்ளன. வழக்கு மொழிகள் அவ்வாறே கையாளப்பட்டுள்ளன. செய்யுள் நடையில் இருப்பினும் பாடுபொருள் அறிவியலைச் சார்ந்ததாக அமைவதாலும், வலிந்து பற்றும் எதுகை, மோனைகளாலும், பொருளற்ற அடைகளாலும் இலக்கிய இன்பம் நல்குவதை இவை இழந்துள்ளன.

தெளிவிற்காக, ஆ, இ, ஈ எனும் மூன்று ஏடுகள் சில பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இயன்றவிடங்களில் உட்தலைப்புகள் இடப்பட்டுள்ளன. தெளிவாக அமைந்துள்ள பகுதிகளுக்கு அட்டவணைகள் தரப்பட்டுள்ளன. இச்சுவடிகளிலிருந்து அறியவரும் செய்திகள் 'கூவ நூல் உணர்த்தும் செய்திகள்' எனும் தலைப்பின் கீழ்த் தொகுத்தளிக்கப்பட்டுள்ளன. இவனுள் இயன்றவிடங்களில் விடுபட்டுள்ள ஏடுகளின் எண்ணங்களும் இணைக்கப் பட்டுள்ளன. ஏடுகள் எண்களைத் தமிழ் வடிவில் பயன்படுத்தியிருப்பினும், அனைவருக்கும் புரியவேண்டும் எனும் நோக்கில் இன்றைய வழக்கு வடிவமே பின்பற்றப்பட்டுள்ளது.

நூலமைப்பில் முதலும் முடிவும் ஒழிய ஏனையவற்றில் ஓர் ஒழுங்கு முறை பின்பற்றப்படவில்லை. சோதிடவியலின் இணைப்பினால் அக்கலையினையும் அறிந்தே முழுமையாக உணரமுடியும். இப்பதிப்பு உரையற்ற இடங்களில் உரையுடனும், பொருள் மறைந்துள்ள பகுதிகளில் பொருட் தெளிவுடனும், மற்றும் தேவையான திருத்தங்களுடனும் விளக்கங்களுடனும் மீண்டும் வெளியிடப்படும். அதற்கு முன்னோடியாகவே இப்பதிப்பு ஓர் அறிமுகம் என்ற நிலையில் வருகிறது.

# நூல் அறிமுகம்

## அ

திருவனந்தபுரத்தில் உள்ள கேரளப் பல்கலைக் கழகச் சுவடிகள் நூலகத்தின் 6349 எனும் எண் உள்ள ஏடு இது. இந்நூல் காப்புச் செய்யுள், 32 பாடல்கள், அவற்றிற்கு உரை ஆகியன கொண்டது. உரை விரிவுரையாக அமைந்துள்ளது. கூவ சாத்திரத்தினைப் பற்றி அறிய இது பெருமளவு துணைபுரிவதுடன் எளிமையாக இருப்பதால் முதலாவதாக அமைந்துள்ளது. திசைப் பலன், புறத்தோற்றம், தொடுகுறி, புற்றுக்கரு, நில அமைப்பு, நீராழம், கிரகபலன், இராசிபலன் எனும் நிலையில் நூல் அமைந்துள்ளது. நூலின் இறுதியில் சந்திர கீர்த்தி முற்றும் என்று குறிக்கப்பட்டுள்ளது.

## ஆ

இது சரசுவதி மகால் நூல்நிலையத்தில் 1098 எனும் எண்ணுள்ள ஏடாகும். இதனுள் பாடலும், உரைநடையும் விரவி வந்துள்ளன. பாடல்களுக்கு உரையும் உண்டு. இந்நூல் 3 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முதல் பிரிவில் திணைப்பகுப்பு, நில வகைகளின் தன்மை, நிலக்கரு, புற்றுக்கரு, தொடுகுறி, கிரக பலன் ஆகியன பற்றிப் பேசப்பட்டுள்ளது. பிற ஏடுகளை விட இங்கு விரிவாக நிலத்தில் வாழ் பிராணிகள் கொண்டும் நிலத்தின் இயல்பு இயம்பப்பட்டுள்ளது. இங்கு அமையும் பாடல்கள் அந்தாதித் தொடை பெற்றுள்ளன. இரண்டாம் பிரிவில் கீழ்நீர்சல்லியம், கிரக ராசிகளின் அடிப்படையில் விளக்கப்பட்டுள்ளது. தொடுகுறியும் உண்டு. இதில் உள்ள ஆற்றுக்கிடை எனும் பகுதி பிறவற்றில்

இல்லாததாம் இவ்விரு பகுதிகளில் காணப்படும் கவிட்பு, கதிர், உதைய வீதி போன்றவற்றிற்கான விளக்கங்களை இறுதிப்பகுதி தருகிறது. முன்னிரு பகுதிகளிலும் முற்றும் எனும் குறிப்புக் காணப்பட இறுதிப்பகுதியில் அஃதின்மையால் நூல் முடிவு பெற வில்லை போலும்.

இ

பேராசிரியர் சேதுரகுநாதன் அவர்களின் ஏடு மூன்று ஏடுகளின் தொகுப்புப் போன்று அமைந்துள்ளது. பாடல்களை விட உரைநடையே மிகுதியாக உள்ளது. இதன் பின்பகுதி கூறியது கூறலாகவும், தெளிவின்றியும் அமைந்திருப்பதால் விடப் பட்டுள்ளது. முதல் பிரிவில் ராசியுடன் இணைத்துத் தொடுகுறி விளக்கப்பட்டுள்ளது. புற்றுக்கருவுடன், முல்லை, முல்லையில் பாலை, முல்லையில் நெய்தல் என மிக விரிவாகத் திணைப் பிரிவுகளும் விளக்கப்பட்டுள்ளன. ஓரிரு இடங்களில் வடமொழி காணப்பட்டது. அவை இங்குத் தவிர்க்கப்பட்டுள்ளன. கும்ப முனிவனார் இயம்பியதாகக் கூறப்படும் இந்நூலின், இரண்டாம் பிரிவில், பழங்கிணறு, கோரைநிலம் முதலான சில புதிய நிலப் பிரிவுகள் ஆகியன குறிப்பிடத்தக்க நிலையில் உள்ளன. மற்றும் கிணற்றுத் திசைப்பலன், தொடுதறி ஆகியனவும் உண்டு. கிணற்றுத்திசைப்பலனின் முதலிரு பாடல்கள் அ ஏட்டிலும் உள்ளது. இறுதிப்பகுதியில் ராசிகளுக்குரிய கதிர், நிலம், பார், ஆழம் முதலியன புதியனவாகக் கூறப்பட்டுள்ளன. ஊற்றுகள் சிறப்பாக விளக்கம் பெற்றுள்ளமையுடன், கிணறு தோண்டுதற் குரிய நல்ல காலங்களும் வேண்டாத பொழுதுகளும் தரப்பட்டுள் ளன. இந்நூல் பல புதிய செய்திகளுடன், விளக்கமாகவும் அமைந் துள்ளது எனினும் முறை வைப்பில் குழப்பத்தையும் கொண்டது. இயன்றவரையில் அது தவிர்க்கப்பட்டுள்ளது. பலரது எண்ணங் களின் தொகுப்பு இவ்வேடு என்பது மிகத் தெளிவாகப் புரிகிறது.

ஈ

கேரளப் பல்கலைக் கழகத்தின் சுவடிகள் நூல் நிலையத்தின் 1140: எண் உள்ள ஏடு. முன்னது போன்றே இதுவும் பலரது கருத்துகளின் கோவையாக அமைந்துள்ளது. மயமகன் உரைத்த நூல், நயனவன் உரைத்த நூல் எனக் குறிப்பிடும் இந்நூல் நான்காகப் பகுக்கப் பட்டுள்ளது. காப்பும் உண்டு. முன்பகுதி

முழுமையாக ராசி, கோள்களின் அடிப்படையில் செய்திகளைத் தருவதால் புரிந்து கொள்ளுதல் மிகக் கடினம். அடுத்த பிரிவில் உடல் உறுப்பு கொண்டும், ராசிகள் கொண்டும் தொடுகுறியைக் கூறுகிறது. மற்றும் கிரகங்களின் நோக்கம், உதயமான ராசி யினால் பலன், பூமிச்சல்லியம் ஆகியவற்றையும் தருகிறது. நிலப் பகுப்பிற்கு ஏற்ப நிலக்கருவையும் புற்றுக்கருவையும் தந்துள்ளது. மூன்றாம் பகுதி ராசி, கோள் கொண்டு புதிய முறையில் நில விளக்கம் அமைகிறது. இறுதிப்பகுதியும் பிறிதொரு வகையான நில விளக்கத்தை நல்குகிறது. நூலின் இறுதியில் அபூர்த்தி என்றுள்ளது.

உ

இதுவும் கேரளப் பல்கலைக்கழகச் சுவடிகள் நூல் நிலைய ஏடே. இதன் எண் 8202. கணபதிக்குக் காப்புடன் 75 பாடல்கள் கொண்டது. இறுதிப்பாடல் சிதைந்துள்ளது. இந்நூலிலும் வேத முனிவர் இயம்பினார் எனும் குறிப்புளது. மகடூஉ முன்னிலை ஆங்காங்கே காணப்படுகிறது. இங்கு நிலவகை விளக்கத்தில் அதன் படி நிலைகள் பற்றிய குறிப்பில்லை. ராசிகளுக்கும், கோள்களுக்கும் கூட நீர் காணும் இடம் அளவிடப்பட்டுள்ளது. இந்நூல் சாதாரண நிலப்பகுப்புடன் மிளகுபாலை என்ப தனையும் இணைத்துள்ளது. பிறிதொரு நிலையில் நிலத்தைப் பகுத்துள்ளது. அதன் அடிப்படை தெளிவு பெறவில்லை, ஊற்றுகள் பற்றி விளக்கமாகக் கூறியிருப்பினும் அதன் நிலையும் அஃதே. தொடுகுறி பற்றியும் பேசுகிறது. இந்நூலின் பெரும்பகுதி விளக்கமுறா விடினும் பல புதுமைகளைத் தன்னுள் கொண்டிருப் பதால் இவண் இணைக்கப்பட்டுள்ளது.

# கூவநூல் உணர்த்தும் செய்திகள்

## முன்னுரை

தமிழர், தொன்மை வாய்ந்தோர் என்ற பெருமையுடன் தொன்றுதொட்டே பல கலைகளிலும் வல்லுநராய் விளங்கினர்; இன்றும் அச்சிறப்புடன் திகழ்கின்றனர் எனும் புகழினையும் பெற்றுள்ளனர். இசை, நாட்டியம், நாடகம், சிற்பம் போன்ற அழகுக் கலைகளிலும், நுண்கலைகளிலும் சிந்தனையைச் செலுத்திய அதே பொழுதில் மருத்துவம், வானியல், கட்டடக் கலை, நெசவுக் கலை முதலானவற்றிலும் மிகுந்த தேர்ச்சி பெற்றுள்ளனர். அவர் தம் அறிவுத் திறனை வெளிப்படுத்தும் கருவிகளில் ஒன்றாகக் கூவ சாத்திரமும் அமைகின்றது. இதனுள் ஓரளவு மரபு பற்றிய நம்பிக்கைகள் இடம்பெறினும் பெருமளவு அறிவியல் கண்ணோட்டமும், சோதிடமும் முக்கியத்துவம் பெற்றுள்ளமையைக் கிடைக்கும் கூவ நூல்கள் உணர்த்துகின்றன.

## கூவ சாத்திரத்தின் பழமை

பழந்தமிழர் வழிப்போக்கர்களுக்கும், கால்நடைகளுக்கும் உதவும் பொருட்டு வழித்தடங்களில் கூவம் தோண்டி வைத்திருந்தமையைச் சங்கப் பாக்கள் சுட்டுகின்றன (நற்றிணை 240; புறநானூறு 306). கிணறு வெட்டுவதற்கு வல்வாய்க் கணிச்சியையும், நீர் இறைப்பதற்குக் கொடுவாய்ப் பத்தலையும் பயன்படுத்தியமையை அகநானூறு (22, 155) காட்டும். 'உண்ணு நீர் கூவல் குறைவின்றித் தொட்டானும் ....சாவா உடம்பு எய்தினார்' (14)எனும் திரிகடுகத்தின் கூற்று, பொதுக்கிணறு அமைப்பதனைச் சிறந்த அறமாகக் கொண்டமையைப் புலப்படுத்துகிறது. கூவநூல்

வல்லோரை உல்லியர் என்று திவாகரமும், சல்லியர் என்று கயாதர நிகண்டும் உரைத்திருப்பதன் மூலம் பல கூவநூல்கள் அக் காலத்தில் சிறப்புற்றிருந்தமையை உணரலாம்.

## சொல்லாய்வு

கூவல், அசும்பு, கூபம், குழி, பூவல், கேணி, துரவு என்பவற்றைக் கிணற்றினை உணர்த்தும் சொற்களாகத் திவாகரம் தருகிறது (5.65). கூவல், கூவம், கேணி என்பன இலக்கியத்திலும், வழக்கிலும் மிகுதியான பயிற்சியுடையனவாக அமைகின்றன. சங்கஇலக்கியத்தில் கூவல் எனும் சொல்லே காணப்படுவதால் கூவம், கூபம் என்பன பிற்காலவழக்கு எனத் துணியலாம். கூவல் எனும் சொல்லில் கிணறு எனும் பொருளுடன் (கூவலன்ன விடரகம் புகுமின் — மலைபடுகடாஅம் 366), நீர்நிலை (அரிது உண் கூவல் அம் குடிச் சீறூர் - புறநானூறு 306), பள்ளம் (கூவற்றுழந்த தடந்தாள் நாரை— பதிற்றுப்பத்து 51) என்ற பொருள்களும் இடம் பெறக் காண்கிறோம். சங்கப் பாக்களில் கூவல் பற்றிய செய்திகள் வரும் இடங்களை நோக்குகையில் அது இன்று நாம் காணும் கிணறுகள் போன்று ஆழமின்றி இருத்தல் புலப்படுகிறது. ‘அவர் நாட்டு உவலைக் கூவல் கீழ் மான் உண்டு எஞ்சிய கலுழி நீரே’ எனும் ஐங்குறுநூற்றின் கூற்று (203) ஆழமற்ற குழிகளையே எண்ணச் செய்கின்றது. எனவே சங்க மக்கள் நீர் தரும் கிணற்றினைப் பள்ளம், நீர்நிலை எனும் பொருள் நோக்கில் காரணப் பெயராக அமைந்தனர் எனக் கொள்ளலாம்.

கூவம் என்ற சொல்லைக் கூ + அம் என்று பிரித்து, கூ என்பது பூமியையும் அம் என்பது நீரையும் உணர்த்த, பூமியில் உள்ள நீரான ஊற்றுநீர் என்று பொருள் கொள்ளலாம். வடமொழியில் கிணற்றைக் குறிக்கும் கூபம் என்ற சொல்லே தமிழில் கூவம் என்று வழங்குகின்றது என்ற கருத்தும் உண்டு. கூவம் என்ற சொல் இலக்கியத்துள் முதன்முதலாகக் கம்பனில்தான் ஆளுமை பெற்றுள்ளது.

மேல் + நிலை > மேனிலை என்றவாறு போல, கூவல் + நூல் > கூவனூல் என்றும், அறம் + நூல் > அறநூல் என்பது போன்று கூவம் + நூல் > கூவ நூல் என்றும் சுட்டும் இரு வழக்குகள் கூவ சாத்திரத்தைக் குறிக்கப் பயன்பட்டுள்ளன. சல்லியம் என்பது பூமிக்குக் கீழ் இருப்பனவற்றை அறிவிக்கும் ஆருடம் எனும்

நிலையில் அதனில் வல்லோர் சல்லியர் எனப்பட்டார் எனலாம். உல்லியம் என்பதும் கிணற்றைக் குறிக்கும் சொல் ஆதலின், அக் கலையில் தேர்ந்தோர் உல்லியர் என்றும் குறிக்கப்பட்டனர்.

## கூவநூலின் தோற்றம்

நாட்டுப்புறக் கலைகளுள் ஒன்றாகக் கூவசாத்திரம் இன்று விளங்குகின்றது. கிடைத்துள்ள ஏட்டுச் சுவடிகளில் வழக்கு மொழி அதிகமாகப் பயன்படுத்தப் பட்டுள்ளதாலும், 18, 19-ஆம் நூற்றாண்டினைச் சார்ந்ததாக அம்மொழிநடை தோற்றம் தருவதாலும், வழிவழியாக வாய்மொழியில் வழங்கப்பட்டு இந்நூற்றாண்டுகளில் ஏட்டில் இடம் பெற்றிருக்கலாம எனக் கருத வாய்ப்புண்டு. சித்த மருத்துவக் கலை எவ்வாறு ஆரம்ப காலத்தில் ஏட்டில் இடம் பெறாது ஒருவரிடமிருந்து மற்றவர்க்கு, பிறர் அறியாவாறு உணர்த்தப்பட்டு வந்ததோ அஃதே போன்று இக்கலையும் வழங்கி வந்திருக்கலாம். இறையனார் அகப்பொருளின் தோற்றம் பற்றிய சிந்தனையும் இவண் இணைத்து நோக்குதற்குரியது. சல்லியம் என்பது பூமிக்குக் கீழ் இருப்பனவற்றை அறிவிக்கும் ஆருடம், மாயவித்தை எனும் பொருள்கள் கொண்டிருப்பதாலும், சல்லியர் என்பது மாயவித்தையில் வல்ல சாதியார் எனக் குறிப்பிட்ட இனத்தவரைச் சுட்டுவதாலும், கூவநூல்களில் சோதிடம் முக்கியமானதொரு இடத்தைப் பெற்றிருப்பதாலும், அவ்வப் பகுதிகள் சோதிடம் அறிந்தாருக்கே எளிதில் புலனாகும் தன்மை பெற்றிருத்தலாலும் மேற்கண்ட கருத்து வலுப்பெகிறது ஒரு நூலை அகத்தியர் யாத்தார் எனக் குறிபபிடுவது தமிழ் மரபே ஆயினும், இக்கூவ சாத்திரம் நவிலும் நூல்களும் அதனைப் பின்பற்றியுள்ளமை இங்கு அக்கருத்திற்கு அரண் செய்வதாகக் கொள்ளலாம். கிடைக்கும் கூவநூல்கள் எவற்றிற்கும் ஆசிரியர் பெயர் அறியப் படாமையும் நினைவிற் கொளற்பாலது.

## கூவநூலின் அமைப்பு

ஒவ்வொரு நிலத்தின் நில அமைப்புக்கு ஏற்ப நீர் கிடைக்கும் விபரம் அந்நீரின் தன்மை, நிலத்தில் வளரும் மரபு,செடி,கொடிகள் கொண்டு நீர் உள்ள இடத்தை ஆராய்தல், நீர் கிடைக்கும் இடங்களில் உள்ள புற்றுகளின், ஊறுகளின் இயல்பினைக் காட்டல், நிலத்தில் உள்ள நீருக்கும், ராசி, கோள் இவற்றிற்கும் உள்ள தொடர்பு, தொடுகுறி ஆகியன கூவல் சாத்திரத்தின் முதன்மைக்

கூறுகளாக அமைகின்றன. இங்கு உணர்த்தப்படும் குறிப்புகள் சிறப்புநிலையில் கிணற்றிற்கு அமையினும் பொதுநிலையில் குளம் போன்ற நீர்நிலைகளையும் கருத்துட்கொண்டே அமைந்துள்ளன. கிணறு வெட்டுவதற்குரிய நற்பொழுதுகளைக் கூறும்பொழுது அ-ஏடு 'குளம் குழி கூவல் நன்றே' என்று கூறயிருப்பதுவே இவ் வெண்ணத் தோற்றக் களனாகிறது.

## நிலப்பகுப்பு

பண்டைத் தமிழர் மரபான ஐவகை நிலப்பாகுபாட்டினைக் கூவநூல்கள் தம் நிலப்பகுப்பிற்கும் ஏற்றுக் கொண்டுள்ளன. நிலத்தில் உள்ள மண்ணின் தன்மை கொண்டு அது குறிஞ்சி, முல்லை, மருதம் எனப் பகுத்துணர்த்தப்படுகிறது. பாறைகள் நிரம்பிய இடம் குறிஞ்சி, பெருமணலாய் உள்ள இடம் நெய்தல், இளம் பார் (பாறை) நிறைந்த இடம் முல்லை, சேறு நிறை பகுதி மருதம், வெள்ளைச் சாலோடை பாலை என்பது பொதுவான கருத்து. குறிஞ்சிநிலம் சிவப்பு நிறமுடையதாகவும்,பாலை வெளுப்பாகவும், முல்லை கறுப்பாகவும், மருதம் மணலாகவும், நெய்தல் நீர்க்கசிவுடனும் காணப்படும் எனும் எண்ணமும் உண்டு (ஆ-I, ஈ-III).

முல்லை வெண்ணிறம், குறிஞ்சி கல்லுடையது, மருதம் களிமண் பெற்றது, நெய்தல் உவர்மண் நிலம், பாலை சிவப்பு என்று 'இ' ஏட்டின் முன்பகுதி முரண்பட்ட விளக்கத்தை நல்குவதுடன் முல்லை செந்நீரும் ஊற்றுமாகத் திகழும், பாலை வெண்ணீராகவும் 7மாற்று பெற்றும், குறிஞ்சி நீர் கறுப்பாகவும், மருதம் நல்நீராகவும், நெய்தல் 6 (?) மாற்று பெற்று உப்பு நீராகவும் அமையும் என்றும் நிலவகைகளின், நீரின் இயல்பினை இயம்புகின்றது.

குறிஞ்சி நிலம் துவர்ப்பாயுள்ள சிவப்பும், சரிசலும், வெளுப்பும் தோன்றியிருக்கும்; பாலை வெளுப்பு நிறமாக மண்ணும் சாம்பலும் கொண்டிருக்கும்; முல்லை நிலத்தில் கரிசலாக நாங்குள் மண்ணும், குளர்மண்ணும் எழும்பியிருக்கும்; நெய்தல் பளிங்கு நிறமாக இருப்பதுடன், அதன் மண்ணைத் தெள்ளிப் பார்க்கில் பொன்னிறமாகவும், வெள்ளைச் சன்னம் போலவும் இருக்கும்; மருதம் பரு மணல் உடையதாயிருக்கும் எனும் குறிப்பும் காணப்படுகிறது (அ-17, 19, 21, 23, 25).

இஃதன்றி ஈ ஏடும் உ ஏடும் நிலப்பிரிவுகளின் அமைப்பினை, அவற்றின் தனித்த இயல்புகள், அவற்றிற்குரிய மரக்கரு, புற்கரு,

புற்றுக்கரு அங்குக் கிடைக்கும் நீரின், கிணற்றின் இயல்பு என விளக்கமாகத் தந்துள்ளன. உ ஏடு ஐவகையுடன்'மிஞகு பாலை' என்பதனையும் இணைத்திருப்பது சுட்டத் தக்கது. இவற்றை அட்டவணை 1,2-இல் தெளிவாகக் காணலாம்.*

கிணற்றிற்காகத் தேர்ந்தெடுத்த நிலப்பகுதியைத் தோண்டத் தோண்ட ஒவ்வொரு வகை நிலத்தின் உட்தோற்றமும் வேறுபாடுடையனவாய் அமைகின்றன. சான்றாகக் குறிஞ்சியில் மண் கண்டம் 6சாண்,அதன்கீழ் கரிசல் 2 சாண்,வெள்ளைப்பார் 8 சாண், கொப்பரைக்கல் 3 சாண்,கருமையான அப்புப்பார் 4 சாண், நாவரிக்கல் 10 சாண் என ஒவ்வொன்றாக அமைந்திருக்கும். இதுபோன்று பாலையில் முதலில் வெண்ணிற மண்ணும் சாம்பலும் 5சாண், பின் வெள்ளைப்பார் 6 சாண், கொப்பரைக்கல் 6 சாண், முத்துக்கல் 3 சாண், பொன்னிற அடுக்குக் கல் 9 சாண் முதலியனவும் கொண்டிருக்கும். இவ்வாறு ஒவ்வொரு நிலமும் கொண்டுள்ளன. இவ்வரிசை படிநிலையாகக் குறிக்கப்பட்டு அட்டவணைகளில் விளக்கப்பட்டுள்ளது. இவ்வளவு முறைகள் ஒவ்வொரு ஏட்டிலும் அதனதன் கருத்திற்கு ஏற்ப வேறுபாடு கொண்டுள்ளன. இந்நில வகைகளின் உள்ளமைப்பினையும், ஏடுகளின் வேறுபாட்டினையும் அட்டவணை 3 முதல் 7-இல் காணலாம் ஒரே ஏடு இருவித விளக்கங்களைத் தரின் அவை 1, 2 என்று தனித்தனி நிலையில் அவ்வேட்டின் கீழ் உணர்த்தப்பட்டுள்ளன. இக்குறிப்பு பின்வரும் அட்டவணைகளுக்கும் ஏற்புடைத்தாகும். ஆ, உ ஏடுகள் இவ்விளக்கத்தினைத் தரவில்லை. எனவே உ ஏடு தரும் புதிய நிலப்பிரிவான மிஞகு பாலையின் உள்ளமைப்பினை அறிய இயலவில்லை.

நிலத்தினை வெட்டும்பொழுது அது எவ்வகை நிலத்தைச் சார்ந்ததோ அதற்கேற்ப நீர் கிடைக்கும் ஆழமும் வேறுபடுகின்றது. பூமியின் மேல் மட்டத்திற்கும் நீர் கிடைக்கின்ற பகுதிக்கும் இடைப்பட்ட பகுதியினைப் பற்றிய விளக்கத்தினையே மேற்சுட்டியுள்ள குறிப்புகள் காட்டுகின்றன. குறிஞ்சியில் 33 சாணின் கீழும், பாலையில் 30 சாணிலும், முல்லையில் 36 சாணிலும், நீர் நெய்தலில் 35 சாணிலும், மருதத்தில் 22 சாணிலும் நீர் வரும் என அ-ஏடு குறிக்கிறது. இவ்வளவு முறை பிறவற்றினின்றும் முரண்படுவதை அட்டவணை-8 காட்டுகிறது. இம்முரண்பாட்டிற்கு, ஏடுகளின் பிறப்பிடம் காரணம் என அமைதி கொள்ளலாம்.

---

* அட்டவணைகள் பின்னிணைப்பில் இணைக்கப்பட்டுள்ளன.

இ-ஏடு தன் முன்பகுதியில் இப்பகுப்பு முறையை, முல்லையில் பாலை, முல்லையில் குறிஞ்சி, முல்லையில் மருதம், முல்லையில் நெய்தல், பாலையில் குறிஞ்சி, பாலையில் மருதம், பாலையில் நெய்தல், பாலையில் முல்லை, குறிஞ்சியில் மருதம், குறிஞ்சியில் நெய்தல், குறிஞ்சியில் முல்லை, குறிஞ்சியில் பாலை, மருதத்தில் நெய்தல், மருதத்தில் பாலை, மருதத்தில் குறிஞ்சி, நெய்தலில் முல்லை, நெய்தலில் பாலை, நெய்தலில் குறிஞ்சி, நெய்தலில் மருதம் என மேலும் மிக விரிவாகப் பிரித்துள்ளது. இப்பிரிவுகளுக்கும் அவ்வவ் நில அமைப்பின் படிநிலைகள், நீராழம் இவற்றுடன், சிறப்புச் செய்தியாக நீரின் இயல்பு, ஊற்று அமைப்பு முதலானவற்றையும் ராசிகளுடன் இணைத்துப் பேசியுள்ளது. அவையாவும் அட்டவணை 9 முதல் 13 வரையில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

இவ்விரிந்த பகுப்பு முறையினை டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல்நிலைய ஏடும், சேரளப் பல்கலைக் கழக 6356 எனும் எண் உள்ள ஏடும் சுட்டியுள்ளன. இ-ஏட்டில் மருதத்தில் முல்லை எனும் பிரிவு மட்டும் சுட்டப்படவில்லை. அஃது விடுபட்டுள்ளதா அன்றி அதன் ஆசிரியருக்கு அப்பிரிவில் உடன்பாடில்லையா என்பது புலப்படுமாறில்லை. இவ்விரு ஏடுகளும், 'மருதத்தில் முல்லை பாவது வெள்ளையும், சிகப்பும், கறுப்பும் என மூன்று நிறமாக இருக்கும். அதன் படிநிலைகளில் முதலாவதாக மண்கண்டம் 6 சாண், அதன்கீழ் நாகவரிப்பார் 11 சாண், மாங்கொட்டைப்பார் 8 சாண் எனும் அளவுகளில் அமைத்து நீரின் தோற்றம் 25-வது சாணில் அமையும்' என நவின்றுள்ளன. துலாம் விருட்சகத்தில் பேருத்தாம், பதினைந்து துலாத்தில் வற்றாத தண்ணீர் கிடைக்கும் என டாக்டர் உ.வே.சா. நூல் நிலைய ஏடு உணர்த்த, சேரளப் பல்கலைக் கழக ஏடு 5 துலாவிற்கு நீர் கிடைக்கும் என இயம்புகின்றது. முன்னது பாடல் அமைப்பும் பின்னது உரைநடையமைப்பும் கொண்டது.

இ - ஏட்டின் மூன்றாம் பகுதியில் கோரைநிலம், கொன்றை நிலம் எனும் இரு புதுவகைகளும் காணப்படுகின்றன. கோரை நிலம் கற்கரடு, கருமலை, ஆரணி, உவர்பொட்டல், அளிமண், உப்புமண் கொண்டதாக இருக்கும். அதில் கொம்மட்டி, நரியிலந்தை, அம்மான் பச்சரிசி என்ற சித்திரப் பாலாடை (சிற்றிலைப் பாலாடை), சீதேவி, செங்கழுநீர், தொட்டக்கால்

வாடி, செந்தட்டி, நிலவாகை, வறட்டாரை, ஓரிதழ்த்தாமரை (ஓரிலைத் தாமரை) இலைக்கள்ளி முதலியன காணப்படும். இதில் உருண்டைச்சரல் 11 சாணுக்கும், பொருமண் பார் 7 சாணுக்கும் அமையும் நிறைந்த கசிவுடைய பூமியாகும்.

களிமண்ணும், உவர்ப்பொட்டலுமாக அமைந்தது கொன்றை நிலமாகும். இதன்கண் உப்பறுகு, கண்ணுப் பூளை,கரு ஊமத்தை, வேலிப்பருத்தி, வெண்கோவைத்தண்டு, மாவிலங்கு, கிரந்தி, நரி இலுப்பை, கானாங்கள்ளி, நாய்கொட்டான் செடி ஆகியன வளர்ந்திருக்கும் வேனில் நண்டுக் குழிமண்ணும் காணப்படும். இதற்கு மண்கண்டம் 3 சாண், அற்பச் சுக்கான்பார் 3 சாண்,கோழி முட்டை வெள்ளைப்பார் 3 சாண், குங்குமப்பூப் பார் சாண் 6 என உள்ளமைப்பு அமையும். இதுவும் நிறைந்த கசிவுடையதுவே.

ஐவகை நிலப்பகுப்பில் பாலை, முல்லை, மருதம் எனும் மூவகையும் சிறப்புடையன எனக் கருதப்படுகிறது ஈ - ஏடு, இவ்வைவகை நிலங்களுக்கும் தனித்தனியாக நாள், ராசி, கிழமை முதலானவற்றைச் சிறப்பித்துரைப்பது குறிப்பிடற்பாலது. அவ்விளக்கங்களை அட்டவணை 14-இல் நோக்கலாம்.

## நிலக்கரு

நிலத்தின் புறத்தோற்றத்தினைக் கொண்டே இந்நிலத்தில் நீர் இருக்கும் அல்லது இருக்காது என்பதனை அறிய அங்கு வளரும் தாவரங்களையும், பிராணிகளையும் பயன்படுத்தியுள்ளனர். பெரிய மரங்களை மரக்கரு என்றும், பிற தாவரங்களைப் புற்கரு என்றும் பாகுபடுத்தி அவை பற்றிய விளக்கங்களையும் நல்கியுள்ளனர்.

ஆல், அத்தி, பாற்கொடி, மருது, இலுப்பை, வஞ்சி, மா, புளி, நொச்சி, இத்தி, பாலை, புங்கு முதலிய மரங்கள் உள்ள இடங்களிலும், வெண்புல், கரும்புல், கருஞ்சடைப் புல்லு, செங்கோலறுகு குறுந்தொட்டி, தெர்ப்பை, சிறு பீளை, சார(ற)ணை, கோரை, பொடுதலை, நாயுருவி, காக்கணம், எருக்கு, பிராய், கரும்பூலா இவை உள்ள இடங்களில் நீர் இருக்கும் என்பது பொதுவான கருத்து.

இக்கரு வகைகளை எது, எவ்வகை நிலத்திற்கு உரியது எனப் பாகுபடுத்துவாரும் உளர். அறுகு, தெர்ப்பை, கஞ்சாங்கோரை,

குறுஞ்சடைப்புல்லு, கோரை, கூத்தான், பீளை, குறுந்தட்டி, வெட்பூலா, கடப்பூலா, நீர்ப்பூலா, வேம்பு, கரந்தை, பொடுதலை, பஞ்சாத்திப் புல்லு, சாரணை, நாயுருவி, குறுஞ்சடைபுல்லு, செங்கோரை, மாவிலங்கு, இலை மருதத்திற்கும், உவ்வா, நீலுப்பை, நொச்சி, மாவிலங்கம் புங்கு ஆகா சல்லத்தி ஆகியன மலைக்கும்; பாலை, பூளை, ஆத்தி, வஞ்சி, அரசு முதலானவை முல்லைக்கும் உரித்து என ஈ-ஏட்டின் இரண்டாம் பகுதியியம்பும். குறிஞ்சியிலும், நெய்தலிலும் நீர் மிகவும் குறைவாதலின அவற்றின நிலக்கரு பற்றி இப்பகுதி பேசவில்லை. ஐவகை நிலங்களுக்கும் உரிய நிலக்கரு பற்றி இவ் ஏட்டின் நான்காம் பகுதியும், உ-ஏடும தருவன அட்டவணை 1,2-இல் காட்டப்பட்டுள்ளது.

நிலவகைகளுக்கு நீர் ஆழம் கணக்கிட்டது போன்று சில வகைத் தாவரங்கள் இருக்கும் இடத்திற்கும் குறிப்பிட்டிருப்பது சுட்டத்தக்கது. பிராத்தி இரண்டு நின்றால் 3 முழத்தினில் ஓடை தோன்றும் அதன்கீழ் 7 முழத்தினில் குமிழியுடன் பெருநீர் காணப்படும். வெள்ளெருக்குத் தனியே நின்றால் அவ்விடத்தில் 3 முழத்தினில் ஓடை தோன்றும். 4 முழத்தில் தேரை தோன்றும் அதிகத் தண்ணீரும் உண்டாகும். நவ்வல் நிற்பின் முழம் 3-இல் கசிவுப்பர் காணப்படும். அதன் கீழ் 5 முழத்தில் வெகுநீர் கிட்டும் புங்கு அல்லது பூலா நின்றால் 3 முழத்தில் கசிவு தென்படும் 5 முழத்தில் பெருநீர்க் கேணியாகும் (ஆ. 4-7).

சீதேவி, எருக்கு, கோரை, செங்கழுநீர், நாயுருவி, கரும்புல், பொடுதலை, நெய்க்கொட்டான் இவைகள் எந்நிலத்தில் காணப்படினும் அங்கு ஐயமின்றித் தோண்ட 3 முழத்தில் நீர் உண்டு: பிறு என்னும் செடிகள் சூழ்ந்த நிலத்தில் 9 முழத்தில் ஓடை உண்டு; இச்செடி சில இடங்களில் பருக்கை என்றும் வழங்கப்படும். மேற்கூறிய ஓடையின் கீழ் ஒரு முழத்தில் பேருற்று உண்டு; நீர் உள்ள இடத்தை உணர்த்தும் மரக்கரு உள்ள இடங்களில் கூவம் தோண்டுதற்குரிய நாளை உணர்ந்து தோண்ட எப்பொழுதும் மாறாமல் நீர் ஊற்று உண்டு எனும குறிப்புகளை இ-ஏட்டின் முதற்பகுதி தருகிறது.

மேலும், ஆல், அத்தி, சாரணை, பொடுதலை, களருப்புல், பால்சொட்டி, தவசி, முருங்கை, விஷ்ணுகிரந்தி, புலிமடல் முதலிய பூடுகள் முளைத்த இடத்தில் தோண்ட வெண்பார், கரும்பார்,

செம்பார், அப்புப்பார் ஆகியன தோன்றும். அங்கு 4 முழத்தில் தவளை தோன்றும். கருமணல், செம்மணல் கலந்திருக்கும். அதன்கீழ் 3 முழத்தில் சேறும், நீரும், வெண்பாரும், கரும்பாரும் கலந்து தவளையுடன் காணப்படும். கீழே...வரால் மீனும், நெரி மணலும் தோன்றும் அம்மீனை எடுத்துப் பால் தெளித்துப் புதைத்தல் வேண்டும். அதன்பின் தோண்டுதலைத் தொடர தென்திசையில் நல்ல நீர் உண்டாகும் என்ற கருத்தும் உள்ளது.

நிலத்தின் மேற்பரப்பில் சிலந்தி படர்ந்திருக்குமானால் 3 முழத்தில் நீர் தோன்றும்; வெள்ளெலி, தேரை, உடும்பு, ஓந்தி யிவை ஊருமானால் அந்நிலத்தில் 5 முழத்திற்குள் அதிகமான நீர் வரும்; செம்பாம்பு காணப்படுமானால் 3 முழத்தில் நீர் தோன்றும்; வெள்ளெலி, தேள், உடும்பு, மான்றி,வலக்காலி இவை சஞ்சரிக்கும் இடத்தில் 3 முழத்தில் பெருநீர், வாழு மிடமானால் கீழே ஆறும் காணப்படும் எனும் செய்திகள் பிராணிகள் கொண்டு உணர்த்தப் பட்டுள்ளன (ஆ. 7–8).

## புற்றுக்கரு

கொடிப்புற்று, ஊமைப்புற்று, பாலிளைப்புற்று, ஆயிளைப் புற்று, பிட்டான் (பிட்டின்) புற்று வகைகளை இவ்வேடுகள் நல்கு கின்றன. கொடிப்புற்று என்பது நெடுமை போன்று ஒடுங்கி யிருக்கும். அதற்கு 20 சாணில் பெருநீரும், அதன்கீழ் 5 சாணில் ஓடையும் தோன்றும். பிட்டான் புற்று தாழ்ந்து உருண்டை போன்ற கொடுமுடி உடையதாய் இருக்கும். அதற்கு 16 சாணில் நீர் தோன்றும் அடுத்த 8 சாணில் பேரூற்று இருக்கும்.

ஆயிளைப்புற்று அகன்ற கண்ணை உடையதாய் வட வடக்கைப் போன்று கறையான் மொய்த்து இருக்கும். அதில் 12 சாணில் நீர் தோன்றும். அதன்கீழ் 8 சாணில் மாடமும், 3 சாணில் செம்பாம்பும் காணப்படும். அப்பாம்பு ஒரு சாண் நீளமும் சொட்டைப் பருமம் உடையதாகவும் இருக்கும். அப்பாம்பைக் கொன்று மண்ணுள் பால்வார்த்துப் புதைத்தல் வேண்டும். பின் 3 முழத்தினில் ஐம்பொன் நிறமுடைய தேரை தோன்றும். தேன் நிறமுடைய நீர் கிடைக்கும். அங்குச் சிவந்த வண்ணமுடைய உண்டைக் கல்லும் தோன்றி உடைபடும். இதற்கு ஞாயிற்றுக் கிழமை பலியிட வேண்டும் என்ற குறிப்பும் காணப்படுகிறது.

ஊமைப்புற்றின் கீழ் 16 சாணில் நீர் தோன்றும். அதில் இரண்டு தவளையும் கிடக்கும் 5 முழத்தில் ஓடை தோன்றும். அதில் முது விரால் காணப்படும். பாலிளைப் புற்றின் கீழ் 12 சாணில் நீர் தோன்றும். அதன்கீழ் 5 சாணில் பெருநீர் காணப்படும். இவ்வைந்து புற்றுகள் பற்றிய இச்செய்திகள் அ-ஏடு கூறுவதாகும்.

பிற ஏடுகளில் இவற்றுடன் மற்றும் பல புதிய புற்றுகள் பற்றிய விளக்கங்கள் காணப்படுகின்றன. ஆ-ஏடு உணர்த்துவன. பிண்டிப் புற்றுக்கு 4 முழத்தில் வெள்ளோடை தோன்றும். 13 முழத்தில் ஒரு கண் புத்திற்குப் பெருநீராகும். இதற்கு 7 முழத்தில் ஓடையும். 3 முழத்தில் தவளையும் தோன்றும். பலகண் புத்திற்கு 7 முழத்தில் ஓடையும், 3 முழத்தில் பெருநீரும் வரும். தோடப்புற்று, பிண்டிப் புற்று, வல்லினைப்புற்று உள்ள இடங்களில் எதுவும் சிறப்புறாது. சூட்டுப் புற்றுக்கு முழம் ஏழில் மாடம் காணப்படும். பின் ஏழு முழத்தில் நீர் தோன்றும்.

புற்றின் விபரங்களை இ-ஏடு . ராசிகளுடன் இணைத்துத் தருகின்றது. பிண்டி, மயிலை, ஆயிலை ள, ஊமை, கொடிப்புற்று என ஐந்து வகைகளில் கொடிப்புற்றுக்கு நீர் 4 முழத்திலும், 12 முழத்தில் பெருநீரும் உண்டு. வெட்டுவதற்கு வலிதாகவும், துலா விருச்சிகம் இவற்றில் நல்ல ஊற்றும் காணப்படும். மயிலை புற்றிற்கு 3 முழத்தில் ஒரு சாண் நீளத்தில் ஒரு செம்பாம்பும் தோன்றும். அதை அந்த மண்ணில் பால்வார்த்துப் புதைக்க, அவ்விடத்தில் 3 முழம் தோண்ட ஒரு தவளை தென்படும். அந்தத் தவளை சேறோடும் நீரோடும் இருக்கும். இவ்விடத்தில் வெண்கலம் போன்ற ஒரு கல் தோன்றும். அதை உடைக்க உடையும் அதில் ஒரு நாயைப் பலியிட்டு அங்கு இரத்தத்தைச் சிந்த சிங்கத்திலும் தனுசிலும் நீர் உண்டாம்.

ஊமைப்புற்றுக்கு ஏழு முழத்தில் நல்ல நீரும் ஒரு தவளையும் தோன்றும். அத் தவளைக்குக் கீழ் 5 முழத்தில் பெரிய ஊற்று வரும். மகரத்திலும், கும்பத்திலும் பெரிய ஊற்றாகும். பிண்டிப் புற்றிற்கு 5 முழத்தில் நீரும் கருங்கற் பாறையும், கொப்பரைப் பார், பளிங்குப்பார், செங் (ய்) குன்றிப்பார், காக்கைப் பொன்பார், அப்பு அடுக்கு உருண்டைப்பார் என்பன இருக்கும். 6 முழத்தில் பெரிய ஊற்றும், கன்னி துலாத்தில் நல்ல ஊற்றும் உண்டு.

ஆயிளைப் புற்றிற்கு 3 முழத்தில் நீரும், அதன்கீழ்ச் சங்கை, பச்சை, மயிலை, செங்கல், கலரி, இடந்தைப் பொன் பார்களும், கெந்திப்பார், நீர்ப்பாரும் காணும். வெட்டு எளிதாயிருப்பதுடன் துலாம், மிதுனம், கும்பம், மேடம் இவ்விடங்களில் தோண்ட பேரூற்றும் உண்டாம்.

கொடிப்புற்று, பிடரிப்புற்று, ஆமைப்புற்று, அப்புப்புற்று, புட்டுப்புற்று, ஊமைப்புற்று, உருவப்புற்று ஆகியன நீருள்ள புற்றுகள் என ஈ-ஏடு தருகிறது. இதன் கீழ் 4 முழத்தில் நீர் தோன்றும். கரும்பார் வருகில் பன்னிரண்டு முழத்தில் பெருநீர் தோன்றும். அதில் காக்கைப் பொன்னூச்சியும் தோன்றும்.

இவ்வேடு பலவளிப்புற்று என்ற ஒன்றினையும் பேசுகிறது. அது இடம்தோறும் கண் திறந்து இருக்கும். அதன்கீழ் 5 முழத்தில் பெருக நீர் தோன்றும். அப்புற்று இருக்கும் தலத்தில் தூர்த்தழுந்த புங்கு நின்றால் 5 முழத்தினில் பெருநீர் உண்டு. அங்குக் கட்டப் பரிசை விட்டு அதன் ஆரத்தில் சிலந்தி நூல் இருக்கில் 5 முழத்தில் நீர் தோன்றும். அதன்கீழ் வடக்கடைய உண்டைப்பாரம் இரண்டு உண்டு. அதில் 3 முழந்தனில் செம்பாம்புத் தாரை தோன்றும். அதில் வெள்ளெருக்கு நிற்கில் அதிகமான நீர் இருக்கும். புங்கு, புராய் நின்றால் வட மேற்கிலிருந்து ஆறுதலை வைத்து வரும் என்று விளக்கமும் அளித்துள்ளது.

கேரளப் பல்கலைக் கழகச் சுவடி (எண். 9176) சில புதிய வகைப் புற்றுகளுக்கு விளக்கம் அளித்துள்ளது. மூதாப்புற்று நிற்குமிடத்தில் 5 முழத்தில் நீர் தோன்றும். அதன்கீழ் ஓடை தோன்றும். புட்டுப்புற்று நிற்குமிடத்தில் 4 முழத்தில் நீர்தோன்றும். 12 முழத்தில் பெருநீராகும். வாலிளைப் புற்று நிற்குமிடத்தில் 3 முழத்தில் நீர் தோன்றும். 5 முழத்தில் அற்றகன் நீராம். வட மேல் மூலையில் தவளை தோன்றும். பேராலைப் புத்து நிற்குமிடத்தில் 7 முழத்தில் ஓடை தோன்றும். இரண்டு தவளையும் இருக்கும். அதன்கீழ் ஒரு முழத்தில் தென்கிழக்கு மூலையில் செந்தாமரை போல துய்ய நிறம் உடையநீர் தோன்றும். அதில் விரால், ஆற்றுமீன் தோன்றும். அந்த மீனை நீரில் விடவும் என்று கூறப்பட்டுள்ளது.

கேரளப் பல்கலைக் கழக ஏடு (எண். 6356) பிட்டுப்புத்து, பால் வெள்ளைப்புத்து, நாய்வாய்ப்புத்து, கொடிப்புத்து இவற்றில்

எதாயினும், நின்ற இடத்தில் 4 முழத்தில் தண்ணீர் கசியும். பின்7 முழத்தில் கரும்பாறை தோன்றும். அதைத் தகர்த்தால் பெரு நீருண்டாம் என நவில்கிறது.

இங்குப் பலவகைப் புற்றுகள் எடுத்துக் காட்டப்பட்டிருப்பினும் இவற்றுள் சில, வேறு பெயரில் பிற ஏடுகளில் இடம் பெற்றிருக்கவும் வாய்ப்புண்டு. எனவே நிலவகைப் பாகுபாட்டைப் போன்று இதனை அறுதியிட்டு இத்தனை புற்றுகள் எனக் கூற இயல வில்லை. குறிஞ்சியில் படலைப் புத்து, நெய்தலில் குடைப்புத்து, மருதத்தில் ஏழுகண் புத்து என புற்றுகளின் இருப்பிடங்கள் வரை யறைப்படுத்துதல் சிறுபான்மையாகக் காணப்படுகிறது.

நிலவகைகளுக்கு உரைத்தவற்றுள் முரண்பாடு காணப் படுவது போன்றே புற்று வகைகளைப் பற்றிய குறிப்புகளை நவிலுமிடத்திலும் அதிகமான வேறுபாடு புலப்படுகிறது. அட்டவணை 15 இவ்வேடுகள் தரும் புற்றுகளைச் சுட்டுவதுடன் அவற்றின் படிநிலைகள் உணர்த்தியிருப்பின் அவற்றைக் கூட்டல் குறியிட்டும் காட்டுகிறது.

### ஊற்றுகள்

நீர் ஊற்றுகள் பற்றிச் சற்று விரிவாக இயம்பும் இரு ஏடுகளும் (இ, உ) இராசிகளையும், கிரகங்களையும் இணைத்துப் பேசி யுள்ளன. இ-ஏட்டின் இறுதிப் பகுதியில்:

ஞாயிறு —எருக்கலங்காய் ஊற்று, கெண்டிமூக்கு ஊற்று.

திங்கள் —வட்டமுடைய புடை யூற்றுக் கசிவு.

செவ்வாய் —பெருத்த தேங்காய் கண் குமிழியூற்று, பெருத்த முழங்கையளவு ஊற்று, ஆற்றூற்று.

புதன் —கெண்டிமூக்கு ஊற்று (பெருத்த கசிவு).

வியாழன் —எலிவாலூத்து, கெண்டிமூக்கு ஊற்று அதில் கசிவு.

வெள்ளி —கட்டை விரலளவு முதல் சிறுவிரலளவு வரையும் நிதான கசிவு, பேரூற்று. குமிழி பெருங்கசிவு கண்டக்கால் கட்டை விரலளவு நிதான கசிவு. எலிவால் கெண்டிமூக்கு ஆளவாம்.

சனி —சுண்டுவிரல், சிறு கெண்டிமூக்கு, எலிவால் அளவு கசிவாம்.

ராகு, கேது —சனிபோல் ஊற்று. பாறையில் ஊற்று, சல ராசியானால் பெருவிரல் பேரூற்று.

என்று ஒவ்வொரு கிரகங்களுக்கும் ஏற்ப அதனுடைய ஊற்று பற்றிய விபரத்தினைத் தந்துள்ளது.

உ—ஏடு இக்கருத்துகளையே பாடல் வடிவில் படைத்துள்ளதுடன் மற்றும் சில எண்ணங்களையும் தந்துள்ளது. நாலாம் இராசி சூழ்ந்திடும் கிரகம் பார்த்து கிணறு வெட்டும்போது அது ஆட்சி உச்சம் உடையதானால் பேருத்து; நட்பு வீடானால் நல்ல கசிவூத்து; பகை, நிசமானதால் நீருத்தின்றி நீர் அற்பம்; தீக்கோள்கள் பார்ப்பின் கீழ்நீர ஊற்று சரியாக இருக்காது: சுபக்கோள்களும், சிலக்கோள்களும (நீர்க்கோள்) பார்க்க அல்லது இருக்க, கீழ்நீர் ஊற்று உள்ள கிணற்றில் நீர் ஊற்று உள்ள கிணற்றில் நீர் பெருகும் என்பன அவையாகும்.

## தொடுகுறி

கிணறு வெட்டுமுன் அவ்விடத்தில் உள்ள நீரின் ஆழம், தன்மை அறிவதற்குத் தொடுகுறி அமைப்பு முக்கியத்துவம் பெற்றுள்ளது. கிணறு வெட்டுகிற இடத்தில் மெழுகிப் பிள்ளையார் வைத்து நிறைநாழி, தேங்காய், பாக்கு, வெற்றிலை, தட்சணை வைத்து, தூபதீபம் கொடுத்து, நமக்கரித்து, கிழக்கு முகமாக இருந்து பூமாதேவியைத் துதித்துக் கொண்டு, ஒரு சிறுவனைத் தன் அவயங்களில் ஏதேனும் ஒன்றைத் தொடச் சொல்லி அதற்குரிய பலனை அறியச் செய்வது தொடுகுறி ஆகும்.

சிசரைத் தொட்டால் 9 சாணில் வெண்பாருண்டு, உடைபடும். 11 சாணில் பாறைமலை தோன்றும். வெட்டுவது கடினமாயிருக்கும். 12 சாணில் உப்புநீர் கிடைக்கும். குறைவாகவும் இருக்கும். கண்ணைத் தொடுகில் 11 சாணுக்குமேல் 22 சாணுக்குள் பெருநீர் உண்டு. நெந்தி தொட்டால் வெட்டு வலிதாய் இருக்கும். 22 சாணுக்குமேல் நீர் அற்பமாய் இருக்கும். வாயானால் 10 சாணுக்குமேல் கருமலை தோன்றும். அதற்குக் கீழ் 5 சாணுக்கு மேல், 9 சாணுக்கு மேல் 22 சாணுக்குள் ளே பெருநீர் உண்டு.

புருவம், கன்னம், காது, மூக்கு இவற்றுள் எதனைத் தொடினும் 10 சாணில் சேறும், சகதியும், மணலும் விரவியிருக்கும். 22 சாணில் ஊத்துக்கண் ஓடை தோன்றும் 26 சாணில் பெருநீர் உண்டு. கழுத்து, தோள், நெஞ்சு, உள்ளங்கை, முதுகு, பிடரி, முழங்கை, இவற்றுள் ஒன்றைத் தொட 30 சாணில் நீர் தோன்றும். அது உப்பு நீராக இருக்கும். இடது மார்பானால் 4 சாணில் செம்பார் தோன்றும். 18 சாணில் அப்புப்பாரும் கருமணலும் விரவிக் கிடக்கும். 19 சாணில் மண்கண்டம் தோன்றும். 20 சாணில் கரும்பார் தோன்றும். 21 சாணில் குழி தோன்றும். 22 சாணில் பெருநீர் உண்டு. தென்மேல் மூலையில் ஊற்று தோன்றும்.

இங்கு விடப்பட்டுள்ள மீதி அவயவங்களைத் தொடுகில் பெரும்பான்மை நீர் இராது. இருப்பினும் அஃது உப்புத் தண்ணீராகவும், அற்பமாகவும் இருக்கும் (அ 6—9). பிறவற்றைப் போன்றே இவற்கும் நீராழம் உணர்த்துவதில் மிகுந்த வேறுபாடு காணப் படுகிறது. அஃது அட்டவணை 16-இல் எடுத்துக் காட்டப் பட்டுள்ளது.

இம்முறையன்றி இராசிகளைக் கொண்டும் தொடுகுறி முறை கையாளப்படுகிறது. இதனுள் ஒவ்வொரு ராசிக்கும் உரியதான உறுப்புக் குறிக்கப்பட்டு அதன்படி நீரின் தன்மை அறியப்படுகிறது. மேடம்—தலை; இடபம்—முகம்; மிதுனம்—கழுத்து; கடகம்—மார்பு; சிங்கம்—தோள்; கன்னி—நகில்; துலாம்—முதுகு; விருச்சிகம்—வயறு; தனுசு—அரை; மகரம்—துடை; கும்பம்—முழங்கால்; மீனம்—பாதம் என உணர்த்தப்பட்டுள்ளது. இங்குப் பொது நிலையில் ஒவ்வொரு உறுப்புக்கும் ராசிக்கும் பலன் உரைக்கப் பட்டுள்ளது.

தலை, நெத்தி—சின்னீர்; முன்னம், தளவாய், முதுகு, நகில், வயறு, தொப்புள், துடை, முன்னங்கால்—இவற்றிற்குப் பெருநீர்; செவி, கழுத்து, மார்பு, தொப்புள், அரை, உள்ளங்கால்—இவை தொடில் நீரில்லை. மேடம்—பார்; சிங்கம்—பாறை, கன்னி—நன்னீர், மிதுனம்—?; கடகம்—வெள்ளம்; துலாம்—பார்; விருச்சிகம் பழங்கிணறு; தனுசு—சின்னீர்: மகரம்—நன்னீர் எனவும் குறிக்கப்பட்டுள்ளது.

## கிரக, ராசி பலன்

இடபம், கடகம், விருச்சிகம், கும்பம், மீனம் துலாம் ஆகியன சில ராசியாகவும் (நீர்ராசி) சுக்கிரன், சந்திரன், ராகு மூன்றும் சிலக்கிரகமாகவும், மகயிரம், கேட்டை, அலை, சித்திரை, சோதி, விசாகம், திருவோணம், அவிட்டம், சதையம், உத்திரட்டாதி, ரேபதி, அசுபதி, புணர்தம், பூசம், ஆயிலியம் முதலிய பதினைந்தும் சில நட்சத்திரங்களாகவும் உணர்த்தப்பட்டுள்ளன (உ—IV).

உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, கேட்டை, சோதி, சித்திரை, ரோகணி, திருவோணம், அத்தம், மிருகசீரஎம், பூராடம், மகம் எனும் இவ் நட்சத்திரங்களும், பஞ்சமி, சத்தமி, திரிகை, ஏகாதேசி, திரையோதசி, பிரதமை ஆகிய திதிகளும், கும்பம், மீனம், மகரம், இடபம், கற்கடகம் முதலிய ராசிகளும் குளம், தெப்பம், கிணறு ஆகியன வெட்டுதற்கு நற்பொழுதாம் (அ..27). நற்கோள்வரின் வெட்டு எளிது தண்ணீர் நன்று என்றும், தீக்கோள் ஆயின் பாறை என்றும், தண்ணீர் தீது என்றும் சொல்வர் (அ. 29).

ஆ ஏடு நீர் ராசிகளில் துலாத்தையும் இணைத்து இவ்விராசிகளில் சந்திரன் அல்லது வெள்ளி நிற்கில் பெருநீர்; சலராசிகளும், சலக்கோள்களும், உரையாரூடக் கவிப்பிலும், கணங்களின் நோக்குகளிலும் பெலவான்களாய் நின்றனவாயில் மேலூற்று நீர் கிடைக்கும்; சலராசியில் நீரில்லாத கோள் (செலக்கோள் அல்லாதவை) நிற்கில் ஆழத்தில் நீராம்; இவ் விராசிகளில் ஆதித்தன், செவ்வாய் நிற்கில் நீரில்லை; பாம்பு (ராகு, கேது, நிற்கில் நீர் உண்டு. நீர்க்கோள்களாகிய வெள்ளி, சந்திரன், புதன், வியாழன் நிற்கில் அவற்றைச் செவ்வாய், சனி, ஆதித்தன் ஆகியன கவிக்கில் கீழ்நீர் உண்டு, மேல்நீரில்லை; வியாழனும் சந்திரனும் கண்டத்தில் நிற்கில் கிணறு தூயநீர் பெற்றிருக்கும்; சந்திரனும் வெள்ளியும் உதையத்தில் நிற்கில் மலைமேலும் தண்ணீர் உண்டு; சந்திரனும் புதனும் ஓர் கண்டத்தில் நிற்கில் அங்குப் பழங்கிணறு காணப்படும்; சந்திரனுடைய ராசியில் பரி வேடம் நின்றதாகில் பெருநீர் உண்டு எனப் பல விளக்கங்களை உரைக்கிறது.

இஃதுடன் நற்கோள் நன்னிலத்தில் நட்பு, ஆட்சி, உச்சங்களோடு நின்று நோக்கு நல் செய்யில் நீர் உண்டு, பூமியும் தன்னுடையதே ஆகும்; தீயக் கோள்கள் மேல ராசியில்லாத நிலத்தில் பகை, நீசங்களில் நின்று நோக்கில் தண்ணீரும் இல்லை, பூமியும் அன்ன விட்டுப் போகும்;கோட்புராசியும், இருமாண்புராசியுமாய் அமைபவற்றில் தீக்கோள் நிற்கில், நோக்கில், விரைவில் பூமி பிறருடையதாகும். திரராசியுமாய் நற்சோள் நிற்க அதுவே நோக்குமாகில் பூமியும் தன்னுடையதே ஆகும், மிகுந்த பலனும் கொடுக்கும் என ஆருடம் நவிலப்பட்டுள்ளது.

இ—ஏடு தரும் விளக்கம்:--மகம், மிருக சீரிடம், கேட்டை, அத்தம், மூலம் முதல் நான்கிற்கும், திருவோணம் முதல் மூன்றும், உத்திராடம் முதல் மூன்றும், புனர்பூசம் முதல் மூன்றும் ஆகிய இந் நாட்களும், கும்பம், துலாம், மீனம், மகரம், இடபம், கடகம், இவ்விராசிகளும், திங்கள், வெள்ளி, பாம்பு எனும் கோட்களும் நீர் உடையன. அல்லாதவை நீரற்றவை. இவ்வுதைய ஆருடங்களுக்கு நாலாம் ராசியாகில் பெருநீர் உண்டு. இவற்றில் பாபக் கிரகங்கள் நோக்கில் நீரில்லை. கவிப்பு ராசி நீர் ராசியாகில் மேலூற்று. அல்லாதவை கீழூற்று.

இவ்வேடு ஒவ்வொரு ராசிகளுக்கும் கதிர், நிலம், பார், ஆழம் முதலானவற்றை நவிலுகின்றது அவை கீழ்வருமாறு:

| ராசி | கதிர் | பார் | ஆழம் |
|---|---|---|---|
| மேடம் | 24 | மருதநிலம் பாறை | 10 |
| இடபம் | 24 | மருதநிலம் இழந்தபாறை | 5 |
| மிதுனம் | 22 | பாலைநிலம் | — |
| கடகம் | 18 | மி(ள)குபாலை இழந்த பாறை | 4 |
| சிங்கம் | 36 | குறிஞ்சி நிலம் கடும்பாறை | 16 |
| கன்னி | 24 | நெய்தல் நிலம் | — |
| துலாம் | 22 | முல்லைநிலம், கடுவல் இளக்கம் கலந்த பாறை | — |
| விருச்சிகம் | 32 | இழந்த பாரினில் பழங்கிணறு கசிவுப் பாறை | — |
| தனுசு | 32 | குறிஞ்சிநிலம், கடும்பாறை கசிவு ஊற்றுப்பாறை | 7 |

| | | | |
|---|---|---|---|
| மகரம் | 18 | மி(ள)கு பாலை, இழந்த வெள்ளைப்பாறை | 13 |
| கும்பம் | 24 | முல்லைநிலம், இழந்த பாறை, மிகுநீர் | — |
| மீனம் | 22 | நெய்தல்நிலம், இழந்தபாறை மிகுநீர் | — |

இங்குக் குறிப்பிட்டுள்ள ஆழம் பற்றிய அளவு முழமாக இருக்கலாம். இது பற்றிய எக்குறிப்பும் இல்லை. கதிர் ஒன்றினுக்குச் சாண் ஒன்றாகப் பார்ப்பது என்பது மட்டுமே உளது.

ஈ-ஏடு தன் அனைத்து விளக்கத்திற்கும் ராசி, கிரகங்களை இணைத்தே நோக்கியுள்ளது. ராசிகளின் உதையத்தினைக் கொண்டு பலன் கூறும்பொழுது, மேடம்—பாறை; இடபம்—கல்லு; மிதுனம்—நீரில்லை; கடகம்—நீர் பெரிது; சிங்கம்—கல்லூற்று; கன்னி—நீர்பாயும்; துலாம்—பார்; விருச்சிகம்—சித்தூத்து; தனுசு—மலை; மகரம்—பார்; கும்பம்—பெருநீர்; மீனம்—பெருகநீர் என்று குறிப்பாகவும்; கும்பம்—முக்காலநீர், இரண்டேகால் புருசம் தோன்றும்; விருச்சிகம்—மூன்றேகால் புருசம் தோன்றும்; துலாம்—முழுநீர், இரண்டேகால் புருசம் தோன்றும்; சிங்கம்—பார் உண்டு; நீர் இல்லை; கற்கடகம்—முழுநீர், இரண்டு புருசத்தில் தோன்றும்; மேடம்—வெண்கல்லு, நாலு பஞ்சமி; இடபம், கன்னி—மூன்று புருசத்தில் தோன்றும் என்று சற்று விரிவாகவும் பேசுகிறது.

நீர்காட்டும் நிலத்தினைப் பன்னிரு பிரிவுகளாக்கி, நிகழ்கின்ற ராசிதனை பிரமன் மேல் வைத்து வலம் இடமாக எண்ண, மதி, வெள்ளி, குரு அமையும் திக்கில் விடமே நீராம்; பாம்பாகில் பழைய கிணறு; பருதி, மதி, செவ்வாய் இவற்றில் நீரில்லை, புதன் ஆகில் கல்லுண்டு என்றும் குறிக்கப்படுகிறது (ஆ 16). மற்றும் பூமிச்சல்லியம் என்று நிலத்தில் 28 நட்சத்திரங்களுக்கும் 28 அறைகளை வரையும் முறையினையும் அவற்றில் அவற்றை நிறுத்தும முறையும் காண்பிக்கப்பட்டுள்ளது. இவ்வமைப்பும் பகல் முன்பொழுது, இரா முன்பொழுது, பகல் பின்பொழுது, இரா பின்பொழுது என நேரத்திற்குத் தக மாறுபாடுடையது. இப்பகுதி, அதனை உணர்த்தும் ஏடுகளால் சரிவர விளக்கம் பெறவில்லை.

உ– ஏடு தன் பங்கிற்கு, ராசிகளுக்கும், கோள்களுக்கும் நீராழம் உணர்த்தி புதுமை விருந்தளிக்கிறது. விரிச்சிகம் 26 சாண், நண்டு, குடம், ?—24 சாண், மான்—25; அரி, வில்—32, கன்னி 27, மீனம்—22 என இராசிகளுக்கும், கதிரோன்—25, சோமன்—22, பூர்வசோமன்—18, நாகம் (இராகு)—24, சுங்கன்—22, சனி, கேது, குளிகன்—31 என கோள்களுக்கும் அளவிட்டுள்ளது.

இவ்வேடுகள் 'கதிர்' என்று ஓர் அளவினை ராசி, கிரகங்களுக்கு உணர்த்தியுள்ளன. நீரின் ஆழம், பூமியின் இயல்பு இவை அளவிடுதற்கு இவ்வளவு தேவை என்பது மட்டுமே உய்த்துணர முடிகின்றதே அன்றி அதன் பயன்பாடு பற்றி முழுமையாகப் புரிந்து கொள்ள இயலவில்லை.

## சில சிறப்புக் கூறுகள்

நிலத்தின் புறத் தோற்றம் கொண்டும், காலநிலை கொண்டும் நீருள்ள நிலத்தினை அறியும் இயல்பும் பெறப்படுகிறது. நீர் இருக்கக் கூடிய இடத்தில் மழைக் காலம் வெப்பமாகவும், கோடை காலம் குளிராகவும் இருக்கும். அந்நிலத்தில் உள்ள தாவரங்களும் இவ்வியல்பைப் பெற்றிருக்கும் என்பது பரவலான கருத்தாக அமைகிறது. கோடை காலத்தில் குளிர்ந்த புழுதி உள்ள இடம் பெருநீர் கொண்டது; மாரிக் காலத்தில் மரம் சேர்ந்த இடமும் அத்தன்மைத்தே; இலை சுருண்டிருக்கின் அவ்விடத்தில் 6 முழத்தில் தண்ணீர் உண்டு; கோடைக் காலத்தில் எருமை வேறுபடக் கடந்த இடம் பெருநீர்க் கயமாகும்; சிலந்தி வரைந்து கிடந்த இடம் பெருநீர் உடையது; நுணல்பயிலுமிடத்திலும் 5 முழத்தில் தண்ணீர் தோன்றும்; புகைபோல் மஞ்சு படர்ந்த இடமும், நீரது இல்லை போல் தோன்றும் இடமும் நீருள்ள பகுதியாகும் எனச் சற்று விரிவாக ஆ ஏடு தருகிறது.

கிணறு தோண்டுவதற்குத் தேர்ந்த நிலத்தில் கொடியான மதியத்தில் நற்பொழுது பார்த்து வெட்டினால் நல்ல தண்ணீர் காணப்படும். அந்திக் காலத்தில் வெட்டினால் கடுத்த தண்ணீர் உண்டாகும்.

கிணற்றினைச் சித்திரை, வைகாசி, ஆனி மாதங்களில் வெட்டத் தொடங்கினால் நல்ல நீருடன் உத்தமமான பயனும் கிடைக்கும். ஆடியும் ஆவணியும் மத்திமமாக அமையும்.

சோதி மூலம், பரணி, ஓணம் ஆகிய நான்கு நாட்களும் பொருந் தாத நாட்களாகும். அனுடமும் கேட்டையும் நோவுதரும். சோதியும், விசாகமும் மரணம் தரும். ஓணமும், சதையமும் மனை அவனை விட்டுச் செல்லச் செய்யும். கும்பம், மீனம், மேடம் தேரிய மனையில் நிற்கில் செல்வம் பெருகி வரும். பகையை வெல்லும். இம்மூன்றும் அல்லாத பிறவற்றால் மனை பாழாகும்.

மனைக்குக் கிணறு வடகிழக்குப் பக்கம் இருப்பின் ஐசுவரியம் உடையதாகவும், தென்கிழக்காயின் மகவு, மனைவியைப் போக்குவதாகவும் அமையும். இவ்வாறே தெற்கு—கருதியது நாசம், மேற்கு—மிகவும் நன்று, வடமேற்கு—மக்கட்பேறும் ஆயுசும், வடக்கு—அல்லல், சத்துரு பூசல், அல் சுபம் எனத் திசை கள் வைத்தும் பலன் உரைக்கப்பட்டுள்ளது. (அட்டவணை-17 நோக்குக).

நீரின் பண்பாக, நவ்வல் நின்ற இடத்தினின்றும் பெறும் நீரால் விடம் தீரும், எலிகடியும் தீரும், வெப்பும் தீரும் என்றும்' புங்கும், புலாவும் நின்ற நிலத்தினின்று பெறும் நீர் முன்னீர் கொள்ள முடியாத விடத்தைத் தீர்க்கும் (ஆ) என்றும் சிறப்பிக்கப் பட்டுள்ளது.

நீரின் ஆழம் கணக்கிடுமுறையை 'ஆ' ஏடு விளக்கி யுள்ளது. உதையராசி முதலாக, திரிகோணங்களிலும், கண்டங்களிலும், நோக்கிலும்[1], ஆருடக் கவிப்பிலும், வலிபெற்ற ராசியின் கதி ராலும[2], கோளின் கதிராலும்[3], சென்றகதிர்கள் நீக்கி, நின்ற கதிர்

---

1. சூரியன்-கிழக்கு, சுக்கிரன்-தென்கிழக்கு, செவ்வாய்-தெற்கு, பாம்பு-தென்மேற்கு, சனி-மேற்கு, சந்திரன்-வட மேற்கு, புதன்-வடக்கு, வியாழன்-வட கிழக்கு நோக்கும்.
2. மேடம் கதிர் 7, இடபம் 8, மிதுனம் 5, கடகம் 3, சிங்கம் 7, கன்னி 11, துலாம் 4, விருச்சிகம் 4, தனுசு 6, மகரம் 8, கும்பம் 20, மீனம் 7.
3. ஆதித்தன் கதிர் 5, சந்திரன் 21, செவ்வாய் 7, புதன் 9, வியாழன் 10, வெள்ளி 16, சனி 4, பாம்பு 4. இதன்கண் மாறுபாடும் உண்டு. அஃது முறையே 16, (8), 4,10,9,7, 5,21,15 என அமையும்.

களுக்குள்ள முழமும் சாணும் சொல்க. கவிப்பு, ஆட்சி, உச்சம், பகை, நீசம் அறிந்து சொல்ல வேண்டும். இதுவன்றியும் கதிர்கள் உச்ச நிலமாகில் சாண்; ஆட்சியாகில் முழம்; நட்பு, ஆச்சி உச்சமாகில் ஆழம் மட்டு; பகை நீசங்களில் ஊற்று — என்பது அவ் விளக்கம். இவ்வேடு உதைய வீதி, கவிப்பு போன்றவற்றையும் விரிந்தளவில் விளக்கியுள்ளது. ஆற்றுக் கிடக்கை எனுமொரு பகுதியினை உருவாக்கி அங்கு நிற்கும் நிலக்கரு, புற்றுக்கரு முதலியவற்றிற்கும் நீராழம் கணக்கிட்டிருப்பதும் இவன் சுட்டற் பாலது.

அறுகு, நாயுருவி, கோரை இவை உள்ள இடங்களில் கரையான் புற்றுத் தோன்றியும், குளிர்காலத்தில் வாடியும், கோடை காலத்தில் குளிர்ந்தும் தோன்றினாலும்; ஈ திரண்டிருப்பினும், எறும்புகள் இயங்கினும், பாற்பசு, எருமை பலபடக் கிடப்பினும், பருத்தி, சாரணை முதலியன தழைத்து நிற்பினும்; வஞ்சி, கிளுவை, நாணல், மருது, அரசு, நொச்சி, கடம்பு, பூலா, ஆத்தி முதலிய மரங்கள் சூழ்ந்துள்ள இடத்தில் மழையில்லாத காலத்தில் இம்மரங்கள் தழைத்துப் பூத்து நிற்பினும் இவ்விடங்களில் எல்லாம் பழங்கிணறாகும் என்று நிலக்கரு கொண்டு பழங்கிணறு அறியு முறையை 'இ' ஏட்டில் காணலாம்.

செவ்வாய்-செம்மண், புதன்-வண்டல், வியாழன்-விரவுமணல்; ஆதித்தன்-செமம் பருக்கை மண், சனி, பாம்பு-களிமண் என்று கிரகங்களுக்கு ஏற்ப மண்ணிற்கு நிறம் காட்டப்பட்டுள்ளது(உ.).

## முடிவுரை

நிலப்பகுப்பில் நீராழங்களைக் கணக்கிடும் பொழுதும், புற்றுக் கருக்களை விளக்கும்பொழுதும் தவளை, தேரை, பாம்பு, மீன் ஆகியன நிலப்பரப்புள் இருப்பது போன்றும், அவற்றுள், பாம்பினைப் புதைத்தல் வேண்டும் மீனினை நீரில் விடல்வேண்டும் போன்ற குறிப்புகளும் மேலே காட்டப்பட்டன. இவை இப்படி இருக்குமா என்ற வினா எழுகிறது. ஒருக்கால் இவை அனைத்தும் குறிப்பு மொழிகளாக அமையுமோ எனும் உணர்வு மட்டுமே இப் பொழுதிற்கு விடையாகக் கிடைக்கிறது.

எல்லா நூல்களிலும் நாம் எல்லா விளக்கங்களையும் பெற இயலவில்லை. ஒவ்வொரு நூலும் ஒவ்வொன்றிற்கு முக்கியத்துவம்

அளித்துள்ளது. ஒன்றில் சுருக்கமாகக் காட்டப்பட்டது மற்றொன்றில் விளக்கமாக உள்ளது. ஒரே ஏடே ஒருபகுதிக்கு இரண்டுக்கு மேற்பட்ட நிலைகளில் விளக்கம் அளித்தலும் சில வேடுகளின் பொதுமைக்கூறாக அமைந்துள்ளது.

உள்ளமுடையான் கருத்துப்படி , இப்படிச் சொல்வாரும் உளர், மயனவன் உரைத்த நூலே, நயனவன் நூலே, கும்பமுனித் தெரியச் சொன்னார் எனும் கூற்றுகள் கூவ சாத்திரத்துள் மாறுபட்ட சிந்தனைகள் அன்றே இருந்தமையைப் புலப்படுத்துகின்றன. உள்ளமுடையான்படிப் பூமிச்சல்லியம் அறிய, உள்ளமுடையான் படிக்கதிர் அளவு என்று சிறப்பு நிலையில் நவின்றிருப்பது, கூவக் கலையில் மிகப்புகழ்பெற்ற, தேர்ச்சி பெற்ற ஒருவரைக் குறிப்பதாகக் கொள்ளலாம்.

சோதிடக் கலை இதனுள் முக்கியமானதொரு இடத்தைப் பெற்றிருப்பதனால், அக்காலத்தில் கூவற்கலையில் வல்லோர் சோதிடக்கலையிலும் தேர்ச்சி பெற்றிருந்தமை புலனாகும். தமிழர் இயற்கையோடு மிக நெருங்கிய தொடர்புடையவர் என்பதற்கு மிகச் சிறந்த சான்றாக இக்கூவ சாத்திரம் அமைந்துள்ளது எனில் மிகையில்லை.

ஆ

# கூவ சாத்திரம்

## காப்பு

காப்பது அந்த முன்வேதம் கனிந்து உளம்
கூப்பிளந்து கொள்நீர் வரு கூவத்தை
நாப்பால் இன் சொலினால் உரை நாவலர்
பாப்பாம் திசை பாரினில் பார்க்கவே

## திசைப் பலன்

1. அன்னமே ஊர் மனைக்கும் அதிகமாம் ஈசானம் கீழ்
சொன்ன மாசூரியம் உண்டாம்; அக்கினி மகவைப் போக்கும்
தன்னதாய் இருந்த பெண்டில் தான் செத்துப் போவாள்; தெற்குக்
கன்னிமேல் கூவம் ஆகில் கருதியதுஎல்லாம் நாசம்

ஈசானம்-வடகீழ்த்திசை, பெண்டு + இல் = பெண்டில் (மனைவி).

2.* எல்லையாம் கூவம் மேற்கே இருக்கவும் மிகவும் நன்று
வல்லையாம் மக்கட்பேறும் ஆயுசும் வடமேற்கு ஆகும்
அல்லல் சத்துருவாம் பூசல்அல்சுபம் வடக்கதாகும்
நல்லது ஓர் கூவம் ஆகில் நலம்பெற வாழ்வு தானே

வல்லை—வலிமை.

---

*இப்பாடலின் கீழ் இந்நூலடங்கிய மற்றொரு சுவடியில், கீழ்க் கண்ட பாடல் உள்ளது.

இருப்பதில் கூகம் தானும் இனிதுடன் சொல்லவேண்டில்
வரும்பொருள் கிழக்கு ஈசன் வடதிசை மக்கள் பேறாம்
தரும்பொருள் மேற்கும் தெற்கும் தாரணியுள்ளே சாவாம்
கருதியால் மரணம் வாய்வு கன்னியும் வாழ்வும்உண்டாமே

## நீர் உள்ள இடங்கள்

3. பருமரக் கரு ஆல் அத்தி பாற்சொடி
மருதுடன் இலுப்பையும் வஞ்சி மா (ப்) புளி
தருநொச்சி இத்தி ஏழ்பாலை புங்குசார்
கருமொய்த்த எறும்பு (ள்) மவிளங்கு காணுமே

(எ-து) ஆல், அத்தி, பாற்சொடி, மருது, இலுப்பை, வஞ்சி, மா, புளி, (தென்னை), நொச்சி, இத்தி, பாலை, புங்கு, மாவிலங்கு, செந்தலை அகன்ற எறும்பு மொய்த்துக் குழி பறித்த இடம்-இவை உள்ள இடங்களில் நீருண்டாம் என்றவாறு.

4. காணும் வெண்புல் கரும்புல் கருஞ்சடை
தோணு செங்கோல் அறுகு, குறுந்தொட்டி
தாணு தெற்பை சிறுபீளை சாறணை
வெண்கோரை பொடுதலை வெள்ளமே

(எ-து) வெண்புல்லு, கரும்புல்லு, கருஞ்சடைப்புல்லு, செங்கோலறுகு, குறுந்தொட்டி, தெற்பை (தர்ப்பை), சிறுபீளை, சாறணை, (பூடுவகை) கோரை, பொடுதலை இவை உள்ள இடங்களில் நீர் உண்டாம் என்றவாறு.

5. வெள்ளம் மேவு கடலாடி மிக்கநீர்
உள்ள காக்கண் எருக்குப் (பி) ராயுடன்
பள்ளம் மேவு கரும் பூலாப் பற்றிடம்
தள்ளுநீர் உளதாம் எனச் சாற்றினார்

(எ-து) நாயுருவி,காக்கணம், எருக்கு, பிராய் கரும்பூலா-இவை உள்ள இடங்களில் நீர் உண்டாம் என்றவாறு.

## தொடுகுறி

6. சாற்றிய மரமும் புல்லும் சார்ந்திடக் கிணறு குற்றில்
ஏற்றிய பெருநீருண்டு என்று இயம்பினன் இறைவன் தன்னைப்
போற்றி முன் இருத்தி அன்னோன் தொடுகுறி பொருந்தக் கேள்மின்
தோற்றிய சிரமேல் வெண்கல் உடைபடும் தோன்றும் நீரே

(எ-து) முன் சொன்ன பெருமரமும் சிறுமரமும் நிற்கின்ற இடத்தில்,கார்காலத்தில்,வேர்வை சென்றுருக்கும் .கோடை காலம்

குளிர்ச்சி போன்றிருக்கும். இதனை அறிந்து கிணறு வெட்டுவதாகும். உச்சி நேரம் வெட்ட (வும்) நல்ல சிலம் (நீர்) காணும். இளநேரம், சாயங்காலம், இராத்திரி காலம் வெட்டினால் சிலம் கருக்கும்.

கிணறு வெட்டுகிற இடத்தில் மெழுகிப் பிள்ளையார் வைத்து நிறைநாழி, தேங்காய், பாக்கு, வெத்திலை, தெட்சணை வைத்துத் தூபதீபம் கொடுத்து நமஸ்கரித்து, கிழக்கு முகமாக இருந்து பூமாதேவியைத் துதி செய்து கொண்டு முப்பத்திரண்டு அவயவங்களில் ஒன்றைத் தொடச் சொல்லவும்.

சிரசைத் தொடுகில் ஒன்பது சாணில் வெண்பார் (பாறை அடுக்கு) உண்டு. உடைபடும். பதினொரு சாணில் பாறைமலை தோன்றும். கடின வெட்டாயிருக்கும். பன்னிரண்டு சாணில் உப்புச் சிலம்-அற்பம்-அது எதுநாலேயானால் (எதனால் என்றால்) மேட ராசி ஆனதாலும், சிரமானதாலும், செவ்வாய் வீடானதாலும் சிலம் அற்பமாய் இருக்கும் என்றவாறு.

7. நீர் உண்டு கண்ணேல் மெற்ற நெத்தியில் வலு வெட்டு அற்பம்
சீர் உண்ட வாயேல் கல்லு வலிது நீர் உண்டாம் செவ்வே
ஏர்உண்டு வலது மார்பேல் ஈரைந்திற் குமிழி தோன்றும்
பேர் உண்டாம் தன்கீழ் மூன்று முழத்தினில் பெருநீர் தோன்றும்

(எ-து) கண் தொடுகில் 11 சாணுக்கு மேல் 22 சாணுக்குள்ளே பெருநீர் உண்டு. நெத்தி தொடுகில் வெட்டு வலிதாயிருக்கும். 22 சாணுக்கு மேல் நீர் அற்பம் என்றும், வாயைத் தொடுகில் 10 சாணுக்கு மேல் கருமலை தோன்றும். அதற்குக்கீழ் 5 சாணுக்கு மேல், 9 சாணுக்கு மேல் 22 சாணுக்குள்ளே பெருநீர் உண்டு என்றவாறு (வலது மார்பானால் 10 சாணில் குமிழி தோன்றும் அதன் கீழ் 6 சாணில் பெருநீர் உண்டு).

8. தோன்றிய புருவம் கன்னம் காது மூக்கு அது தொடுகில்
ஊன்றிய பத்து மூன்று முழத்தினில் பெருநீர் உண்டாம்
ஈன்றிய கழுத்து(த்) தோள் நெஞ்சு உள்ளங்கை முது(கு) பிடரி
ஊன்றிய முழங்கை ஆகில் உப்பு நீர் ஆகும் என்றே

(எ-து) புருவம், கன்னம், காது, மூக்கு, இவை தொட்டால் 10 சாணில் சேறும் சகதியும் மணலும் விரவியிருக்கும். 22 சாணில்

ஊத்துக்கண் ஓடை தோன்றும் 26 சாணில் பெருநீர் உண்டு என்றும், கழுத்து, தோள், நெஞ்சு, உள்ளங்கை, முதுகு, பிடரி, முழங்கை இவை தொடுகில் 30 சாணில் நீர் தோன்றும். உப்புச் சில மாக இருக்கும் என்றவாறு.

9. என்றதோர் இடத்து மார்பும் இன் பிரசாபதியும்
துன்றிய சமனம் தானும்தொடுகில் நீர்உண்டாம் செவ்வே
மன்றிரு பத்திரண்டு சாணினில் பரக்கும் வெள்ளம்
கன்றிய தென் மேல் மூலை காணும்நீர் ஊற்றுத் தோன்றும்

(எ-து) இடது மார்பு பிரசாபதி சமனம். இது தொடுகில் 4 சாணில் செம்பார் தோன்றும். 18 சாணில் அப்புப்பாரும் கரு மணலும் விரவிக்கிடக்கும். 19 சாணில் மண்கண்டம் தோன்றும். 20 சாணில் கரும்பார் தோன்றும். 21 சாணில் குழி தோன்றும். 22 சாணில் பெருநீர் உண்டாம். தென் மேல் மூலையில் ஊத்துத் தோன்றும் என்றவாறு.

## புற்று

10. தோன்றும் மற்ற அவயவங்கள் தொடுகில் நீர் இல்லை ஆகும்
ஏன்ற புற்றுக் கருக்கள் இயம்பி அதின் இனிமேல் பாரில்
ஊன்றிய கொடிப்புற்று ஊமைப்புற்று(ப்) பாலிளைப் புற்றோடும்
ஆன்றதாய் இளைப்புற்று(ப்) பிட்டான் தாம் ஐந்துபுற்றே

(எ-து) இங்குச் சொல்லாத அவயவங்கள் தொடுகில் நீரில்லை என்றும், இவற்றில் தொட்டால் உப்புத் தண்ணீர் சிலமுளது. நீர் அற்பம் என்றும் கூறுவர். நீருள்ள தலம் புற்றுக் கருக்களைச் சொல்லும் வகை-கொடிப்புற்று, ஊமைப்புற்று, பாலிளைப்புற்று, ஆயிளைப்புற்று, பிட்டான்புற்று இந்த அஞ்சுபுற்றின் கருவைச் சொல்வேன் என்றவாறு.

## கொடிப்புற்று, பிட்டின்புற்று, ஆயிளைப்புற்று

11. ஐந்தில் கொடிப் புற்றின் கீழ் ஐ நாலு சாணில் நீராம்
ஐந்துசாண் தன்கீழோடு அப்பால் அப்பிட்டின் புற்றின் கீழ்
ஐமூன்றும் ஒரு சாண் நீராம் இரு நாலு சாணில் வெள்ளம்
தந்திடும் ஆயிளைக்குச் சாண் பன்னிரண்டில் நீரே

(எ-து) கொடிப்புற்று என்பது நெடிமை (மகளிர் கூந்தல்) போன்று ஒடுங்கி இருக்கும். அதன் கீழ் 20 சாணில் பெருநீர்

உண்டு என்றும் அதன் கீழ் 5 சாணுக்கு ஓடை தோன்றும் என்றும் சொல்வது. பிட்டின் (பிட்டான்) புற்றுத் தாழ்ந்து உருண்டை போன்ற கொடுமுடி உடையதாய் நிற்கும். அதன் கீழ் 16 சாணில் நீர் தோன்றும் என்றும் அதன் கீழ் 8 சாணுக்குப் பேரூற்று என்றும் சொல்வது. ஆயிளைப் புற்று என்பது அகன்ற கண்ணை உடைய தாய் வடவடக்கை போன்று கறையான் மொய்த்து ஆய்ந்து கொண்டிருக்கும். அதன் கீழ் 12 சாணில் நீர் தோன்றும் என்ற வாறு.

12. பன்னிரண்டு எட்டுச்சாணில் பரிந்து ஒருமாடம் தோன்றும்
முன்னிய அதன் கீழ் மூன்று முழத்தினில் செம்பாம்பு உண்டு
துன்னிய பாம்பு நீளம் ஒரு சாண் பருமைச் சொட்டை
தன்னைமுன் தோன்றிப் பால் வார்த்துப் புதைப்பதாமே

(எ-து) முன் சொன்ன ஆயிளைப் புற்றின் கீழ் 12 சாணில் நீர் தோன்றும் என்றும் அதன்கீழ் 20 சாணுக்குள்ளே மாடம் தோன்றும் என்றும் அதன் கீழ் 3 முழத்தில் செம்பாம்பு தோன்றும் என்றும் அந்தப் பாம்பு நீளம் ஒரு சாண் என்றும் சொட்டைப் (ஒரு வகை வாள்?) பருமம் என்றும் அந்தப் பாம்பை மண்ணுள் தோண்டிப் பால்வார்த்துப் புதைக்க என்றவாறு.

13. ஆம்பாம்பு தோன்றும் மூன்று முழத்தினில் தேரை தோன்றும்
தான் ஐம் பொன் மேனி வெள்ளை தனில் ஒரு பிடி சோறு உண்டாம்
தேம் போன்ற நீரதாகும் செங்கல் உண்டு உடையும் செவ்வே
மேம்படக் கரு நாயறு பெலியிட விளம்பினாரே

(எ-து) செம்பாம்பு தோன்றியதன் கீழ் 3 முழத்தினில் தேரை தோன்றும். அந்தத்தேரை ஐம்பொன் நிறமாக இருக்கும் என்றும் அதனில் ஒரு பிடி சோறு உண்டாய் இருக்கும் என்றும் (அதன் அளவு, ஒரு கைப்பிடிச் சோறளவு என்ற குறிப்புப் போலும்) தேன் நிறம் போல் நீர் தோன்றும் என்றும் சிவந்த வண்ணமாய் உண் டைக்கல் தோன்றி உடைபடும் என்றும் இதற்கு நாயிற்றுக்(ஞாயிறு) கிழமையில் (ெ)பலி செய்ய வேணும் என்றவாறு.

## ஊமைப்புற்று

14. விளம்புவர் ஊமைப்புற்றில் ஈரெண் சாண் அதனில் வெள்ளம்
வளம்படத் தோன்றும் இரண்டுதவளையும் கிடக்கும் அஞ்சு
முழம் தனில் ஓடைதோன்றும் முற்றிய விராலும் காணும்
தளம்படஉரைப்பர் பின்பு பாலிளைப்புற்றின் சார்வை

(எ-து) ஊமைப் புற்றின் கீழ் 16 சாணில் நீர் தோன்றும். அதில் இரண்டு தவளையும் கிடக்கும். அதன் கீழ் 5 முழத்தில் ஓடை தோன்றும். அதில் முதுவிரால் காணும் என்றும் அதின் மேல் பாலிளைப்புற்றின் சார்பு சொல்லுகிறோம் என்றவாறு.

## பாலிளைப்புற்று

15. சார்ந்திட அதன் கீழ் பன்னிரண்டு சாண் அதனில் நீராம்
பேர்ந்ததின் கிழில் ஐந்து சாணினில் பெருநீர் காணும்
சேர்ந்த அத்தலத்தில் இரண்டு தவளையும் அடைவாய்க் காணும்
தேர்ந்து பின் நீர் உண்டாகும் தலங்களைப் புகல்வர் பொன்னே

(எ-து) பாலிளைப் புற்றின் கீழ் 12 சாணில் நீர் தோன்றும். அதன் கீழ் 5 சாணில் பெருநீர் காணும். அதில் இரண்டு தவளையும் காணும். இது வன்னியில் (வரையில்) நீர் உண்டாகிய தலங்களைத் தேர்ந்து சொல்வது என்றவாறு.

16. பொன் அனைய மாரிக்காலம் பூடன் றன்றிச்சூடும் அந்நிலம்
தன்னைக் குற்ற ஐநாலு சாணில் வெள்ளம் தோன்றும்
மன்னிய மரமும் பூடும் புற்றினை வழுத்திப் பின்பு
நன்னிலம் ஐந்து மண்ணின் கருக்களை நவிலல் உற்றார்

(எ—து) கார் காலத்தில் சிறுமரக் கரு இல்லாமல், சூடு தோற்ற மாக இருக்கிற நிலத்தில் கிணறு குற்றில் 20 சாணில் வெள்ளம் உண்டு என்று மரக்கருவும் சிறுமரக்கருவும் புற்றுக்கருவும் சொல்லி இருப்பதால்-இனி அஞ்சு நிலத்தின் மண்ணின் கருக்களைச் சொல்லுகிறோம் என்றவாறு.

## குறிஞ்சி

17. நவிலுவர் குறிஞ்சி மாநிலத்து நன்மையைத்
துவர் சிவப்பும் கரிசலும் வெளுப்பும் தோன்றிடும்
அவணில மண்கண்டம் ஆறு சாண் அதாம்
கவர்வன் இரண்டு சாண் கரிசலும் காணுமே

(எ-து) குறிஞ்சிநிலம் ஏதுஎன்னில் துவர்ப்பாய் உள்ள சிவப்பும் கரிசலும் வெளுப்பும் தோன்றி இருக்கும் இந்த நிலத்துக்கு மண் கண்டம் 6 சாண். அதன் கீழ் கரிசல் 2 சாண் காணும் என்றவாறு.

18. காணும் எண் சாண் வெள்ளைப் பாருக்கு அப்புறம்
தோணுமாம் கொப்பரைக் கல்லும் முச்சாண் துளி
நாணிய கரும்சால் நாலு சாண் அப்புப்
பாண(ர்)நா வரிக்கல்லுப் பத்துச் சாண் அதே

(எ-து) கருசலுக்குக் கீழ் வெள்ளைப்பார் 8 சாண்.இதற்குக் கீழ் கொப்பரைக் கல்லு 3 சாண். இதற்குக் கீழ் கருமை பொருந்திய அப்புப்பார் 4 சாண் இதற்குக்கீழ் நராவரிக்கல்லு 10 சாண் என்ற வாறு.

## பாலை

19. பத்து மூன்றாக மூன்று சாணினில் பரக்கும் வெள்ளம்
தத்திய பாலை வெண்மண் சாம்பலும் அறு சாண் ஆகும்
ஒத்த அறு சாண் ஆம் வெள்ளைப் பாரும் நிற்குறும்
மத்தறு சாணின் மேல் வளரும் கொப்பரை

(எ-து) குறிஞ்சி நிலத்துக்கு 33 சாணில் வெள்ளம் தோன்றும் என்றும் இதன்மேல் பாலை நிலம் ஏது என்னில் வெளுப்பு நிற மாக மண்ணும் சாம்பலும் 6சாண். இதற்குக்கீழ் வெள்ளைப் பார் 6 சாண். இதற்குக்கீழ் கொப்பரைக் கல்லும் (நீரும்) 6 சாண் என்ற வாறு.

20. கொப்பரைக் கல்லு முச்சாண் கூடிய முத்துக் கல்லுக்கு
அப்புறம் பொன்னிறக்கல் அடுக்கடுக்காகத் தோன்றும்
ஒப்புடன் ஒன்பது சாண் ஆறு நால் ஆறு சாணில்
இப்படிப் பாலை; முல்லை இயம்புதி இனிய தேனே

(எ-து) கொப்பரைக் கல்லுக்குக் கீழ் முத்துக்கல்லு 3 சாண். இதற்குக்கீழ் பொன்னிற அடுக்குக்கல் 9 சாண். பாலை நிலத்துக்கு

30 சாணில் நீர் உண்டு. இதன் மேல் முல்லை நிலத்தைச் சொல்வோம் என்றவாறு.

## முல்லை

21. இனியதோர் நாங்குள் மண்ணும் குளர்மண்ணும் எழும்பி நிற்கும்
உனியும் மண்கண்டம் ஏழுசாணும் முச்சாணாம் செம்பார்
கனியும் அஞ்சாணாம் வெள்ளைப் பாரில் நீர் காணும் எண்சாண்
துனியும் கொப்பரையும் நாகவரிக் கல்லும் அறு சாண் தோன்றும்

(எ-து) முல்லை நிலம் ஏது என்னில் கரிசலாக நாங்குள் மண்ணும் குளர் மண்ணும் எழும்பி இருக்கும். மண்கண்டம் 7சாண். இதற்குக் கீழ் செம்பார் 3 சாண். இதற்குக்கீழ் வெள்ளைப்பாரும் நீரும் 5 சாண். இதற்குக் கீழ் கொப்பரைக் கல்லு 8 சாண். இதற்குக் கீழ் நாகவரிக்கல்லு 6 சாண் என்றவாறு.

22. தோன்றிய முத்துக் கல்லும் பொன்னிறக் கல்லும் தூயதால்
ஏன்ற சாண் ஆறின் மேலே கருமணல் ஓர்சாண் என்ப
போன்றது முப்பத்தாறு சாணினில் புகலும் நீர் என்று
ஊன்றினார் நெய்தலைப் பின் உரைத்தனர் ஒழுங்காய் மின்னே

(எ-து) நாகவரிக் கல்லுக் கீழ் முத்துக் கல்லும் பொன்னிறக் கல்லும் 6 சாண். இதற்குக்கீழ் கருமணல் ஒரு சாண். முல்லை நிலத்துக்கு 36 சாணில் புகலும் (அறியும்) நீர் என்றும், இதன் மேல் நெய்தலைச் சொல்லுகிறோம் என்றவாறு.

## நெய்தல்

23. ஒழுக்கமாய் மண்ணைத் தெள்ளிப் பாத்திடில் ஊறு பொன்னும்
தெளித்திடும் வெள்ளிச் சன்னம் சேர்ந்தது போலதாக
இருத்திடும் மண்சாண் எட்டு வெள்ளைப்பார் அதுவும் எட்டாய்த்
தளைத்திடு நீரும் மஞ்சள் பாரும் முச்சாண் அதாமே

(எ—து) நெய்தல் நிலம் ஏது என்னில் பளிங்கு நிறமாக இருக்கும் மண்ணைத் தெள்ளிப் பார்க்கில் பொன்னிறமாகவும்

வெள்ளைச் சன்னம் போலவும் இருக்கும். மண் கண்டம் 8 சாண். இதற்குக் கீழ் வெள்ளைப் பார் 8 சாண். இதற்குக் கீழ் மஞ்சள் பார் 3 சாண் என்றவாறு.

24. ஆனது ஓர் கரிமுகக்கல் சிப்பிக்கல் அடுக்காய்த் தோன்றும்
தான் இரண்டு எட்டுச் சாணில் தயங்கிடும் தண்ணீர் என்று
வானவர் உரைத்தார் ஐஏழ் சாணினில் வளமாய் வெள்ளம்
மான்அனாய் மருதம்என்னும் நிலத்தினை வளம்சொல்வாரே

(எ-து) மஞ்சள் பாருக்குக் கீழ்கரிமுகக்கல் 8 சாண். இதற்குக் கீழ் சிப்பிக்கல் அடுக்குப்பாரும் நீரும் 8 சாண். நெய்தல் நிலத்துக்கு 35 சாணில் பெருநீர்உண்டு என்றும் இதன் மேல் மருத நிலத்தைச் சொல்லுகிறோம் என்றவாறு.

## மருதம்

25. வளம் பரு மணலும் செங்கோல் அறுகுடன் வளரும் பீளை
தளை(மை)ந்திடும் கடலாடியும் தனித்தனி கலந்து நிற்கும்
குளி (ர்)ந்திடும் கோடைகாலம் குளிர்காலம் கமர் எழும்பும்
அளைந்திடும் மண்சாண் அஞ்சு சாணின் மேல்
வெள்ளைப்பாரே

(எ—து) மருத நிலம் ஏது என்னில் பரு மணலும் செங்கோல் அறுகும், பீளையும், நாயுருவியும் உண்டாயிருக்கும். கோடை காலம் தளைவாயிருக்கும். கார்காலம் சூடு தோன்றியிருக்கும். மண்கண்டம் 5 சாண். இதற்குக் கீழ் வெள்ளைப் பாரென்றவாறு.

26. வெள்ளைப்பார் நீரும் எண்சாண் மேவும் அப்புப்பார் சேர்ந்து
வள்ளிப்பார் பொன்னிறக் கல் விரவி ஒன்பது சாண் ஆகத்
துள்ளிப்பாய் நீரும் மூவேழ் சாண் ஒன்றில் தோன்றும்
அப்பார்
தெள்ளிப்பார் கிரக ஓரை குணங்களைச் செப்பலுற்றாம்

(எ—து) மண் கண்டத்துக்குக் கீழ் வெள்ளைப்பாரும் நீரும் 8 சாண். இதற்குக் கீழ் அப்புப்பார் சேர்ந்து வள்ளிப்பார் பொன் னிறக் கல் விரவி 9 சாணில் பெருநீர் உண்டு. மருதநிலத்துக்கு 22 சாணில் பெருநீர் உண்டு என்றும் அப்பால் கிரக ஓரையின் குணங்களைச் சொல்லுகிறோம் என்றவாறு.

## நாள், திதி, ராசி, கோள், பலன்

27. சுற்றம் உத்திரங்கள் கேட்டை சோதி சித்திரைபார் ஓணம்
மற்றமான்தலை பூராடம்மகம் ஐந்து ஏழ்மூன்றுபன்னொன்று
ஏற்ற பன் மூன்றும் ஒன்றும் திதி ஓரை குடமீன்கேது
குற்றிய எருது நண்டில் குளம் குளி கூவல் நன்றே

(எ-து) உத்திரம்—உத்திராடம்—உத்திரட்டாதி—கேட்டை—சோதி (சுவாதி)—சித்திரை—ரோகணி—திருவோணம்—அத்தம்—மிறுகசீரளம்—பூராடம்—மகம் இந்நாட்களும் பஞ்சமி—சத்தமி—திதிகை—ஏகாதேசி—திரையோதசி—பிறதமை—இத்திதிகளிலும், கும்பம்—மீனம்—மகரம்—இடபம்—கற்கடகம் இவ்ராசிகளிலும் குளம், தெற்(ப்)பம், கிணறு வெட்ட நன்று என்று உள்ள முடையானில் சொன்னவாறு.

28. கால மான்தலையே கேட்டைகைமுதல் நான்குஓணத்தோடு
ஏலும் மூன்று அறிவனும் மூன்று இருபூசம் மூன்றும் சால
கோல் சேல் சுறாவிடை நண்டு இந்து புகாராச் செழுநீர் உண்டாம்
நாலு உதை ஆருடத்து நற்கோளின் நன்மை சாற்றே

(எ-து) மிறுகு—சீரிளம்—கேட்டை—அத்தம்—சித்திரை—சோதி—விசாகம்—திருவோணம்—அவிட்டம்—சதையம்—உத்திரட்டாதி—ரேவதி—அசுபதி—புணர்பூசம்—பூசம்—ஆயிலியம் இந்நாட்களும், கும்பம்—துலாம்—மீனம்—மகரம்—இடபம்—கற்கடகம் இவ்விராசிகளும் திங்கள்—வெள்ளி—பாம்பு இக்கோள்களும் நீர் உண்டென்பது.

இவையில் பாவக்கிரகங்கள் நோக்கில் நீரில்லை என்பது. ஊற்றுக்கு உள்ளும் கோள், இராசிகளுக்கு அடைத்ததிருகிலே ஊற்றென்பது. ஆற்று நீர் வரவுக்கெல்லாம் உதையாருடங்களும், ஏழாம் இராசியாலும் பலன் சொல்வது வருசத்துக்குப் பத்தாம் இராசியால் பலன் சொல்வது. இவ்வகையால் பலன் சொல்வது என்றவாறு.

## கதிர்

29. சார் கதிர் சுடர் (ஈர்) எட்டுச் சந்திரன் நாலு உருசேய்பத்து
ஓர்புதன் ஒன்பான் பொன் ஏழ் புகர் ஐந்து சனி மூவேழாம்
ஊர்அரா ஒருபத்து அஞ்சாம் உச்சம் சாண் முழமாம் ஆச்சி
பார் இலாள் மட்டு நட்பாம் பகை நீசம் தூரம் பாவாய்

(எ-து) ஆதித்தனுக்குக் கதிர் 16, சந்திரனுக்குக் கதிர் 4, செவ்வாய்க்குக் கதிர் 10, புதனுக்குக் கதிர் 9, வியாழனுக்குக் கதிர் 7, வெள்ளிக்குக் கதிர் 5, சனிக்குக் கதிர் 21, பாம்புக்குக் கதிர் 15 இக்கிரகங்களுக்கு உச்சமாகில் சாண் என்றும், ஆச்(ட்)சியானால் முழம் என்றும் நட்பானால் மட்டு என்றும் பகை நீசங்கள் ஆகில் தூரம் என்றும் சொல்வது.

நற்கோள் வரில் வெட்டு எளிது என்றும், தண்ணீர் நல்லது என்றும் சொல்வது. தீக்கோள்வரில் பாறை என்றும் தண்ணீர் தீது என்றும் சொல்வது என்றவாறு.

30. பாரறை நாவேழ் தென் கீழ் பனை வைத்துப் பன்னேழ் நாற்சூழ்கனித்
தேர்வலம் இதன் மேற்கு ஈசன் முதல்வடக்குஒருநான்கு எண்ணிச்
சீர்மகம் தென் மேற்காகத் தெற்கோடு கிழக்கும் எண்ணி
நீர்மதி நின்ற நாள் பின் நிருதிமேல் நிறுத்து விட்டம்

(எ-து) சிறுகாலே மேற்குப் பாத்திருந்து உற்ற நிலத்திலே கீழ் மேல் ஏழுவரையும் தென் வடல் 4 வரையும் கீறி இருபத்தெட்டு அறை ஆக்கி, இவ் அறைகளில் தென் கீழ் மூலை அறையிலே அனுசத்தை நிறுத்தி—வலமாகப் பதினேழு நாள் அவிசித்துள் பட மகயிரம் அளவும் எண்ணி இதன் மேலறையிலே திருவாதிரையை வைத்து வடக்கு நோக்கி 4 (இ) ஆயிலியம் அளவும் எண்ணி இதன் மேல் அறையிலே மகத்தை நிறுத்தித் தெற்கு நோக்கி அஞ்சறை சித்திரை அளவும் எண்ணிப் பின்பு—கிழக்கு நோக்கி சோதி, விசாகம் என்று எண்ணி இருபத்தெட்டு நட்சத்திரத்தையும் இருபத்தெட்டு அறையில் நிறுத்துவது. உச்சிக்குப் பின்பு தென் வடல் எழுவரையும் கீழ் மேல் நாலு வரையும் இருபத்தெட்டறை ஆக்கி, தென் மேல் மூலையிலே அவிட்டத்தை வைத்து, முன்பு எண்ணினாற் போல எண்ணி இருபத்தெட்டு நட்சத்திரத்தையும் இருபத்தெட்டறையில் நிறுத்துவது என்றவாறு.

31. விட்டம் முன் பாலை வாயு வாரலே மகம்பின் மாலை
நெட்டசரா நிறுத்தி முன் போல் நினைந்து இரு சக்கரத்தால்
வட்டநாற்காலம் தோன்றும்திசை மாறி மகம் மேல்தோன்றும்
முட்டினம் வைத்துச் சோமன் உற எண்ணில் நிறை நீர் உண்டாம்

(எ-து) இராமுன் போதுக்கு, பகல் முன் போது கீறினாற் போல கிழக்குப் பார்த்திருந்து கீறி-வடமேல் மூலை அறையிலே கார்த்திகையை வைத்து முன்பு போல எண்ணிக் கொள்வது. இராப்பின் போது, பகற் பின் போது போல கீறிவிட கீழ் மூலையில் மகத்தை வைத்து முன்பு போல எண்ணி இருபத்தெட்டு நட்சத்திரத்தையும் இருபத்தெட்டு அறையில் நிறுத்துவது. இப்பட்சம் நாலு போதும் எண்ணினால் அன்று சந்திரன் நின்ற ராசியைச் சந்திர லக்கனம் என்றும் பேராம்.

சந்திரன் நின் ராசி சந்திமுபையம் என்று அறிந்து, சுக்கிரன் நின்ற ராசி சாதிரமுபையம் என்று அறிந்து அற்றைப் பிரதானமாகிய முழுநாட்களில் ஒன்றை நிறுத்தி அன்று சந்திரன் நின்ற நாள் அறை அளவும் எண்ணுவதும் சுக்கிரன் நின்ற நாள் அறை அளவும் எண்ணுவது பெருநீர் என்று அறிவது. இராகு நின்ற அறையளவும் எண்ணுவதும்—பழங் கிணறு என்று அறிவது. உத்திராடத்தின் பின்பு அவசித்து நிறுத்துவது, முன்பு சொன்ன அனுசம் முதலான நாட்கள் எல்லாம் இரண்டே அரைக்கால் நாழிகையில் பெறும் என்பது. வியாழன் நின்ற அறையளவும் எண்ணுவது பூமிசல்லியம் என்று அறிவது என்றவாறு.

32. தோன்றிய மேடம் ஆதி மீனம் ஈறாகச் சோமன்
ஏன்ற பேர்க்கு இருப்புப்பூசல் ஏழில் மறை பயிற்றல் பிள்ளை
ஊன்று நோய் கனியே கேடு பசிஉளை உறக்கம் மூணாம்
வான்றசா மதி குணத்தால் வரும் அவர் பலம் வ...த்தே

(எ-து) மேடத்தில் சந்திரன் நடக்கும் இடபத்தில் இருக்கும் மிதுனத்தில் பூசல். கரி கடகத்தில் வேதம் ஓதல். சி...ற்பிள்ளை கன்னியில் நோய், துலாத்தில் களிப்பு - விருச்சகத்தில் கேடு, தனுவில் பசி. மகரத்தில் அனு .....உறக்கம். மீனத்தில் ஊன்...... யாபனொருவன் சாரியம். வினாவி வந்த போது சந்திர கீர்த்தியை...... இதனாலுள்ள பலன் சொல்வது என்றவாறு.

சந்திர கீர்த்தி முற்றும்

---

திருவனந்த புரத்தில் உள்ள கேரளப் பல்கலைக் கழகச் சுவடிகள் நூலகத்தின் 6349 எண்ணுள்ள ஏடு இது.

ஆ

# கூவல் சாத்திரம்

I

## நிலக்கரு

1 பாரப்பா கூவல் இட மார்க்கம் சொல்வேன்
பண்பான குறிஞ்சி நிலம் சிவப்பதாகும்
சாரப்பா பாலை நிலம் வெளுப்பும் ஆகும்
தப்பாது முல்லை நிலம் கருப்பும் ஆகும்
வாரப்பா மருத நிலம் மணலே ஆகும்
வாகான நெய்தல் நிலம் கசிவே காணும்
சீரப்பா குறிஞ்சி முழம் பதினாறுக்கே
சிறப்பாக சில கசிவு காணும் ஆங்கே

2 காணுமே பாலை நிலம் பதிமூன்றுக்கே
காணுமடா நீர்க்கசிவுக் கடினம் மெத்தத்
தோணுமடா முல்லை முழம் பதினெட்டுக்கே
தோன்றுமடா தண்ணீர்தான் சுருக்கம் ஆகும்
தாணுவா மருதம் முழம் ஒன்பதுக்குள்
தண்ணீர்தான் மெத்த உண்டு தயவாய்ப் பாரு
நீணிலே நெய்தல் முழம் ஏழுக்கு உள்ளே
நேயமாய் வெகு தண்ணீர் உண்டு காணே

## மரக்கரு, புற்கரு

3 மரக்கருவின் வகை விபரம் கேளு கேளு
மாவிலங்கம் மருது புளி இலுப்பை நொச்சி
உரமான அரசு ஆல் அத்தி என்றும்
உத்தமனே ஆவரை பால் சோட்டி வஞ்சி

கரமான நவ்வல் நிலை பாலை பூலாம்
காட்டினோம் புறக்கருசின் கருவைக் கேளு
வரமான சிறுபூளை சாரணை தான் நாணல்
வடிவான கடலாடி மைந்தா கேளே

4 கேளப்பா குறுஞ்சடை புல்லு அறுகு செங்கோல்
கெடியான பொடுதலையே வேலா நெற்சடை
நாழப்பா நாயுருவி எருக்குள் பூலா
நாட்டிலுள்ள துளசி சீதேவி என்னும்
சூழப்பா செங்கழுநீர் கோரை சரும் புல்லுத்
தோன்றுமடா முன் மூன்றில் சிலந்தான் காணும்
வாழப்பா பிராத்தி ரெண்டு நிற்கும் ஆகில்
வளியாக முழம் மூன்றில் ஒடை ஆச்சே

5 ஆச்சப்பா அதின் கீழே முழத்திலே தான்
மழியுடன் குமிழி உண்டாம் பெரு நீராகும்
நீச்சப்பா வெள் எருக்குத் தனியே நின்றால்
நின்ற இடத்தில் மூன்று முழத்தில் ஓடை தோன்றும்
வாச்சப்பா முழம் நாலில் தேரை தோன்றும்
மைந்தனே வெகு தண்ணீர் உண்டா மென்னு
காச்சப்பா கான்றிதுடா நவ்வல் நின்றால்
காணும் முழம் மூன்றில் கசிவுப் பாரே

6 கசிவு நின்ற முழம் அஞ்சில் வெகு நீராகும்
கருத்துடனேசத்துநீர் எடுத்துக் கொண்டும்
மசியநீர் சொரிய விடம் தீரும் அப்பா
வான் பெரிய நீரரிந்த எலி கடியும் தீரும்
வசியமுடன் நாலாம் நாள் மாறல் தீரும்
வந்த வெற்(ப்)புத் தீரும் அது சிலம் கண்டிக்கும்
நசியமுடன் புங்காதல் பூலா ஆதல்
நயமாக நின்ற இடம் முழந்தான் மூன்றே

7 தான் கசிவு நீளம் அஞ்சில் பெரு நீர்க் கேணி
தன் நிலத்தில் சிலந்தி படர்ந்து இருக்குமாகில்
ஊனம் இலா முழம் மூன்றில் நீர்தான் தோன்றும்
உத்தமனே வெள்ளெலிதான் உடும்பு தேரை

ஈனமிலா ஒந்தி இவை ஊரும் ஆகில்
இந் நிலத்தில் பெரு நீராம் முழம் ஐந்துக்குள்
மானமிலா செம் பாம்பு தோன்றும் ஆகில்
வளமான அதின் கீழே முழம் தான் மூன்றே

8 மூன்றில்லது நீர் தோன்றும் முன்னீர் கொள்ள
முடியாத விடம் தீரும் வெள்ளெலியும் தேள் உடும்பு
வான்றி வலக்கால் உடனே சஞ்சரிக்கும் இடந்தான்
வயங்கமது மூன்று முழம் பெருநீர்க் சேணீர்
ஆன்ற இவை வாழும் இடம் தன்னிலே தான்
வாகான கீழ் ஆறு போகும் அப்பா
ஆன்ற புத்துக்கருச் சொல்வேம் நன்றாய்க் கேளு
வளமான கொடிபுத்து வழங்கும் என்றே

## புற்று கரு

9 வழங்கும் எனும் பிண்டியது ஆமைப்புத்து
மைந்தனே வினைப்புத்து பல கண் அஞ்சு
உழங்கமது தொந்திப்புற்று இவைதாம் எண்ணும்
சார்வாகக் கொடிப்புத்து முழமே மூன்றில்
கழங்கம் இல்லாது அவ்விடத்தில் ஓடை தோன்றும்
கண்டிக்கும் அதின் கீழே ஒன்பதுக்குள்
முழங்கமது பெருநீராம் பனிரெண்டுக்குள்
மோசம் இல்லை பிண்டிக்குச் சொல்வம் என்றே

10 சொல்லுவேன் வெள்ளோடை தோன்றும் முழம் நாலில்
சுகமாக நீர் தோன்றும் ஓடை உண்டு
வெல்லுவேன் தினம் மூன்று முழத்தில் மாடம்
மேன்மையதாய்ச் செம்பாம்பு தோன்றும் அப்பா
தொல்லுலகில் முழம் மூன்றில் தேரை தோன்றும்
தோற்றமடா வெங்கல்லுப் போன்று இருக்கும்
பொல்லும் முழம் அதின் மூன்றில் பெருநீர் ஆகும்
பொங்கு முழம் பதிமூன்றில் மொரு (ஒரு) கண்புத்தே

11 புத்துக்குள் முழம் ஏழில் ஓடை தோன்றும்
போது அரவாய் முழம் மூன்றில் தவளை தோன்றும்
மத்துக்குள் பல கண்ணில் முழம் தான் ஏழில்
பாங்கான ஓடை அது தோன்றும் அப்பா

சித்துக்குள் முழம் மூன்றில் பெரு நீர் ஆகும்
சிறப்பான முழம் பத்து ஊமைப்புத்து
கொத்துக்குள் முழம் மூன்றில் வெகு நீர் தோன்றும்
கோது அறவே முழம் அஞ்சில் ஓடைகாணே

12 ஓடையது முழம் அஞ்சில் பெரு நீர் ஆகும்
உத்தமனே ஆக முழம் பதிமூன்று அப்பா
வாடையது தோடப் புற்று பிண்டிப் புத்து
வல்வினைப் புற்று அவ்விடத்தில் வயங்காது ஒன்றும்
நாடரி(றி)ந்து சூட்டுப் புற்று அவ்விடத்தில்
நயமாக வெட்டடக்கு முறியே காணும்
வீடரி(றி)ந்து முழம் ஏழில் மாடம் காணும்
மேன்மையதாய் முழம் ஏழில் பேறுக் காணே

## தொடுகுறி

13 இத்தனையும் பகுத்து அறிந்து சொன்னோம் அப்பா
இனிமேலாய்த் தொடுகுறியின் விபரம்கேளு
கத்தனே சிரசு தொடில் சிலமும் இல்லைக்
கண் தொட்டால் நீர் உண்டாம் கருதிப் பாரு
வித்தகனே முகம் நெத்தி நெஞ்சு தொடில் அற்பம்
வெட்டு அரிது வயறு தொடில் புட்டுப்போல
சித்தனே வடமேற்கு மூலை தன்னில்
சிறப்பாகக் குழி தோண்டித் திரமாய்ப் பாரே

14 பாருலகின் கீழ் மூன்று முழமே வெட்டப்
பாங்காகக் காணிச் செய்வினையும் அப்பா
காரென்றும் நீர் உண்டாம் குர(ரு)ங்கு முழங்கால் கண்
கருதியதோர் உள்ளங்கால் தோள்பிடரிகாது
சீர் என்றும் இவை தொட்டால் நீரோ இல்லை
திர(ட)மாக இப்படியே தெரிந்து சொல்வாய்
வார் இறுகு முலைமாதே மழைக்காலத்தில்
வடிவாக வெரிச்ச நீர் காணும் ஆங்கே

## கூபத்தின் இயல்பு

15 கொண்டல் எனும் காலங்கள் குளிர்ந்திருக்கும்
கொடியான மதியத்தில் நேரம் பார்த்து
கண்ட இடத்து அவ்விடத்தை வெட்டினாக் கால்
காணுமடா நல்ல தண்ணீர் காணும் காணும்

கண்ட அந்தி காலத்தில் வெட்டினாக்கால்
கடுத்த தண்ணீர் உண்டாகும் குணந்தான் பாரு
விண்டல் எனும் கூபத்தில் இயல்பு தானும்
விரிவாக மெத்த உண்டு வியந்து பாரே

## கிரகபலன்

16 நீர் காட்டும் நிலம் அதனை பன்னிரு கூறிட்டு
நிக(ழ்)த்துகின்ற ராசி தன் பிரம்பன் மேல் வைத்து
வார்காட்டு முலை மாதே வலம் இடமா எண்ண
மதி வெள்ளி குருவு திக்கில் விடமே நீராம்
பார்காட்டும் பாம்பு ஆகில் பழைய கிணறு என்றும்
பருதி மதி செவ்வாய் நீரில்லை என்றும்
கார்காட்டும் புதன் ஆகில் கல்லுண்டு என்றும்
கருதியதோர் நீர் வரவு காட்சி தானே

கூவல் சாஸ்திரம் முற்றும் முற்றும். தெண்டாயுதபாணி ரட்சிக்கவும்.

ஸ்ரீராம செயம் ஸ்ரீராமசெயம் ஸ்ரீராமசெயம்

(தொகுப்பு) குறிஞ்சி நிலம்—சிகப்பு, பாலைநிலம்-வெளுப்பு, முல்லை நிலம்-கறுப்பு, மருதநிலம்—மணல், நெய்தல்நிலம் கசிவு.

குறிஞ்சி 16 முழம்-கசிவு; பாலை நிலம் 13-கசிவு; முல்லை 18-கசிவு; மருத நிலம் 9 கசிவு; நெய்தல் நிலம் 7-கசிவு.

மாவிலங்கம், மருதம், புளி, இலுப்பை, நொச்சி, அரசு, அத்தி, ஆவரை, பால்சொட்டி, வஞ்சி, நவ்வல், நிலைபாலை, பூலாம், சுறு பூளை, சாரணை, நாணல்,கடலாடி,குறிஞ்சடைப்புல், அறுகு, செங்கோல், பொடுதலை, வேலா, நெற்கடை, நாயுருவி, உள்பூலா, துளசி, சீதேவி, செங்கழுநீர், கோரை, கறும்புல்லு இவை இருந்தால் 9 முழத்திலே சிலம் காணும். 3 முழத்தில் ஓடைவிழும். அதுக்குக் கீழ் 7 முழத்தில் குமிழி உண்டாம், பெரு நீர் ஆகும்.

வெள்ளெருக்கு நின்றால் நின்ற இடத்திலே 3 முழம் ஓடை, 4 முழத்தில் தேரை தோன்றும், வெகு தண்ணீர் உண்டாகும்; துளசி, நவ்வல் நின்றால் 3 முழத்திலே கசிவு தோன்றும். அதின்

கீழ் ஐந்து முழத்தில் வெகு தண்ணீராகும். புங்கு பூலாவாதல் நின்றால் மூன்று முழத்தில் கசிவு தோன்றும். அதின் கீழ் 5 முழத்தில் பெரு நீராகும்.

சிலந்தி படர்ந்து இருந்தால் 3 முழத்தில் சிலம் காணும். வெள்ளெலி, உடும்பு, தேரை, ஓந்தி இவை கண்டால் 5 முழத்தில் பெரு நீராகும். செம் பாம்பு கண்டால் அதின் கீழ் 3 முழத்தில் செலம் காணும் வெள்ளெலி, தேள், உடும்பு, மான்றி, வலக்காலி சஞ்சரிக்கும் இடம் ஆகில் 3 முழத்தில் பெரு நீராகும். வாழும் இடமானால் கீழ் ஆறு உண்டாம்.

ஸ்ரீராம செயம்

II

## கீழ் நீர் சல்லியல்

1. குடமீன் மகரம் கடகம் தேளோ கொல்
 நெடு நீர் சலத்தின் வடிவாம்
 மடவாய் பாரை சுங்கன் ஆகிற பெரு நீர்
 பொன்புந்தியாரை சின்னீராம் என்று அறி

(எ-து) கிணறு வினவினபோது கும்பம், மீனம், மகரம், கற்கடகம், விரிச்சிகம், இடபம், துலாம் இவை சலராசி. இந்த ராசி ஆருடமாக வினவில் அவன் நின்ற அந்த இடத்தில் நீர் உண்டு என்க. இந்த ராசிகளில் சந்திரன் வெள்ளி நிற்கிலும் பெரு நீர் உண்டு என்க. கடகத்தில் சந்திரன் நிற்கிலும் துலாத்தில் வெள்ளி நிற்கிலும் அப்படியாம். இந்நிலங்களில் வியாழன், புதன் நிற்கிலும் சின்னீர் உண்டு என்க.

2. நீர் நிலமும் நீர்க்கோளும் சேரில் அந் நீர் நிலம் மேல்
 பார் இடைய ஊத்தாகப் பரிந்துரைக்க ஒருங்கால்
 நீர் நிலமாய் நீரில் கோள் நின்றிடுகில் நிச்செயமேல்
 ஓரு(டு)ம் கீழ் நீர் என்றோது

(எ-து) சலராசியும், சலக்கோளும் உதை ஆருடக் கவிப்பிலும், கணங்களிலும், நோக்குகளிலும், பெலவான்களாய் நின்றனவாகில் மேலூற்று நீராம். செலராசியில் நீரில்லாத கோள்கள் நிற்கில் ஆழத்தில் நீராம் என்க.

3. காரி இரவி சேய் காணிலிம் நீரில்லை
நீர் அரவு காணில் நெடுநீராம்-நீருடைக்கோள்
கீழாய் நிற்கில் கீழ் மேலாகின மேலென்று
தாழாதிவை அறிந்து சாற்று

(எ-து) முன் சொல்லப்பட்ட ராசிகளில் சனி, ஆதித்தன், செவ்வாய் நிற்கில் நீரில்லை பாம்பு நிற்கில் நீர் உண்டு என்க. நீர்க்கோள் ஆகிய வெள்ளி, சந்திரன், புதன், வியாழன் இவை முற்பக்கத்திலே நிற்கில், இவையிற்றைக் கவிந்த ராசிகளில் செவ்வாயும் சனியும் ஆதித்தனும் நின்று கவிக்கில்-கீழ் நீர் உண்டு. மேல் நீர் இல்லை. ரட்டுக்கிணறு ஒரு நீர் உண்டாம் என்றவாறு.

4. சுற்றிய நீர் கோள் கீழாக நீருடைக்கோள்
முற்றிஉடன் வந்தெனாம் ஆகில் உற்றுரவு
மேல் நீர் கீழ்நீர் இல்லை அல்லாதபோதும்
காற்காரே நீல்லையே காண்

(எ-து) ஆரூடத்தில் ஆவது, நீர்க்கீழ் ராசியில் ஆவது நீரில்லாத கோள் நிற்க,கவிக்கிற ராசியிலாவது,உதையத்திலாவது நீர்க்கோள் உண்டாகில் மேல் நீர் உண்டு. கீழ்நீர் இல்லை. மேல் நீராவது சலம் தோன்றிப்போம் எனவும் ஆம். பாம்பும் இப்படி வருகில் இதுவே பலன் என்பது. கவிக்கிற ராசியிலும் உதையத்திலும் நீரில்லாத கோளே ஆகில் நீரில்லை ஆரூட ராசியிலும் நீர்க்கோள் ராசியிலும் நீர்க்கோள் நிற்கில், நீரில்லாத கோளாய் இப்படி வரும் எனவும் விசாரித்துச் சொல்வது.

5. பொன்னோன் மதியும் புண(ர்)ந்து ஒரு கண்டத்தில்
துன்னிக் கிணறு அதுவே தூய் நீராம் மன்னு
மதி வெள்ளி உண்டேல் மலை மேலும் தண்ணீர்
விதி வகை உண்டாதல் விளம்பு

(எ-து) வியாழனும் சந்திரனும் கண்டத்தில் நிற்கில் கிணறு தூய நீர் என்க. சந்திரனும் வெள்ளியும் உதையத்தில் நிற்கில் மலை மேலும் தண்ணீர் உண்டு என்க. இது அன்றியே சந்திரனும் புதனும் ஒரு கண்டத்தில நிற்கில் அவ்விடத்தில் பழங்கிணறு உண்டு எனவும் சந்திரனுடைய ராசியில் பரிவேடம் நின்றது ஆகில் பெருநீர் உண்டு என்று சொல்வாரும் உளர்.

6. சாரதியும் பீதகனும் சந்திரனும் கண்டத்தில்
ஊரில் பழங்கிணறு அங்கு உண்டாகும் தேரில்
பரிவேட நுட்பங்கள் கண்டாலும் உண்டேல்
உரிதாகக் கூட்டில் உரை

(எ-து) புதனும் வியாழனும் சந்திரனும் ஒரு கண்டத்தில் நிற்கில் பழங்கிணறு என்க. சந்திரன் நின்ற ராசியில் பரிவேட நுட்பங்கள் இவை உண்டாகிலும் பெரு நீர் உண்டென்க.

7. வில்லொடு வட்டம் வியன் தூம நுட்பங்கள்
சொல்லில் பழங்கிணறும் ஓடைகளாம்-மெல்லியலாய்
சுங்கன் மதியாகில் சோர்வின்றி நீர் உண்டாம்
சங்கையில் அவ்வகையால் சாற்று

(எ-து) வில்லும் வட்டமும் (பிரிதி) சூரியன் தூமம் இவை கண்டங்களில் உண்டாகும் பழங்குழியும் ஓடையுமாம் கண்டங்களில் வெள்ளியும் சந்திரனும் உண்டாகில் பெருநீர் உண்டு என்க. நீர்கீழ் கண்டமும் உதைய கண்டமும் விசேஷம் என்பது. இது அன்றியே உதைய ஆருடங்களிலும் செலராசிகள் நாட நிவர் வருகிலும் இப்படிப் பலன் என்பாரும் உளர்.

8. கரியவனும் பாம்பும் அவர் காண் பெருநீர் கோழை
அரிதாம் பொன் ஆகில் அது கல்லாம் உரிய
பிற கோள்கள் நோக்குமேல் என்பாரும் என்றே
சிறப்பொடு கேட்டவற்குச் செப்பு

(எ-து) சனியும் பாம்பும் நோக்கில் பெருநீர் உடைய கோழையாம். வியாழன் நோக்கில் கல்லாம். வெட்டாது சலக் கோளான திங்கள் நோக்கில் எலும்புமாம் என்க. இதுவன்றி சலராசியிலே சலக்கோள்கள் இவை நோக்கிலும் எலும்பு என்றும், எலும்பு போன்ற இடம் வெட்டும் இடுக்குள்ள இடம் என்பாரும் உளர்.

9. நல்ல கோள் நன்னயத்தால் நோக்குமேல் பூமியது
சொல்லிற்று அன்றே யாரஞ் சோர்வின்றிச் - சொல்லாற்
கடுங்கோட்கடு நிலமாய்க் காணில் நிலமும்
விடுங்காண் அவனை விரைந்து

(எ-து) நற்கோள், நன்நிலத்து நட்பு ஆச்(ட்)சி உச்சங்களோடும் நின்று நோக்குதல் செய்யில் நீர் உண்டாம். பூமியும்

தன்னுடையதே ஆம். தீயக்கோள்கள் செல்ராசி இல்லாத நிலத்து பகை நீசங்களில் நின்று நோக்கில் விபரீதமான தண்ணீரும் இல்லை, பூமியும் இவனை விட்டுப் போம் என்க. சலம் இல்லை என்பது.

10. கோட் பொடிந மாண்யைக் கூடுவதே - தீயக்கோளும்
மூட்காது பூமி உடையார் பிறராம் - மூட்காது
நின்னாம் கொள் தாமுதித்த நோக்குமே நன்நீசம்
குன்றாப் பலன் கொடுத்தல் கூறு

(எ-து) கோட்பு இராசியும் இரு மாண்பு இராசியுமாய் இவ் இராசியில் தீயக்கோள் நிற்கில், அது நோக்கில், வினவில் பூமி... என்க. திறராசியுமாய் நற்கோள் நிற்க அதுவே நோக்குமாகில் பூமியும் தன்னுடையதே ஆம்—பலன் கொடுக்கும் என்பது. உதை ஆருடக் கவிப்பு நோக்கில் கண்டங்களிலும், நட்பு, ஆச்(ட்)சி, உச்சங்களிலும், வலிய கோளாலும் பலன் சொல்வது. பார்த்து வலிய இராசியாலும் தீயக்கோள் நிற்கில், தீயக்கோள் வினவில் தண்ணீர் இல்லை. நற்கோள் நிற்க, நற்கோள் நோக்க வினவில் தண்ணீர் உண்டு என்பாரும் உளர்.

11. வெள் உவரி செயக்கு மிகவும் கரையழிவும்
ஒள்ளிய மேதை உளதாமே - ஒள்ளிய
கோதை அரிதண்டு கூடில் அவை ஊற்றாம்
ஓதியவை எல்லாம் உரை

(எ-து) செவ்வாய்க்கு வெள். உவரி நீராம். புதன் ஆகில் கரையும் வழியும். கன்னி, சிங்கம், மிதுனம் ஆகில் இடை ஊற்றாம். இது அன்றி இந்த இராசியில் தீயக்கோளும் உதையம் ஆருடமாகிலும் இந்தயில இருந்த கோள்கள் நின்று நோக்க உடன் வலிபெறினும் இது பலம் என்பாரும் உளர்.

12. உப்பு வறியாம் கதிர் கட்குள்ளு வறிவட்டமே
செப்பும் கிணறும் சிதையாது — ஒப்பில்
மதிபுந்தி தண்ணீர் வரி இடாதென்று
விதியாலே மேல்நீர் விளம்பு

(எ-து) ஆதித்தனுக்கு உப்புக் கூர்த்த உவர் நீராம். அவ் வழவு வட்டத்துக்குள்ளே ஆம். இது அன்றி ஆதித்தனுடனே பரிவேடம் அந்த ராசியில் நிற்கில் - ஆதித்தனுக்கு ஓதப்பட்ட

அளவிலே கிணறுமாம் என்பது - விசாரித்துச் சொல்வது. சந்திரனும் வெள்ளியும் செலராசியில் நின்று வலி பேரில் தெளிந்த சலமாம். பெருநீர் உண்டு என்றும் சொல்லுக. மலை மேலும் தண்ணீராம். மேல்நீர் உண்டென்பது. இதுவன்றி மற்றும் சல ராசியிலே சலக்கோள் வலிபேரில் நீர் உண்டாம் என்ற இடத்தில் செலம் மேல் நீர் என்பது. சலக்கோள் நோக்குடன் சொல்லுவது நல்ல தண்ணீரும் என்பது.

13. தூதன் சனிகடை நீர் தூய மதிக்கு முன் நீராம்
ஏது பகலவனுக்கு எண்முழம் நீர் தீதகன்ற
கன்னியுடன் பாம்பு உற்றால் பாரகும் காரிகையார்
எண்ணில் இடை எரிக மடாம்

(எ-து) புதன் சனி கடை நாள் நீராம் இது அன்றிக் கும்பம், மீனங்களில் நின்ற புதனுக்கும் சனி செலராசியில் நின்று வலி பேறில் - இப்படி பலன் என்பது - விசாரித்துச் சொல்வது சந்திரனுக்கு முன் நீராம். ஆதித்தனுக்கு எட்டு முழத்திலே நீராம். கன்னிராசியில்-பாம்பு வரில் பாறை இடை ஊற்றாம். செவ்வாய்க்கு வலுவு-தனுவில் - வியாழனுக்குக் கல்லுப்படும் என்பது. இந்தக் கோள்களுக்கு ஓதப்பட்ட கதிர்களை அறிந்து-முதல் இடை கடை எனவும், சலம் வருகிறது-சடுதி எனவும் நாலு நாளையிலே ஆம் எனவும் வெட்டு முகிந்த கடையிலே என்றும்-கல்லுப்படும். ஆகாது என்றும் விபரமாய் விசாரித்துச் சொல்வது.

## ஆழம் அறிதல்

14. கூவலின் ஆழம் குறிக்குங்கால் கோளோடு
மேவும் இராசி வியன் கதிர்கள் மேவிய
சிக்செனவே-ஆழம் சிறந்தஅவை சேதிக்குத்
தக்கக் கதிர் அறிந்து சாற்று

(எ-து) கீழ் நீருக்கு ஆழம் சொல்லும் இடத்து உதையராசி முதலாக திரிகோணங்களிலும், கண்டங்களிலும் நோக்கிலும் ஆருடக் கவிப்பிலும் வலிபெற்ற ராசியின் கதிராலும், கோளின் கதிராலும் சென்ற கதிர்கள் நீக்கி நின்ற கதிர்களுக்குள்ள முழம் முச்சாணும் சொல்லுக. கவிப்பு ஆட்சி, உச்சம், பகை நீசம் அறிந்து சொல்வது இதுவன்றி இவர்களுக்கு ஓதப்பட்ட கதிர்கள் உச்ச நிலமாகில் சாண் என்றும் ஆச்(ட்)சி யாகில் முழம், நட்பு,

ஆச்(ட்)சி உச்சமாகில் ஆழம் மட்டு என்றும் பகை நீசங்களில் ஊற்றாம் என்றும் சொல்வது.

15. செங்கதிரோன் காடாகும் தீயக்கோன்கள் முள் மரமாம்
தெங்கு பனை பூகம் தேமாப் பொன்-திங்கள்
வாழை கொடி புகற்கு வான் பிலாவாம் மாலுக்கு
தாழைக்கேல் புற்று அரவம் சாற்று

(எ-து) ஆதித்தனுக்குக் காடு, செவ்வாய், சனிக்கு முழுமாம். வியாழனுக்கு பனை, தென்னை, கமுகு மரமாம். திங்கள் உற வாழை, வெள்ளிக்குக் கொடிப் பலாவாம். புதனுக்குத் தாழை, பாம்புக்குக் கடுங்கல் புத்து என்றவாறு. இவர்கள் வலியறிந்து இன்னவிடம் சலம் என்றும் இன்னதுக்குச் சலம் வேண்டித்(ய)து என்றும் சொல்வாரும் உளர்.

## கீழ்நீர்

16. நீர்காட்டு நிலந்தன்னை பன்னிரு கூறிட்டு
நிகழ்கின்ற ராசிதனை பிரமன் மேல்வைத்து
வார் காட்டும் வன முலையாய் வலமிடமாய் வந்தால்
மதி வெள்ளி எவ்விடந்தான் அவ்விடத்தே நீராம்.
மூர்காட்டு பாம்பு உண்டேல் பழங்கிணறு அதாகும்
உயர் சுங்கன் பெருவாரி பாம்பு தன்மேல் தோன்றிப்
பார்காட்டுமாறு அங்கே பருவதமும் உண்டாம்
பருதி சனிதிசை ஆகில் நீரில்லைப் பகரே

(எ-து) கிணறு வெட்டுகிற நிலத்தைப் பனிரெண்டு அறை யாகக் கீறி அப்போது உதித்த இராசி அறிந்து முன் சென்ற அடுத்த இராசியைப் பிரமன் மேல் வைத்து உதிக்கிற இராசியை-மேஷராசியிலே வைத்து-இடமான மீனம் கும்பம் முதலாக மேற்கே ஓடி, தெற்கே ஓடி, கிழக்கே ஓடி, வடக்கே ஓடி, உதையத்துதைக் கூடுவது. இந்த வடவை எண்ணி வரும் போது சந்திரன், வெள்ளி நின்றவறையில் சலமாம். ஊர்ப்பூமி-திரமாம்; பாம்பு நின்ற அறை பழைய கிணறு. உதையத்திலும் நீர் கீழ் காண்டத்திலும் நிற்க உச்சக் கோளுமாய் நோக்கு பெற்று, நட்புடன் வலிபெறில் வெள்ளி நின்ற அறை பெரு நீராம். புதன் பார் காட்டும். கல்லுண்டு. ஆதித்தன் சனியாகில் அந்த அறை சல மில்லை என்க.

இதுவன்றி சந்திரன் நின்ற இடம் சலம், வெள்ளி நின்ற அறையில் சலம். இந்த கிரகங்களுடனே பாம்பு நிற்கில் பழங் கிணறு தோன்றும். சந்திரனுடனே வெள்ளி நிற்கில் வெகு சலம். சந்திரனுடனே புதன் தோன்றில் பார் காட்டும். புதனும் பாம்பும் கூடி நின்றால் உடையும். சனி கூடி நிற்கில் தன் புறக்கால் இது தப்ப வெட்ட அந்த அறையில் சலமில்லை. ஆதித்தன் கூடி நிற்கில் கல்லுடையாது. வியாழன் கூடி நின்றால் மலை யுடையும். செவ்வாய் கூடில் செங்கல்லுத் தோன்றும். சலராசியுடனே சிலக் கோள் நின்ற அறைவலியுடன் வரில் வெகு சலம் நிச்சயம் என்பது. முதல் தொட்ட ராசியில் கதிர் ஒன்றுக்கு முழம், சாண் பிடியுமாம் என்பது. எத்தனை கதிர் உண்டோ அத்தனைக்கு இரட்டித்துக்குக் கண்டு கொள்க.

## ஆற்றுக்கிடை

ஊறு மணலாம் கழியாறு, பாலாறு, ஈழையாறு இவை ஆற்றுக் கிடைக்கை, கழியனுக்கு இடையில் நீர் நிற்குமாம். கம்பந்தி ராயும், பொன்னாங்காணியும், பேய்ச்சுரையும் வெள்ளறுகும், வெள்ளரி ஈங்கும் குறுந்தொட்டியும், ஆரையும் காரையும் எழுந்து நிற்கும். பாலாற்றுக் கிடைக்கையில் நிற்குமாம் எல்லாம் துளைப் படும். இலை சுருண்டு வேறு பட்டிருக்கை-ஈழையாற்றுக் கிடைக்கை—புல் எழுந்து தளிர்த்து இலை மிருதுவாய் இருக்கும். இவை ஆற்றுக்கிடைக்கை வழி கூறுவன்.

பிறகு நிற்கும் இடத்தில் நாற்றிசையும் மும்முழத்தில் தண்ணீர் தோன்றும். எழுமுழத்தில் தண் வீடாகும். நாவல் மறுதி (மிருதுவான) இலை உடைத்தாகிய அது நின்ற இடத்துக்கு மும்முழத்தில் சென்று குத்தினால் ஐ முழத்தின்கண் செப்புக் கோல் போல் ஒரு பாம்பு தோன்றும். அப்பாம்பைப் பிடித்து புதுப்பானையில் இட்டு வட மூலையில் புதைக்க ஏழு முழத்தில் தண்ணீராகும். வீடாகும், கெங்கை நிலைக்கும். இந்நீர் குடிக்கில் எலிகடி, பாம்பு விஷம் தீரும்.

கொடிப்புங்கு மிலியான் கொம்பின்ற மிறுதி இலை உடைத் தாய் நின்றதாகில் அதற்கு ஏழு முழத்தின் தண்ணீர் தோன்றும். அஞ்சு முழத்தின் கண் தேரை தோன்றுமே. 7 முழத்தில் தண் வீடாகும். அதற்குத் தென்பால், கீழ்பால், மேல்பால் மூன்று திக்கிலும் மும்முழத்தின் கண் சென்று குத்த மும்முழத்தினாலே

ஆமை தோன்றும். ஆமை தோன்றித்தாகில் மும்முழம் வீடாகும். நாலு முழத்தில் நீர் என்பது. ஒன்பது முழத்தின் வீடாகும்.

## புற்றுக்குறி

பல வண்ணப் புற்று அறியுமாறு-தலையோடு மிடைந்தெனாவது 4 முழத்தில் தண்ணீர் தோன்றும். ஏழு முழத்தில் தண் வீடாகும். ஞாளைப் புற்றுக்குப் பெருநீர் தோன்றும். ஏழு முழத்தில் தண் வீடாகும். ஊமைப் புற்றுக்கு 7 முழத்தின் தண்ணீர் தோன்றும். 9 முழத்தில் தண் வீடாகும். முன் உச்சி கண் கொண்டெழுந்து புத்துநீர் உண்டாம். பின் உச்சி கண்கொண்டெழுந்து புத்து நீரில்லை என்க.

## நிலக்குறி

கோடைகாலத்தில் குளுந்த புழுதி உள்ள இடம் பெருநீராம். மாரிகாலத்து மரம் சேந்த இடம் பெருநீராம். இலை சுருண்டிருக்கினும் பெருநீராம். அதைச் சூழவும் ஆறு முழத்தில் தண்ணீர் உண்டாம். 7 முழத்தில் தண் வீடாகும். கோடைகாலத்து, எருமை வேறு படக்கிடந்த இடம் பெருநீர்க் கயமாம். சிலந்தி வரைந்து கிடந்த இடம் பெருநீராம். நுண் பயிலும் இடத்திலும் ஐந்துமுழத்தில் தண்ணீர் தோன்றும். 7 முழத்தில் தண் வீடாகும். புகைபோல் மஞ்சு படர்ந்த இடமும் நீரது இல்லை போல் தோன்றும் இடமும்—அந்த இடத்தில் நீர் தோன்றும் என்ற வாறு. நிலக்குறி முற்றும்.

## தொடுகுறி

தலை தொடில் 4 முழத்தின் கண் பாறை தோன்றும். அந்தப் பாறை உடையும். 7 முழத்தில் தண்ணீர் தோன்றும் நெற்றியைத் தொடில் நீரில்லை. கண்ணைத் தொடில் சின்னீராம் முகத்தைத் தொடில் பெருநீராம். வாயைத் தொடில் சின்னீராம். 4 முழத்தில் பாறை தோன்றும், பாறை உடையும். 9 முழத்தில் தண் வீடாகும். மார்புத் தொடில் 4 முழத்தில் தண்பாறை தோன்றும். அப்பாறை உடையும். ஏழு முழத்தில் தண்வீடாகும். முலையைத் தொடில்-வயற்றைத் தொடின் உப்பில்லாத நீராம். உந்தியைத் தொடில் பெரு நீராம். துடை தொடினும், முழங்கால் தொடினும் கல்

தோன்றும். சின்னீராம். புறவடி தொடில் நீரில்லை. உறுப்புக் குறி முற்றும்.

ஈசானன் மேலும், வருணன் மேலும், சோமன் மேலும் கிணறு குத்த அவ்வூ(ற்)றும் நன்று.

நீர் மாணிக்கம் முற்றும்.

வாணிகாதேவி ரக்ஷிக்கவும்.

## III

## ஆதித்தன் உ(தை)தய வீதி

1. அரி அலவன் அதண்டு எருது மேடமாமாய்ந்த
வரி சிலை தேள் கும்பம் மகரம் தெரியுங்கால்
ஆடுமீன் கொள் கன்னியாளெரும் என்பரே
நீடு இரவி வீதி நிலம்

(எ-து) ஆதித்தன் சிங்கம் -கற்கடகம் -மிதுனம் - இடபம்-மேஷ வீதியில் உதிக்கும். தனுசு, விரிச்சிகம், மகரம், கும்பம் இவை மிதுன வீதியில் உதிக்கும். மேடம், மீனம், துலாம், கன்னி இவை இடபவீதியில் உதிப்பன. இந்த மூன்று வீதியும் அந்த ராசியான மாதங்களுக்கு ஆதித்தன் பகுத்து ஓடுங்காலமே- உதையமாகின்ற ராசியும், ஆதித்தன் நின்ற ராசி என்பது. கவிப்புக்கு பவன வீதியுமாம் என்றவாறு. ஆதித்தன் உ(தை)தய வீதி முற்றும்.

2. வெய்யவன் ஆகாசம் வெண்மதியம் பூமியாம்
வெய்யவன் ஆணாம் மதியம் பெண்ணாகும் -வெய்யோன்
திரிச்சக்கரம் உயிராம் திண்மதியம் பூமி
திருச் சக்கர உடலாய்ச் சாற்று

(எ-து) ஆதித்தன் ஆகாசம், சந்திரன் பூமி, ஆதித்தன் ஆண், சந்திரன் பெண், ஆதித்தன் உயிர், சந்திரன் உடல், ஆதித்தன் திரிச் சக்கரத்துக்கு உயிர் என்றும் சந்திரன் பூமிச் சக்கரத்துக்கு உடல் எனவும் ஆம்.

ஆதித்தன் ஒற்றித்த ராசியான மேடம் முதல் முன்னிரு கால் நிற்ப(ா)ன்-சந்திரன் ஒற்றித்த ராசிக்குப் பின்னிருகால் நிற்ப(ா)ன்-இடபம் இரட்டித்தராசி ஆகையால் முன்னிருகால் சந்திரன், பின்

னிருகால் ஆதித்தன் நிற்பர். இப்படியே ஆதித்தன் ஒற்றித்த ராசிகளுக்கு முன்னிரு காலும்,இரட்டித்த ராசிகளுச்குப் பின்னிருகாலும் ஆதித்தன் நிற்பான். சந்திரன் ஒற்றித்த ராசிகளுக்குப் பின்னிரு கால் நிற்பான். இரட்டித்த ராசிகளுக்கு முன்னிரு காலில் நிற்பான்.

ஆதித்தனும் பாதி, சந்திரனும் பாதியாக இப்படியே கீழ் மேலாக வரும். ஆதித்தன் திரிச்சக்கரத்தில் வலிய யெழுந்திருக்கும். சந்திரன் இயங்குகின்ற சக்கரத்தாலும் ஏறின வாரூடத்தையும் கூட்டி, யாவன ஒருவனுக்குப் பலன் சொல்லும் பொழுது, உடலும், உயிரும் பார்த்துச் சொல்லுவது-இவை மேஷக்கால் இரண்டாகக் கொள்ளுவன் என்பது-ஆகாச சக்கிரம் முற்றும்.

## ராசி எதிர்க்கயறு

3. நிலம் நாலாவது-இராசி நிலம் பூமிச் சக்கரம் என்றும் கொள் நிலம் திரிசக்கிரம்-யாமக்கோள் வீதியென்னும் ஆதித்தன் உதைய

வீதி பலன் வீதி நிலம் என்றும்

ஆகாசக்கரம் என்றும் - நாலுநிலம் என்றவாறு - யாவன் ஒருவன் வந்தேறின ஆரூட ராசிக்குள் எதிர் கயருவது-

4. எருது தேளியாள் சிலை நண்டெகலை யாம்சீயம்
சொரிகுழலார்க்குச் சொல் மீனம்-தெரியுங்கால்
ஆட்டுக்குக் கோலாம் என்றாங்கு அறிந்த சக்கரத்தை
ஒட்டி எதிர் கயறு என்று ஓது

(எ-து) இடபத்துக்கு எதிர்க்கயறு,விருச்சிகம், மிதுனத்துக்குத் தனுசு, கற்கடகத்துக்கு மகரம், சிங்கத்துக்குக் கும்பம், கன்னிக்கு மீனம், மேடத்துக்குத் துலாம், இப்படி ஒனறுக்கு ஒன்று ஏழாம் ராசியை முழு நோக்கால் பார்க்கும் இந்த ராசி எதிர்க்கயறு என்றும் ஆருடக் கயறு என்றும், முழு நோக்குமாம் என்றவாறு. இராசி எதிர்க்கயறு முற்றும்.

## திரிசக்கிர எதிர்க்கயறு

5. கதிர்க்குப் புக(ரா)ம்-கடுஞ் சேய்க்குக் காரி
புதற்கு அரவு பொன் திங்கள் பூணும்-எதிர்
கயரேன் றொந்து உதையம் தன்னை உயர்கோடிமேலவை
திடமாய் தேர்ந்துரைத்த நூலின் திறம்

(எ-து) ஆதித்தனுக்கு எதிர்கயறு- வெள்ளி, செவ்வாய்க்குச் சனி, புதனுக்குப் பாம்பு, வியாழனுக்குத் திங்கள் ஆகும். சந்திரன் திசையில் நின்றகோள் எதிர்நோக்கம் நோக்கும் என்பது. கொடியாகிய கெருடன் உரையும் கீழ்திசை ஆதித்தனாகத் திரிசக்கரக் கோள் நின்ற வடைவே-திசைக்குத் திசை ஏழரை நாழிகை நின்று பெறும் அடைவே எதிர்க்கயறு கொள்வது என்றவாறு. திரிசக்கிர எதிர்க்கயறு முற்றும்.

## நிலக்கவிப்பு

6. நிலக்கயிற்றில் வந்தானை மேடம் இடபம்
துலைத்தயாள்-தன்னளவும் எண்ணி-நலத்த
உதையம் பிடித்த துகை அளவும் எண்ணிக்
கதையாதே தோன்றும் கவிப்பு

(எ-து) யாவன் ஒருவன் வந்த ஆருடத்தை ஆதித்தன் உதைய வீதி மூன்றினுள் அவன் உதித்த வீதியின் ராசியளவும் எண்ணிக் கண்டு, உதைய வீதி அளவும் எண்ணுவது கவிப்புக்கு மூன்று பலன். வீதியும் வகையும் சொன்னவாறு.

7. வந்தான் கயற்றை மகிழ்ந்தேஞர் அத்தால் எண்ணி
உந்தி உதையத்தை உணர்ந்து-சிந்தித்து
நாடிக்குழந்தெண்ணி- நன்னிலத்து
நணவனைக் கூடிக் கவிச்குங்கூடை

(எ-து) யாவன் ஒருவன் வந்து வினவி இருந்த ஆரு—இராசி, அந்த ராசியைப் பிடித்து-முதல் வீதி அளவும் எண்ணின தொகை மனுவாதி எண்ணினால்-அந்த இலக்கம் நின்ற இடத்து ராசி ஆருடத்தைக் கவிக்கின்ற ராசிக்கவிப்பு என்பது. பிரதட்சணம் பண்ணி அந்த அடைவிலே எண்ணிச் சொல்லுவது என்பது.

8. இருந்த இராசி பிடித்தே கதிரோந்திருந்த திசையளவும் எண்ணிப்
பொருந்த உதையம் பிடித்து ஆங்கதன் அளவும் எண்ணில்
கதையா தொன்றும் கவிப்பு

(எ-து) ஆருட ராசி பிடித்து ஆதித்தன் நின்ற வீதி ராசியளவும் எண்ணி, அப்போது உள்ள உதைய ராசியைப் பிடித்து முதல் தொகைக்கு ஒக்க எண்ணினால் அந்த ராசிக்கவிப்பு என்றவாறு. நிலைக்கவிப்பு முற்றும்.

## கிரகக்கவிப்பு

9. கயற்றான் உதையம் கருதிய வீதி
பயிற்றியல் ஒண்ணார் பதியாகிக்-குயிற்று ஆயதோர்
ஆட்சி உதையம் அதின் அளவும் எண் கவிப்பு என
மாட்சியின் மிக்கோ மாமதித்து

(எ-து) கயற்றான் உதையம் ஆவது யாவன் ஒருவன் வினவின ஆரூட திசை அறிந்து எட்டுத்திக்குள் எதிர்கயறு என்கின்ற கிரகத்தையும் அறிந்து, ஆரூடத்தில் இருந்த கிரகம் கொண்டு ஆதித்தன் உதைய வீதி அளவும் எண்ணி வைத்து, அந்நேரத்தில் உதைய வீதி ஆட்சிகோள் கொண்டு கிரகவீதி, தொட்டு அந்த இலக்கத்து அளவும் எண்ணி அந்தஇலக்கம் நின்ற இடத்துக் கிரகம், ஆரூடக் கிரகத்தைக் கவிக்கின்ற கிரகம் என்றவாறு. மீனராசி முன்னாக எண்ணுவது. கிரகக்கவிப்பு முற்றும்.

## பொதுக்கவிப்பு

10. ஆடு இரண்டு ஈராறு யாள் பன்னொன்று ஈரைஞ்சு
நாடு சீயம் பெண் ஒன்பான் கோல் தேள் எட்டு-நீடு
சிவப்புடைய வில்லேழு மானார்குடை மைந்து
கவிக்கு மீனான் மூன்று காண்

(எ-து) மேடம் உதையமானால் இரண்டாம் ராசியைக் கவிக்கும் இடபம். 12 ராசியைக் கவிக்கும் மிதுனம், 11 ராசியைக் கவிக்கும் கடகம்-10 ராசியைக் கவிக்கும் சிங்கம், கன்னி 9 ராசியைக் கவிக்கும், துலாம், விருச்சிகம் 8 ராசியைக் கவிக்கும். தனுசு 7 ராசியைக் கவிக்கும். மகரம் 6 ராசியைக் கவிக்கும் கும்பம் 5 ராசியைக் கவிக்கும். மீனம் 4 ராசியையும், மூன்றாம் ராசியையும் கவிக்கும் என்றவாறு.

ஆதித்தன் மேஷ வீதியிலே உதித்த நாளில் வந்தது மேஷக் கவிப்பு என்றும், இடபவீதியிலே வந்தது இடக் கவிப்பு என்றும், மிதுனவீதியில் உதித்தால் மிதுனக் கவிப்பென்றுமாம். அந்தக் கவிப்பைக் கொண்டு கவித்த ராசியில் நின்றகோள், நற்கோள், தீக்கோள், நட்பு-ஆச்(ட்)சி உச்சம்-பகை-நீசங்களும் மிகவும் தேர்ந்து அந்தக் கோளுக்கு ஓதப்பட்ட காரியமாகச் சொல்லுவது என்பது. இராசி ஆரூடக்கவிப்பும், கோள் ஆரூடக் கவிப்பும், ஆட்சி உதையக் கவிப்பும் முற்றும். சிறுகாலே யாதொரு, ராசி

உதிப்பது இரண்டு நாழிகைக்கு மேல், இரண்டரை நாழிகை இரண்டாம் ராசியைக் கவிக்கும் இப்படிப் பனிரெண்டு ராசியும் இடமே வந்து கவிக்கும் என்றவாறு.

கவிப்பு முற்றும்.

## ராசிக்கதிர்

11. ஏழ் எட்டு ஓர் ஐந்து மூன்று ஏழ் பதினொன்று ஈரிரண்டு
ஆளப்பட்ட நாலு ஆறுடன் எட்டும்-தாள்பட்டு இருபதும் ஓரேனாம்
இவை மேடம் ஆதிக் கருது மீனமிந்தன் கதிர்

(எ-து) மேடத்துக்குக் கதிர் - 7, இடபத்துக்கு - 8, மிதுனத்துக்கு 5, கடகத்துக்கு 3, சிங்கத்துக்கு 7, கன்னிக்கு 11, துலாத்துக்கு 4, விருச்சகத்துக்கு 4, தனசுக்கு 6, மகரத்துக்கு 8, கும்பத்துக்கு 20, மீனத்துக்கு ஏழாம் என்றவாறு ராசிக்கதிர் முற்றும்.

## கோள்கதிர்

12. ஐந்து இருபத்தொன்று ஏழ் தன்பின் னொற்கொன்பது
பத்துந்திவோரெட்டிரட்டி நான்கு முந்தி
எதிராக வீரிரண்டின் இம்முறையே ஆகும்
கதிராக எண் கோள் கதிர்

(எ-து) ஆதித்தன் கதிர் 5, சந்திரன் கதிர் 21, செவ்வாயின் கதிர் 7, புதன் கதிர் 9, வியாழன் கதிர் 10, வெள்ளி கதிர் 16, சனி கதிர் 4, பாம்புகதிர் 4 என்றவாறு. ராசி கோள்கதிர்களில் கோளின் கதிர் விசேஷம் என்பது. கோளின் கதிர் முற்றும்.

வேறு

13. அறையில் அங்கு நால் ஆக்கி ஆங்கதன் மேலேழு
திறனறிந்து நான்கலம் உரையாம் - அறைகளில்
கீழ் பால் நடுவின் இடை அறையே தன் கார்த்திகையாம்
தாளா தரிந்துரைக்கும் கொள்

(எ-து) கிழக்கு மேற்காக 8 வரை கீற அதன் மேல் தெக்கு வடக்காக 5 வரை கீறி இந்தச் சக்கரத்தின் கீழ் நிரையைப் பிடித்து எண்ணினால் 28 அறையாம். இதன் கிழக்கு நிறையில் கிழக்குப் பதியில் நடு அறைக்கு வலமான இடத்தில் கார்த்திகை வைத்து

இந்தச் சக்கரத்து அறை 28 இல் அசுபதி முதல் ரேவதி கடையாக விசாரித்துக் கூட்டினால் இருபத்தெட்டும் அதற்கு அடுத்த ராசி களும், அதன் ஆட்சியான கோள்களும் அறிந்து தெற்கு வடக்கு 7 அறையும், கிழக்கு மேற்கு 4 அறையுமாக இருபத்தியெட்டு அறையும், கார்த்திகை இருந்த அறை தொடங்கி, உச்சி நேரத்துக்கு முன், மேற்குமுகம், உச்சிக்குப்பின் கிழக்கு முக மாயிற்று.

ஆதித்தன் வலமாக எண்ணி அறிந்து 28 நாளும் 12 ராசியும்' 9 கோளும் இந்த அறைகளில் இருக்கும் அடவும் அறிந்து சொல்லுவது. இதுவன்றி மத்தியானத்துக்குப்பின், மேக்கு முக மாயிருந்து, தெக்கு வடக்கு ஏழறையும், கிழக்கு மேக்கு நாலு வறையுமாகக் கீறுக என்றும், இருந்த திசைகளுக்கு ஆதித்தன் வ'லமாக எண்ணு'வது என்றும் சொல்லுவது.

14. கா(ர்)த்திகை நாள் ஆதியில் கண்ட நாட்கு ஏழறையில்
சே(ர்)த்திரண்டு வீட்டிடமே தென்மூன்றும் போதுமோல்
நான்கு ஐந்து மீண்டு எண்ணி நல்குது தன் கீழிரண்டும்
தான் கண்டு பின்னதுவாய் சாற்று

(எ-து) கார்த்திகை வைத்த ஏழறையில் - கார்த்திகைக்கு வைத்த வடக்கு ரெண்டறை விட்டு, கார்த்திகைக்கு இடமே தெக்கு நோக்கி மூன்று அறையிலும், கார்த்திகை, ரோகிணி, மிருகசீரிடம், நின்ற அறைக்குத் தெற்கு ரண்டறைவிட்டு மிருக சீரிடம் நின்ற அறைக்கு மேற்பத்தி வடக்கு நோக்கி 4 அறையிலும் திருவாதிரை, புணர்பூசம், பூசம், ஆயிலியம் வைத்து ஆயிலயத் துக்கு வடக்கு ஓரறை விட்டு, ஆயிலியத்துக்கு மேற் பத்தியில் தெக்கு நோக்கி 5 அறையிலும், மகம் பூரம், உத்திரம், அத்தம், சித்திரை இவை வைத்து, சித்திரைக்குத் தெக்கு ஒரு அறைவிட்டு சித்திரைக்குக் கிழக்கு 2 அறையிலும், மூலை ஒரு அறை முதல் மேற்கு நோக்கி நாலரையும் அதற்குக் கிழக்கு நோக்கி மூன்று அறையும், அதற்குத் தெற்கு நோக்கி அறை ஒன்றும், ஆக அறை பத்தினாலும் அடைவே. அக்கினி மூலை அறையில் அனுசம், கேட்டை, மூலம், பூராடம், உத்திராடம்,அபிசித்து, திருவோணம்' அவிட்டம், சதையம், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி, அசுபதி, பரணி இவை 14 உம், அக்கினி மூலை தொடங்கி, கார்த்திகை அடுத்த அறை பதினாலும் சுத்தி வரவவைத்து 28 அறைக்கு 28 நாளும் ராசிக்கோளும் அறிந்து சொல்லுவது.

## சலசா விசித்திரம்

பாரறை நாலேழ் தென்கீழ் பனை வைத்து பன்னோளனாரும் தேர் வலம் அதன் மேற்கு ஈசன். முதல் வடக்கு ஒரு நான்கு எண்ணி - சீர்மகம். அதன் மேற்கு அஞ்சும் தெக்கொடு கிழக்கும் எண்ணி, நீர்மதி நின்ற நாள்பின் இறுதிமேல், இறுதிவிட்டம், சுத்த மவுத்திரங்கள் கேட்டை தோணி, சித்திரை பார் ஓணம், அசுத்த மான்தலை பூராடம், மகம், அயிந்து, யேளவொத்த பன்னொன்று மூன்று, திதி, ஓரை, குடம், மீன், கேது குத்திய எருது நண்டில் குளம், குழி, கூவல் கொள்ளே.

---

இச்சுவடி சரசுவதி மகால் நூல்நிலையத்தில் 1098 எனும் எண்ணுள்ள ஏடாகும்.

இ

# கூவ நூல்

## I

மனையின் அகல நீளங்களைத் தனித்தனியே சிறு கோலால் அளந்து அத்தொகை இரண்டினையும் ஒன்றிலே ஒன்றாகப் பெருக்கி 28 இக்கு ஈந்து வட்டம் முழமாம் மீந்த சேடத்தை - 12ஐப் பெருக்கி 28 ஈந்து வட்டம் சாணும் மீற சேடத்தை - 4 ஆல் பெருக்கி, 28இக்கு ஈந்தே வட்டம் அங்குலம் அடி இவ்வகையை எண்ணி முழமும் சாணும்........... திருத்தி வலமாய்.................... சாளம் வளர்ந்து பார்க்கு —இடபமும், துலை, தேள், சுறவு, ஞண்டு, சாண்மீன் எழுந்ததில் பிறகு மிறைதான் எழுந்திடில் பெருநீர் அதாகும். புதன், குரு, எழுந்திடில் கீழ்நீர் அதாம் மடவரல் (கன்னி) தான் தோன்றிடின் பழங்கிணறு. மற்றைய கோள் தோன்றிடில் பாழ். பாங்காகும் உச்சம் தனக்கு சாண். ஆட்சிக்குப் பக்கு (பத்து) முழர். நட்பினுக்கு ஓவடம் முதல் வாணபட்டு, பகை நீசமாம் எனில் அதற்கு அரிய பாதாளமாம். அவ்வவற்றுள்ள கதிர்கட்குள்ளவாறு என்று அறைந்தனர் இந்தணர்கள். - அகலநீளம் என்றது.

1. மிஞ்சிய சிகரம் கோலால் மிக்க கோபுரங்கள் பாய்தல்
அருகிய கிணறு வாவி அருந்திய குறிதேறுபின் கூவ
சாத்திரம்
வஞ்சியே காத்தி கோட்டம் வலப்புறம் பார்வையானால்
கொஞ்சியே வந்த செல்வம் குலைப்படும் உண்மைதானே

2. வாய்ந்திடு நிலம் ஐந்தாலும் ..............தனிநாலும்
ஆய்ந்திடும் நவக்கோளாலும் மையுறு கருவியாலும்
தேர்ந்தவர் மனம் உகந்தார் செப்புவம் கூவம் பார்ப்பார்
ஏய்ந்த இவ்விதியைக் கும்ப முனிவனார் இயம்பினாரே

பிற சின்னம் கேட்க வந்தவனை 108 அல்லது 90 குறைவாய் ஒரு இலக்கம் கேட்டு அவன் சொன்ன இலக்கத்தை 9இல் கழிக்க வந்த சேடம் 1 ஆகில் கரும்பாரையும் கொஞ்ச நீரும் 2இக்கு அதிக நீரும் 3க்கு சமீபத்தில் நீர் உண்டு என்றும் கூறுக. 4இக்கு சமீபம் என்றும் 5இக்கு அழம் என்றும் 6இக்கு நீரில்லை என்றும் 7இக்கு நீர் உண்டு என்றும்...........9 இக்கு உறுதியாய் உண்டு என்று கூறுக.

## தொடுகுறி

தொல்லை தீர்க்கந்தன்னைச் சுகலனாகக் காப்பாத்து நல் தோஷத்தில் கூறு. நலம் பெறலா.................மே. அங்கு வந்து நின்ற கன்னி தன்னால் தீண்டப்படுகிற தன் அவயவங்களில் தொட்ட இடம் தலையாயின் நீரில்லை. கண்களுக்கு நீர் உண்டு. நெற்றி நெஞ்சு நீரில்லை. வயிற்றைத் தீண்டினால் அம்மண் புட்டு போலும் வாயு மூலையில் மூணு முழத்தில் நீர் உண்டாம்.

உள்ளங்கால், தோள், செவி, பிடரி, முழங்கால் நீருற இல்லையாம். மேகம் சூழ்ந்த உச்சி நேரத்தில் இதில் சொன்ன நன்மையான நிலத்தைத் தோண்டினால் நல்ல நீரும், அந்தி நேரத்தில் கறுப்பான நீரும் உண்டாம்.

சலராசியும், செவ்வாயின் வீடுமாகிய தலையைத் தீண்டினால் 3 முழத்தில் கரும்பாறையும் 12 முழத்தில் உப்பு நீரும் காணும். கண், நெற்றி, காது, வயிறு, மூக்கு, நடுப்புருவம், கன்னம், இவ்வுறுப்புகளைத் தீண்டினால் மூன்று முழத்தில் ஐந்து வண்ணமான பாரும் அதைத் தோண்டினால் சேறும் மணலோடு பரவி இருக்கும். அதன் கீழ் ஒரு முழத்தில் ஊற்றும் 10 முழத்தில் கீழ் நதியும் காணப்படும்.

திரவி ராசிகளாகிய கடகம், சிங்கம், மகரம் எனும் கழுத்து, தோள், நெஞ்சு, முழங்கை, உள்ளங்கை இவைகளைத் தீண்டினால் ஐந்து முழத்தில் நீரில்லை. வெட்டு கடினமாயும் உப்பு நீரும் தோன்றும். யோனிமூலை, சகுனம் இவைகளை...... தீண்டினால் சொல்லுகிறேன். மேற்கூறிய தானங்கள் கன்னி,

துலாம் ஆகையால் 2½ முழத்தில் செம்பாரும், அதன் கீழ் ஐந்து முழத்தில் அப்புப்பாரும் மணலும் அதன் கீழ் 3 முழத்தில் ஒரு சாண் மண்ணும் அதன் கீழ் செம்பார் ஒரு சாணும் கடுகுப்பார் ஒரு சாணும் அதன் கீழ் ஒரு சாண் அப்புப்பாரும், அதன் கீழ் ஒரு குழியும், அதில் ஒரு ஆமையும் ஆக 11 முழத்தில் அடர்ந்த நீரும், கன்னி, துலாம் உபயராசி ஆனதால் தென்மேற்கு மூலையில் பெரு நீர் தோன்றும். கணைக்கால், கெண்டைக்கால், இடதுத்துடை, முழங்கால், உள்ளங்கால் இவைகளைத் தீண்டில் 1 பிரேதமும் மத்திமமான உப்பு நீரும் காணப்படும். மேற்சொன்ன கன்னி தலையைத் தீண்டில் வெண்கல்லும், அதை உடைக்கின் நீர் உண்டாம். கண், மூக்கு இவைகளைத் தீண்டினால் உப்புநீரும் நெற்றியாயின் கருங்கல்லும், வாய் நெஞ்சு, தனு இவைகளாயின் நீருண்டு.

## தொடுகுறி இன்னொரு வகை

வயிற்றைத் தீண்டினால் பெருநீராம். தொப்புளாயின் 4 முழத்தில் நீரும் அரையாயின் நீர் அதி தூரமும் உப்புமாய் இருக்கும். இதிற சொன்ன அவயவம் தவிர வேறிடங்களைத் தீண்டினால் எவ்வகையாலும் நீரைக் காண்பது அரிதென்று சொல்லுவாய்.

## புற்றின் விவரமும் குறியும்

கொடிப்புற்று, பிண்டிபுற்று, ஊமைபுற்று, பலகண்புற்று, நஞ்சுபுற்று, பினைபுற்று, சூட்டுப்புற்று என்னும் 7 வகை புற்றுகளையும் இன்னது இன்னதென்று நன்றாய் அறிந்து வெட்ட கொடிப்புற்றுக்கு 3 முழத்தின் கீழ் ஓடை தோன்றும். அந்த ஓடையின் கீழே 9 முழத்தில் பெருநீராம். பிண்டி புற்றுக்கு 4 முழத்திற்குள் கனமான வெள்ளோடையும் அதின் கீழ் அதிக நீரும், அதன் கீழ் ஒரு மாடமும் நடுவில் ஒரு தேரை தோன்றும். அப்பசம்பின் கீழோடையும் வெண்கல்லும் காணும். அதன் கீழ் 3 முழத்தில் பெருநீராம். அதன் கீழ் 7 முழத்தில் 6 கண் புற்றும் அதற்கு ஒரு முழத்திற்குள் ஓடையும் அதன்கீழ் 3 முழத்தில் தேரையும் தோன்றும்.

பலகண்புற்றுக்கு 7 முழத்தில் ஓடையும், அதன் கீழ் 3 முழத்தில் கணநீரும் தோன்றும். ஊமைப்புற்றுக்கு 3 முழத்தில் அதன் கீழே 5 முழத்தில் ஓடையும் அதன் கீழே 5 முழந்தில் பெரு நீரும் உண்டாம். பிண்டி புற்றுக்கு நீரே இல்லையென்றும், சூட்டுப்புற்றுக்கு 7 முழத்தில் மாடமும் அதன் கீழ் 7 முழத்தில் பெருநீர்க் கேணியும் உண்டு என்று சொல்லவும்.

## புற்றின் விவரமும் நீரின் ஆழமும்

பிண்டி, மயிலை, ஆயிளை, ஊமை, கொடிப்புற்று என ஐந்து வகையில் கொடிப்புற்றுக்கு நீர் 4 முழத்திலும், 12 முழத்தில் பெருநீரும், வெட்டுதற்கு வலிப்பதாயும், துலாம், விருச்சிகம் இவைகளில் நல்ல ஊற்றும் உண்டு மயிலை புற்றிற்கு 3 முழத்தில் நீரும், 10 முழத்தில் ஒரு மாடமும் அதன் கீழ் 3 முழத்தில் சாண் நீளத்தில் ஒரு செம்பாம்பும் தோன்றும். அதை அந்த மண்ணில் பால் வார்த்துப் புதைத்து அவ்விடத்தில் 3 முழம் தோன்ற ஒரு தவளை தோன்றும். அந்தத் தவளை சேறோடும் நீரோடும் இருக்கும். அவ்விடத்தில் வெண்கலம் போன்ற ஓர் கல் தோன்றும். அதை உடைக்க உடையும். அதில் ஒரு நாயைப் பலியிட்டு அங்கு இரத்தத்தைச் சிந்த சிங்கத்திலும், தனுசிலும் நீர் உண்டாம்.

ஊமைப்புற்றிற்கு ஏழு முழத்தில் நல்ல நீரும் ஓர் தவளையும் தோன்றும். மேற்கூறிய தவளைக்குக் கீழ் 5 முழத்தில் பெரிய ஊற்றும், மகரத்திலும், கும்பத்திலும் பெரிய ஊற்றும் தோன்றும். பிண்டிப் புற்றிற்கு 5 முழத்தில் நீரும் கருங்கல் பாறையும், கொப்பரைப் பாறையும், பளிங்குப் பார், செங்குப்பார், காக்கைப் பொன் பாரும், அப்பு, அடுக்கு, உருண்டை என்னும் பார்களும் 6 முழத்தில் பெரிய ஊற்றும், கன்னி, துலாத்தில் நல்ல ஊற்றும் உண்டு.

ஆயிளைப்புற்றிற்கு 3 முழத்தில் நீரும் அதின் கீழ்ச் சாம்கை, பச்சை, மயிலை, செங்கல், கலரி, இடந்தைப் பொன்னும் பார்களும். கெந்திப்பார், நீர்ப்பாரும் காணும். வெட்டு எளிதாய் இருப்பதுடன் மேடம், மிதுனம், கும்பம், மேடம் இவ்விடங்களில் தோண்ட பேரூற்று உண்டாம்.

முல்லை வெண்ணிறமும், குறிஞ்சிக் கல்லும், மருதம் களி மண்ணும், நெய்தல் உவர்மண்ணும், பாலை சிவப்பும், முல்லை சென்னீருமாக ஊற்று. பாலைநீர் வெண்ணீரும் 7 மாற்று. குறிஞ்சி நீர் கருப்பும் மாற்று நல் நீரும் நெய்தலுக்கு 6 மாற்றும் உப்பு நீராயும் இருக்கும்.

## திணைப்பிரிவு —முல்லை

முல்லை, பாலை, குறஞ்சி, மருதம், நெய்தல் இவ்வைந்தில் முல்லை நிலத்தைத் தோண்ட 3 சாணில் அரளையும், 2 சாணில் குங்குமப்பாரும், 2 சாணில் செய்குன்றிப்பாரும் காணும். பஞ்ச வண்ணப்பார், பொன்னிறக்கல் முத்துக்கல்லும், அப்புப்பார் அடுக்குப்பார் 4 சாணிலும் ஆக நாங்கட்பார் 3 சாணிலும், கரிமூக்குப்பார், கல்லரைப்பார், மண்ணும் கல்லும் பச்சையோடிய கல்லும் 6 சாண்......நீரும் நீர்ப்பாரும் மண்ணும் ஊச்சியும் 3 சாணில் காணும். அவ்வாறு 23 சாண் வெட்டக் கன்னி மீனத்தில் செண்டித்தாரை ஊற்றும், வடமேற்கில் நீர்குமிழியும் தோன்றும். வெட்டக் கடினமாய் இருப்பினும் மூன்று துலாவுக்குத் தண்ணீர் வற்றாது 'விசைச் சார்பு.'

## முல்லையில் பாலை

முல்லையில் பாலை நிலத்தை வெட்ட வெண்மையும் சிவப்பும் கலந்து 5 சாணும், மணல் 2 சாணும், குங்குமப்பார், மாங் கொட்டைப்பார், செங்குன்றிப்பார் இவைகள் 6 சாணும் கொப்பரைப்பார், உருளைப்பார், அப்புப்பார், அடுக்குப்பார். பொன்னிறக்கல் முத்துக்கல்லும் மேற்கூறிய ஆறு வகையும் 4 சாண் பஞ்சவண்ணப்பார், சாம்பிறாணிப்பார், காக்கைப் பொன் பார். சில்வரிக்கல், நாகவரிக்கல், அப்புப்பார் அடுக்குப்பார் 6 சாணிலும் ஆக 23 சாண் தோண்ட அதிகமான கசிவும், இடபத்திலும், துலாத்திலும், கெண்டித்தாரிலும் நலுவிலோர்க் குமிழியும் வெட்டுவதற்கு எளிதாயும் இருக்கும்.

## முல்லையில் குறிஞ்சி

மண்கண்டமும் வெண் சுக்கான் பாரும் 12 சாண். மஞ்சள் பார், குங்குமப்பார்—4 சாண். நாகவரிப்பார்- சாம்பிறாணிப்பார்—4சாண். தவளைப்பார், அப்புப்பார், வைடூரியப்பார்-5 சாணும், இதின் கீழ் கருங்கற்பார் 3 சாணும்...காணுமேல் கூறிய கருங்

கல்லின் அரிதயில கும்பத்தில் பேரூற்றும், துலாத்திலும் மீனத்திலும் கெண்டித் தாரையும் காணும்.

## முல்லையில் மருதம்

முல்லையில் மருத நிலத்தைத் தோண்ட பவழநிறம் போன்ற மண்கண்டம் 9 சாண். சலங்கைப்பார் ரெண்டு சாண். செய் குன்றிப்பார், கருவளவிப்பார், புடப்பார் 6சாணும், நாங்கட்பார் 3 சாணும், உண்டை உருளை, சாம்பிறாணி......மூன்று சாணும், இதன் கீழ் நீர்ப்பார் ஊச்சியும் 6 சாண். ஆக 29 சாண் வெட்ட மகரம் கும்பம் கடகம் மேஷம் இவைகளில் கெண்டித் தாரையும் நீர்க்குமிழியும் காணும்.

## முல்லையில் நெய்தல்

முல்லையில் நெய்தல் சேர்ந்த நிலத்தை வெட்ட வெண் சிவப்பும், உப்புக்கசிவுமாக மண்கண்டம் 12 சாண். தவளைப் பாரும், கொப்பரைப்பாரும் 12 சாண். வைடூரியப்பார், நாகவரிப் பார், அப்புப்பார், மணிப்பார். சதரச் சரளை வெண்பார் 6சாணும், அதின் கீழ் நீர்ப்பாரும் சொரிமணலும், அழிமண்ணும் 3 சாண் ஆக 33 சாண் வெட்ட பக்கங்களில் பலவகை ஊற்றுகளும் உருதுளக்கி இரங்காத நீரும் உண்டாம்.

## பாலை

நெய்தலுக்குப்பின் பாலை மண்ணும், மணலும் 6 சாண் வெள்ளைப்பார் 6 சாண். உரப்பார், வெள்ளைப்பார் 6 சாண். வெள்ளைக் கொப்பரைபார் 3 சாண். கொப்பரை பொற்கல் வைடூரியப்பார் 6 சாண், குங்குமப்பார் - அப்புப்பார் - தண்ணீரும் பெருமணலும் ஊச்சியும்......சொன்னவைககள் 4 சாணும் ஆக 31 மேடம் முதல் சிங்கம் வரை அஞ்சுபார். கெண்டித்தாரையும் கன்னியில் பெரிய ஊற்றும் தனுசில் 2 கெண்டித்தாரையும் உண்டாம் 'முளையாத இடம்.'

## பாலையில் குறிஞ்சி

பாலையில் குறிஞ்சி கலந்த நிலத்தை வெட்ட கரிசலும் வெண்பார் கலந்த சுக்கானும் மண்கண்டமுமாக 4 சாண். அதின் கீழ் வெள்ளைப்பார் 6 சாண். மஞ்சள் பார் 3 சாண். சாம்பிராணிப் பார் 3 சாண். குங்குமப்பார், செங்குன்றிப்பார், நாங்கட்பார், நீர்ப்

பார் 8 சாண், ஆக 24 சாணாம். மேற்சொன்ன 24 சாண் வெட்ட கன்னி மகரத்தில் பேரூற்றும் மேட சிங்கத்தில் கெண்டித்தாரை யும், குமிழியும்···மே.

## பாலையில் மருதம்

பாலையில் மருதம் கலந்த நிலத்தை...கண்டம் 7 சாண். சரளை கலந்த செம்பாரும் கரிசலும் 6 சாண். மாங்கொட்டைப் பார், சாம்பிராணிப்பார், நாகவரிக்கல், குங்குமப்பார், அப்புப்பார் 12 சாண் ஆக 25 சாண் வெட்ட மீனத்தில் வற்றாத ரெண்டு துலாவுக்கு நீருண்டாம்.

## பாலையில் நெய்தல்

பாலையில் நெய்தல் கலந்த நிலம் உவர் சேர்ந்த வெண் பொட்டலும் மண்கண்டம் 12 சாண். நீலம் கலந்த சுக்கான் பாரும், குங்குமப்பார், அரளைப்பார் 8 சாண். வெண் சுக்கான்பார் 11 சாண் ஆக 31சாண் வெட்ட கைப்புநீர் காணும். மேற்கூறிய கைப்புநீர் மூன்று துலாவுக்கு வற்றாது.

## பாலையில் முல்லை

இனி, பாலையில் முல்லை கலந்த நிலம், களிமண்ணும் மணலும் 4 சாண். குருமண், செம்மண், 7 சாண், மண் சரளை, மஞ்சட்பார், குங்குமம் செங்குன்றிப்பார் 6 சாண். காக்கைப் பொன் பார், சிலவரிப்பார், அப்புப்பார், ஒருவரிபிறைக்கல்லும் கொப்பரைக் கல் 6 சாண். செஞ்சரளைப்பார், நீர்ப்பார் பெருமணல் 6 சாண். ஆக 29 சாண் வெட்ட நாலு துலாவுக்கு நீரும் அதன் கீழ் இடபம் கன்னி மகரம் இவைகளில் பேரூற்றும் உண்டாம்.

## குறிஞ்சி (குறிஞ்சிநிலம் மலைச் சார்வு)

குறிஞ்சி நிலம் வெள்ளை...கரிசல் பொட்டல் உவர்மலைச் சார்வும் ஆக மண்கண்டம் 6 சாண். கரிசலும் சரளை 2 சாண் தவளை நீர்ப்பார் 3 சாண். வெண்பார், முத்துக்கல், பொருக்கல், சாம்பிராணி, உருளை, நாகவரி, நாங்கட்(பார்) இவைகள் 6 சாண் நரிமூக்கு கொப்பரைப்பார், அப்பு அடுக்கு உண்டை உருளை 3 சாண் கருங்கல் 6 சாண். சிவந்த மண்ணும்நீரும் 3 சாண். ஆக 34 சாண் வெட்ட கன்னி, மீனம், கடகம் இவைகளில் நீருண்டாம்.

## குறிஞ்சியில் மருதம்

குறிஞ்சியில் மருதம் கலந்த.........ந்த மண் மணல் 10 சாண். களிமண் கரிசல் சரளை 6 சாண். ஒரு புரமாய்ச் சாய்ந்த ஒரு கொப்பரைப்பார், தவளைக்குளப்பார், மயில் நிறப்பார் 6 சாண். குங்குமம்பார், மாங்கொட்டைபார், சுக்கான், கோமேதகம், நீல வண்ணப்பார், அப்பு அடுக்குபார், பஞ்ச வண்ணப்பார் 8 சாண். கருங்கல் 8 சாண். மண், மணல் 2 சாண் ஆக 40 சாண் வெட்ட ஒரு துலைக்கு (துலாவிற்கு) நீர் உண்டாம் அவை நல்லதல்ல.

## குறிஞ்சியில் நெய்தல்

குறிஞ்சியில் நெய்தல் கலந்தால்.. ...சாண்......நாங்கலுப்பார் 20 சாண். சிவந்த தட்டப்பார் மஞ்சள் கொப்பரை அரளை 10 சாண். மணலும் சரளைப்பார், நீர்ப்பார், தவளைப்பார் 4 சாண். ஆக 41 சாண் வெட்ட உப்பு ஊற்று உண்டாம். அவை கெண்டித் தாரையாய் இருக்கும்.

## குறிஞ்சியில் முல்லை

குறிஞ்சியில் முல்லை கலந்த நிலம் மேலே வெண்தாரையுடன் கரிசல்......ம் எழும்பி மண்கண்டம்......வெள்ளையும் நீலமுமாய் ......ண வெண்பார் 6 சாண். நீர்ப்பார், ......பார், உண்டை உருளை பரவிய கசிவோடு 14 சாணில் ஒரூற்று உண்டாம்.

## குறிஞ்சியில் பாலை

குறிஞ்சியில் பாலை கலந்த நிலம் மண்கண்டம் 5 சாண். மாங்கொட்டை பார், கொப்பரைப்பார் 3 சாண், சுக்கான்பார் 6 சாண், தவளைப்பார், சாம்பிராணி......அப்பு அடுக்கு ...6 சாணில் கடகம் தனது சுக்கிரன்......களில் பேரூற்று உண்டாம்.

## மருதம்

மருத நிலத்தைத் தோண்ட பொன்னிறமாய் கரிசல் வண்டல் மண்கண்டம் 5 சாண். குங்குமச் சுக்கான் கல்லுப்பார 8 சாண். அப்புப்பார் முத்துக்கல் பொன்னிறக்கல் உருளை இவைகள் 7 சாண். ஆக 20 சாண் வெட்ட வடமேற்குத் திசையில்...ண்டாம். நாட்டைச் ச...

## மருதநிலத்தில் நெய்தல்

மருத நிலத்தில் நெய்தல்......கசிவும் மண்கண்டமும்...... கருங்கல் 8 சாண்......6 சாண் ஆக 24 சாண் இவைகளில் பேரூற்றும் 4 துலாத்துக்கு வற்றாது.

## மருதநிலத்தில் பாலை

மருத நிலத்தில் பாலை கலந்த நிலத்தை வெட்ட கரிசல் செவ்வல மண்கண்டம் 17 சாண். செய்குன்றி அடுக்குப்பார்...கா... கவரிப்பார், நரி மூக்குப்பார் 7 சாண். வெண்ணிறப்பார் 3 சாண். ஆக 27 சாண் வெட்ட துலாம் கன்னியில் 2 துலா நீர் உண்டாம்.

## மருதநிலத்தில் குறிஞ்சி

மருத நிலத்தில் குறிஞ்சி......மேல் சுக்கான் 6 சாண். மஞ்சுப் பார் சாம்பிராணிப்பார், கீழ் மலைப்பார் இ......அப்பு அடுக்கு, கோமேதகம்......ணல் 3 சாண் ஆக 23 சாண் வெட்ட கும்ப மேடத்தில் பேரூற்றுண்டாம்.

## நெய்தல்

நெய்தல் நிலம் உவர்க்கசிவும், பொங்குதலும் மேற்கூறு (பகுதி) வெண்மண் மணிபோலத் திரண்டு உப்பு மண்ணும் களி மண்ணும் 10 சாண். சொரிப்பார் 4 சாண். நாங்களுப்பார் 6 சாண். குங்குமப்பார், அப்புப்பார் 12, ஆக 32 சாண் வெட்ட (மேடத்தில்) நன் நீருண்டாம்.

## நெய்தலில்முல்லை

நெய்தலில் முல்லையை......மை உமுரிசதாவெரி உப்பருஞ்... 12 சாண். தவளைப்பார் 3...சாண்...ப்பார் 8 சாண். சாம்பிராணி 4 சாண் அப்புப்பாரும் மணலுமாக 3 சாண். ஆக 30 சாண் வெட்ட கடகம், கும்பம் இவைகளில் ஊ(ற்)ரூற்றுண்டாம்.

## நெய்தலில் பாலை

நெய்தலில் பாலை நிலத்தை வெட்ட சிவந்த மணல் களி மண் 4 சாண்......வெட்டு சாணில் நீர் காணும்.

## நெய்தலில் குறிஞ்சி

நெய்தலில் குறிஞ்சியை வெட்ட......நிலத்தாலும், கொஞ்சம் சரளையா...4 சாண். சிப்பி, மூளி, மணல்...தகட்டுப்பார் 7 சாண். ...கல் 3 சாண் அப்புப்பார் நீர்ப்பார் 29 சாணில் எல்லாத் திசையிலும் நீர் உண்டாம்.

## நெய்தலில் மருதம்

நெய்தலில் மருதம் கலந்ததை வெட்ட ஊச்சியும் மண்ணுமாக இருக்கும். மண்பார் 7 சாண். நாகவரிப்பார் 3 சாண். குமட்ப்பார் 6 சாண். கரும்பார் 6 சாண். சுக்கான்பார் 3 சாண். அப்புப்பார் நீர்ப்பார் 2 சாண். ஆக 27 வெட்ட நீருண்டாம். நெய்தல் 5, உப்பு, வடக்குடன் வடகிழக்கு வடமேற்கு, கிழக்கு கூகம்......தென்கிழக்குடனே தெற்கு, வடதென் மேற்கு மற்றவருள் வடமேற்கு......கடப்பமே துன்பம் உண்டாம்.

## புரத்தருவி

மாவிலங்கம், மருது, ஆல், அத்தி, வஞ்சி, பால்சொடி, சாரணை, சிறு பூளை, நாணல், கடலாடி ......செங்கோலம், துளசி இவைகளுள் சீதேவி, எருக்கு. கோரை, செங்கழுநீர், நாயுருவி, கரும்புல், பொடுதலை, நெய்க்கொட்டான் இவைகள் எந்த நிலத்தில் கண்டாலும் மயங்காமல் தோண்ட 3 முழத்தில் நீர் உண்டாம்.

பிறு என்னும் செடிகள் சூழ்ந்த நிலத்தில் 9 முழத்தில் ஓடை உண்டு என்று அறிக. பிறும் என்பது சில நாடுகளில் பருக்கை என்று வழங்குவதுண்டு. மேற்சொன்ன ஓடையின் கீழே ஒரு முழத்தில் பேரூற்றும் உண்டு.

வெள்ளெருக்கு முளைத்த நிலத்தில் 3 முழம் வெட்ட ஓடை... ஒரு தேரையும் பெருநீராம் நாவல்-துடர் யிருகு... அதின் கீழ் 5 முழத்தில் பெருநீராம். புசிக்கின் (அருந்தின்) எலி, அரவின் விடங்களும்......தும் நீங்கும். புங்கும் பூலாவும் முளைத்திருந்த தலத்தில் மூணு முழம் தோண்ட அதன் கீழ் சில நாளும் அதன் கீழ் 3 முழத்தில் மிகுந்த நீரும்........வெள்ளெலியும், குருகு அதன் கீழ் 5 முழத்தில் செம்பாம்பும் அதின் கீழே 3 முழத்தில் நீரும்

தோன்றும். அந்த நீரை அருந்தில் விடங்கள் தீரும். வெள்ளெலி, உடும்பு, தேள், நரி, மான் இவை முதலிய பல கால் சுரங்கள் சரு......முழத்தில்...டியில் கீழ் ஆறும் ஓடு......இன்னொரு வகை புறக்கரு...செடிகளும் புற்றின் வகைகன்றா கீறேன்து...

## புறக்கருவி புற்றுக்குறி

தருப்பை, கற்கை, கடலாடி, பொடுதலை, ஆல், அத்தி, கொன்றை, சிறு சாறணை, சொங்கோல் அறுகு, அடுக்கு குறுந்தொட்டி, சிறு பூளை, மாவிலங்கம், நீர்ப்பூ, சொட்டி, கரும்புல், வெண்புல்......ப்புல் இந்த நன்மை மீதே...அடர்ந்திருக்கின்ற பூமியைத்......னூலின் பின்னால் கூறியிருக்கும் இடத்திற்குரிய நாளைத் தெரிந்து கூறியவகை வெட்டினால் மாறாமல் எப்போதும் நீர் உண்டு என்றறிக.

## வேறு

பிண்டிப்புற்று, ஆயிளை, தோமடம், ஊமை இந்தப் புற்றுக்களையும், பிரண்டை சங்கு ஆல் இவைகள் முளைத்த புற்றுகளையும் வெட்டினால் 3 முழத்தில்...நப்பாரும் அதின் கீழ் உரு...ட்பாரும் அதன் கீழும்...பாரும் 11 முழத்தின் தண்ணீரும்.. ஒரு தவளையும் வாயு மூலையில் ஒரு முழத்தில் கீழ் ஓடையும் 3 சல்லடைக் கண்போல் ஊற்றும் காணும். பெருநீர் பெருகும். கள்ளி, குரிஞ்சா, சுண்மை, சூட்டுக் கொடியிளை, காத்தொட்டி முதலிய இந்தப் புற்றுகளில் கண்டு வெட்டினால் ஒரு முழத்தில் வெண்பாரும் 11 முழத்தில் கரும்பாரும், கருங்கல்லும் கிடக்கும். அரைத்த, உடைந்த, உடையும், அதில் ஜலதாரை யோல 3...... மாய தோன்றும். அதில் மீண்டும் நீர் உண்டாம். 22 முழத்தில்... டாம்.

ஆல், அத்தி, தேசங்கொல்......சாரணை, பொடுதலை, களருப் புலபால் சொட்டி, தவசி, முருங்கை, விஷ்ணு கிரந்தி, புலி மடல் இந்தப் பூடுகள் முளைத்த இடத்தில் தோண்ட வெண்பார், கரும்பார், செம்பார், அப்புப்பாரும் தோன்றும். அங்கு நாலு முழத்தில் தவளை தோன்றும். கருமணல், செம்மணல் கலந்திருக்கும். கீழும் 3 முழத்தில் சேறும் நீரும் வெண்பார், கரும்பார், கலந்து அதில் தவளையும், கீழே.....தில் வால் மீனும் நெரி மணலும் தோன்றும். அம்மீனை எடுத்து ஆலடியில் பால் தெளித்து புதைத்து அங்கு தோண்ட தென் திசையில் நல்ல நீர் உண்டாம்.

# நூற்றொடக்கம்

பிதாமகன் படைத்த இப்பெரும் பூமியில் ஐந்து பிரிவில் குறிஞ்சி சிவப்பு, முல்லை கருப்பு, மருதம் மணல்தரை, பாலை வெண்மையும், நெய்தல் கசிவுள்ளது. மாயிலங்கும் இப்பஞ்ச பூமி களில் பாலை நிலத்தை......று முழம் வெட்டினும், நீரை........ தாயிருக்கும். முல்லை நிலத்தை 18 முழம் வெட்டினும், நீர் அற்ப மாய்க் காணும். பின் மருதம் 9 முழத்திலும், நெய்தல் 7 முழத்திலும் அதிக நீரைக் காண்பதுடன் மரமும் செடியும் சூழ்ந்த நிலங்களில் இன்னின்ன நிலம் தான் கூபத்திற்கு விசேசித்து (சிறப்பு) என் பதைத் தவறாமல் கூறுகின்றேன்.

6. நன்மை
8. தாச்சியம்
10. பால்சாதம்
11. நன்மை
16. மிகுந்த செல்வம்
17. எதிலும் அஞ்சி நிற்பான்
20. இன்பம் தரும்
21. நன்மைதரும்
22. எதிலும் அஞ்சுவான்
26. சம்பத்து
27. மிகுந்த செல்வம்
28. தெய்வ கிடாச்சம்
29. பால்பாக்கியம், செல்வம்

கூபத்திற்கு நாள்

இவைகள் நலம். நீருள்ள நாள் என்று கூறுக.

30. இலட்சுமி கிடாச்சம் பெற்று வாழ்வான்
31. துன்பமில்லை நன்மை
32. முன்னிழந்த பொருள் வரும்

33. நன்மை
35. இலட்சுமி கிடாச்சம்
36. வீர இலட்சுமி கிடாச்சம்
37. கன்று காலியுண்டு
கதிர் அறிய

II

## பழங்கிணறு

அறுகு நாயுருவி கோரை அணிவரை கறையான் புற்றுச்
செறிவினால் எழுந்து சீதக் காலத்தில் வாடி நின்று
பிறிவினால் வெம்மை நாளில் பெருகவும் குளிர்ந்து தோன்றில்
முறுவல் சேர் நகையாய் பண்டைக் கிணறென மொழியலாமே
ஈதிரண்டிருக்கு மேனும் எறும்புகள் இயங்குமேனும்
பாற்பசு எருமை சென்று பலபடக் கிடக்கு மேனும்
சாத்திய பருத்தி, கோரை, சாரணை தழைக்கு மேனும்
மாத்திய பழைய கூவம் உண்டென வரையலாமே

வஞ்சியும் கிளுவை நாணல் மருதொடு அஞ்சு நொச்சி
அஞ்சிரைக் கடம்பு பூலா ஆத்தியின் மரங்கள் சூழ்ந்து
தஞ்சமாம் மழையில்லாத காலத்தில் தழைத்துப் பூத்து
மிஞ்சவே நின்றால் பண்டைக் கிணறென விளம்பலாமே

ஆறாம் இடம், நாலாமிடம், ஏழாமிடம், சுபக்கிரகம், உதயம். பெருநீராம். கடகம், துலாம், மகரம், கும்பம், மீனம் இடபம் இவ்விராசி நீர் மண்ணுக்குச் சொல்வது. இந்த ராசிகளில் நிற்கில் பெருநீர். பொன் புந்தி நிற்கில் சலநீர் வெள்ளம். காரிஇரவி நிற்கில் நீரில்லை. ஆதித்தன் பாம்பு நிற்கில் நீரில்லை. சிலக் கோள் கீழாகில் கீழ் நீராம். மேலாகில் நீரில்லை.

## பூமி நிறம்

சொல்லிய முல்லை துவடைக்கு சல்லம்
வெள்ளைப் பாளை வெறும்பாலை குறிஞ்சிகல்
நல்ல மருதம் மணலாம் களி நெய்தல்
புல்லிய பூமி புகழ்ந்து சிறந்ததே

குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் இந்த அஞ்சினில்—இவற்றில் கூடிய பாருள்ள இடம் குறிஞ்சி. பெருமணலுள்ள இடம் நெய்தல். ஆறுள்ள இடம் முல்லை. நிலம் சேர்ந்த இடம் மருதம். வெள்ளைச்சரல் ஓடை கண்ட இடம் பாலை.

இவற்றில் நெய்தல் நிலமும் குறிஞ்சி நிலமும் ஆகாது. பாலை, முல்லை, மருதம் இந்த மூன்று நிலமும் அறிந்து புற்கரு, மரக்கரு, புத்துக்கருவும் கண்டு கிணறு சொல்வது.

பாரினில் மரங்கள் கூவம் பாய்ச்சல்தான் கீழ்மேலன்றிச்
சாரினில் விருத்தக் கூவம் சார்வது நீளமாகும்
நீரினில் சதுரக் கூவம் நிறை தரு மட்டில் நிற்கும்
சீர்மதி ஆனார் சொன்ன சிற்பநூல் முறைமை தானே

## முல்லை

எலுமிச்சு, தென்னை, மா, இலுப்பை, பிரண்டை, ஊமைப் புற்று இவைக்கு நாங்கூழ் எங்கும் எழும்பிக் கிடக்கும்.

மண்கண்டம் சாண் 7
செம்பார் சாண் 3
மஞ்சள் வெண்பார் சாண் 5
கொப்பரைக் கல்லு சாண் 6
நாகவரிக் கல்லு சாண் 6
முத்துப் பொன்னிறக் கல்லும்
சரலும் நீரும் சாண் 9 ஆக 36 சாண்.

## மருதம்

குடைப்புத்து, மாக்கல்லு, உப்பறுகும், வெள்ளறுகும், இலந்தை கள்ளி இருக்கும். இந்த நிலம் பொன் வெள்ளி விரவின நிறம்.

மண்கண்டம் சாண் 7
வெள்ளைப்பாரும் நீரும் சாண் 8
மஞ்சள்பார் சாண் 3 ஆக 18 சாண்.

## பாலை

வெளுப்பு மண்ணும் சரலுமாயிருக்கும்.

| | |
|---|---|
| வெளுப்பு மண்ணும் சரலும் | சாண் 8 |
| வெள்ளைப் பாரும் நீரும் | சாண் 4 |
| கொப்பரைக் கல் | சாண் 3 |
| முத்துப்பொன்னிறம் விரவினகல்லு | சாண் 9 ஆக24, |

## தொடுகுறி

உன்னிய இடத்தில் பார்த்து உற்றநீர் உண்டோ என்றால்
தன்னெதிர் ஒருவன் தன்னைச் சரீரத்தில் உறுப்பில் ஒன்றைச்
சென்னியைத் தொட்டால் மெத்தச் சிக்கெனப் பாரை கண்டு
பின்னையே கல்லுக் கீறப் பெரிதும் முழத்தில் நீரே
நீரில்லை நெற்றிதொட்டால் நெடுங் கல்லுண்டாகும் பின்னை
சாரவே மூக்குத் தாழ்வு......................... தொண்டை
சேரவே தொட்டால் மெத்தத் திண்ணமாம் நீரும் ஆழம்
கூரவே முதுகு தொட்டால் கொஞ்ச நீர் துலை வெட்டாமே
ஆமெனும் கண்ணு ரெண்டில் அதிகநீர்க் குமிழி உண்டாம்
ஏமென முழம் மூன்றில் மெத்த நீர் உண்டாம் வாயில்
தாமெனத் தொட்டால் நீரும் சத்துண்டு தாழ்ந்த நீராம்
காமெனக் கதுப்பு ரெண்டில் கதைத்த நீர் விதிக்கலாமே
விதிக்கலாம் உருளைக் கல்லும் மிக உண்டாம் முதல் ஓர் மூன்றில்
இதைக்கல்ல மணலும் நீரும் ஏத்தமாம் செவிக்குள் இல்லை
கதிக்கவே தோளில் கையில் காலினில் கல்லதாகும்
துதிக்கவே நெஞ்சு தொட்டால் சொல்க நீர் அற்பம் என்றே
என்றுதான் உதரம் தொட்டால் உண்டு பிண்டிப்பாரோடு
தன் துணைப் பழுவும் உண்டு தகர்த்திடத் தகரும் கீழே
நன்றென வெட்ட மூன்று முழத்தினில் நன்னீர் உண்டாம்
குன்றெனப் பெருத்து வீழும் குவி முலைக் கொங்கை மாதே
மானென அந்தி தொட்டால் வந்திடும் குமிழித் தண்ணீர்
தானென மிக உண்டாகும் சந்தொடு அரையும் தொட்டால்
ஏனென முழமோர் ஏழு இதை வெட்ட நீரோ சொற்பம்
தேனினை வென்ற சொல்லாய் செயல் தொடுகுறி இதாமே

## கிணற்றுத் திசைப்பயன்

அன்னையே ஊர்மனைக்கு அதிகமாம் ஈசானம் கீழ்பால்
சொன்னமுமா சூரியம் உண்டாம். அக்கினி மகவைப்போக்கும்
தன்னதாய் இருந்தபெண்டில் தான் செத்துப்போவாள் தெற்கு
கன்னி மேல் கூபமாகில் கருதியது எல்லாம் நாசம்
எல்லையாம் கூபம் மேற்கு இருக்கவும் மிகவும் நன்று
அல்லல் சத்துருவாம் வாய்வு அதிகமாம் வடக்கு வாழ்வு
நல்லதாம் கூபம் ஆகில் நன்மையும் மிக உண்டாகும்
சொல்லிய வாய்வு காலன் நிருதியும் சுடரும் ஆகா

ஆலயம் கன்னம் அய்ய மங் கொடு பிசாசுங் கோயில்
நீலிதன் கன்னி நோட்டம் நெடுந்தெரு மூசிவு அத்தம்
கோலமாம் பகவான் தேரு கொடும் சுடுகாடு கூபம்
சாலையில் இருப்பதாகில் சமர்த்தனும் சேதந்தானே

## III

பாலை நிலம் இருகூறு செய்திருக்கில் அவ்விடத்தில் முக் கோலில் தண்ணீர் உண்டென்க. இரு முழத்தில் பார் உண்டென்க. குறிஞ்சி நிலத்துக்கு ஒன்பது கோல் அளவில் நீர் உண்டென்க. மருத நிலத்துக்கு ஏழு கோல் அளவில் நீர் உண்டென்க. வட பாகத்தில் மலை தோன்றும். நெய்தல் நிலத்துக்கு நாலு கோல் ஆழத்தில் நீர் உண்டு என்க.

நாறும் கரந்தை சிவத்தைப் பூ காய்க்கும். மண்கண்டம் சாண் 2; சுக்காண் பார் சாண் 2, மட்டை வெள்ளைப்பார் சாண் 6. அதில் நிறைந்த கசிவு ஆற்றூற்று.

### கோரை நிலம்

கோரை நிலம் கற்கரடு, கருமலை, ஆரணி, உவர் பொட்டல், அளிமண், உப்புமண், கொம்மட்டி, நரியிலந்தை அம்மான் பச்சரிசி என்ற சித்திரப் பாலாடை (சிற்றிலைப் பாலாடை) சீதேவி, செங் கழு நீர், தொட்டாக்கால் வாடி, செந்தட்டி, நிலவாகை, வறட் டாரை, ஓரிதழ்த்தாமரை (ஓரிலைத்தாமரை) இலைக்கள்ளி உடைய தாய் இருக்கும். இதில் உருண்டைச் சாண் 11, பொருமண் பார் சாண் 7. இதில் நிறைந்த கசிவு.

### மருத நிலம்

பால்பொட்டல், பொடி மணல் உடையது. நாட்டறுகு, கருஞ் சூரை, நாயுருவி, ஆனை நெருஞ்சில், ஒத்தச்சாரணை, படர்ந் திருக்கும். காக்கணம், கருவேலம் கட்டுச் சொடியும் உண்டு. மண் கண்டம் சாண் 4, சுக்கான்பார் சாண் 4, பா(ய) வெள்ளைப்பார் சாண் 3. நிறைந்த கசிவு.

### கொன்றை நிலம்

களிமண்ணு, உவர்ப்பொட்டல், உப்பறுகு, கண்ணுப்பூளை, கரு ஊமத்தை, வேலிப்பருத்தி, வெண்கோவைத் தண்டு, பருத்

திருக்கும் மா விலங்கு, கிரந்தி, நரிஇலுப்பை,கானாங்கள்ளி, நாய்க் கொட்டான் செடி, வேனில் நண்டுக் குழிமண் இவை உள. மண் கண்டம் சாண் 2, அற்பச் சுக்கான் பார் சாண் 3, கோழிமுட்டை வெள்ளைப்பார் சாண் 3, குங்குமப்பூப்பார் சாண் 6. நிறைந்த கசிவு.

## முல்லை நிலம்

அளல், செம்மண், அளிமண், சுருண்ட களிமண் பெருமணல் உடையது. இதில் நிலக்கரு-சிறுகண் பூளை, கடலாடி, வெள் ளறுகு, பிரண்டை, சிறு ஊமைப்புற்று, சிறுபுற்று, மட்டைக்கள்ளி, எருக்கலை முதலியன. மண் கண்டம் சாண் 6,மணிச்சரல் சாண் 3, பொருக்கம்பார் சாண் 3, அடுக்குப்பார் சாண் 3, இதில் நீர் காணும். இதற்கிடையில் சோற்றுப்பார் காணும்.

## நெய்தல் நிலம்

வேவாக்களர் நிலம், வீராணி, அறுகு, பூலாத்தி, நிலக்குமிழ், நத்தைச் சூரி, அண்டிப்பனைத்தூர் பருத்திருக்கும். பேயுள்ளி நெருக்கமாயிருக்கும். கொடியறுகு உசந்த ஆந்தைப் புற்று உண்டு. மண் கண்டம் சாண் 8, வெள்ளை மணிப்பார் சாண் 2, சுக்கான்பார் சாண் 6, பொந்துப் பார் சாண் 6 இருக்கும். இதில் நிறைந்த கசிவு.

## பாலைநிலக் குறிஞ்சி நிலம்

வெள்ளைப் பொட்டல், அளிசரல், சங்கங்குப்பி, இசங்கு, எலி, ஆதாளை, ஆற்றுப்பூச்சி, முள்பால் குறண்டி, கையாந்தகரை, பொன்னாங்காணி, நாறு கரந்தை, சிவத்தைப் பூக்காய்ப்பது. மண்கண்டம் சாண் 2, சுக்கான் பார் சாண் 2, மட்டை வெள்ளைப் பார் சாண் 6 இதில் நிறைந்த கசிவு.

மகம், மிருகசீரிடம், கேட்டை, அத்தம் மூலம் முதல நாலுக்கும் திருவோணம முதல் மூன்றும் உத்திராடம் முதல் மூன்றும புனர் பூசம் முதல்மூன்றும் ஆகிய இந்த நாட்களும கும்பம் துலாம் மீனம் மகரம் இடபம் கடகம் இவ்விராசிகளும், திங்கள், வெள்ளி, பாம்பு கோள்களும் தண்ணீர உண்டென்பது. அல்லாதவை நீரில்லை என்பது. ஆச்சொன்ன உதயாருடங்களுக்கு நாலாம் இராசியாகிலும் பெருநீருண்டென்பது இவற்றில் பாபக்கிரகங்கள் நோககில் நீரில்லை என்பது. கவிப்பு ராசி நீர் இராசியாகில் மேலூற்றென்

பது. அல்லாதவை கீழூற்றென்பது. ஊற்றுகளும் கோட்களும் அடைத்த ராசிக்கு அடைத்ததாக கொள்வது. ஆற்றுநீர் வரவுக் கெல்லாம் ராசியால் பலன் சொல்வது. இது சொன்ன நாட்களிலே பெய்யும் என்பது.

## ஐவகை நிலம்

பார்க்கும் இந்த நிலம் தனக்கு வகையே கேளாய்
பகர் குறிஞ்சி பாலை முல்லை மருதம் நெய்தல்
ஏற்கின்ற பார்சார் நிலம் குறிஞ்சி
எழில் மணல் சார் நிலம் நெய்தல் பாலை
காற்கும் வெண்பார் வெண்மையுள்ள நிலமாம் காடு
கரிசலொடு மண் சார்ந்தால் கலந்த முல்லை
வார்க்குள் வளர் முலைமாதே கரிசல் வண்டல்
வரு சகதியுடன் காணில் மருதமாமே

## கிணறு இருக்கும் திசையின் பலன்

உடையவன் இருக்கும் ஊருக்கும் மனைக்கும் கிணறானது கிழக்கு, தென்கிழக்கு, தெற்காகில் மக்கள் அழிவாம். தென் மேற்காகில் அடிமைகள் உண்டாம். மேற்காகில் பயிர்கள் நோய் கொள்ளும் வடமேற்காகில் குடும்ப விருத்தியாம். வடக்காகில் தானிய விருத்தியாம். வடகிழக்காகில் தனப்பிராப்தி உண்டாம். பிரமத்தானமாகில் லட்சுமி கடாட்சம் உண்டாம்.

மதிக்கு நால் ஏழுபத்தில் மந்தியும் புந்தி கூடி
அதற்கு மூன்று எட்டில் ஆறில் ஆதித்தன் வலமதாகி
இதற்கு மோர் பத்தினாலே இருந்தவன் பெலவானாகில்
நிதிக்குளோர் பயனே சொல்லும் நிச்சயம் என்று சொன்னார்

## கதிர் நிலம் பார் ஆழம்

| | | | |
|---|---|---|---|
| மேடம் | கதிர் | 24 | மருதநிலம் பாறை 10 |
| இடபம் | கதிர் | 24 | மருதநிலம் இழந்த பாறை 5 |
| மிதுனம் | ,, | 22 | பாலை நிலம் |
| கடகம் | ,, | 18 | மிகு பாலை இழந்த பாறை 4 |
| சிங்கம் | ,, | 36 | குறிஞ்சிநிலம் கடும்பாறை 16 |
| கன்னி | ,, | 24 | நெய்தல் நிலம் |

| | | | |
|---|---|---|---|
| துலாம் | ,, | 22 | முல்லை நிலம் கடுவல் இளக்கம் கலந்த பாறை |
| விருச்சிகம் | ,, | 32 | இழந்த பாரினில் பழங்கிணறு கசிவுப் பாறை |
| தனுசு | ,, | 32 | குறிஞ்சி நிலம், கடும்பாறை கசிவு ஆற்றுப்பாறை 7 |
| மகரம் | ,, | 18 | மிகுபாலை, இழந்த வெள்ளைப்பாறை13 |
| கும்பம் | ,, | 24 | முல்லைநிலம் இழந்த பாறை மிகுநீர் |
| மீனம் | ,, | 22 | நெய்தல் நிலம் இழந்த பாறை மிகுநீர் |

கதிர் ஒன்றுக்குச் சாண் ஒன்றாகப் பார்ப்பது ராகு, கதிர் 15, கேது கதிர் 15.

சுக்கிரனுக்கு எதிரே புந்தி தோன்றிய காரி மன்னன்
வக்கிரமிலாது இருந்தால் மன்னவர்க்கு ஆறில் (லை)மந்தன்
நிற்கவே திரவியங்கள் நிலந்தனில் உள்ளதாகும்
பக்குவமான வெள்ளி பாரினில் மிக உண்டாமே

## ஊற்று

ஞாயிறு—எருக்கலங்காய் ஊற்று, கெண்டிமூக்கு ஊற்று என்பது.
திங்கள்—வட்டமுடைய புடையூற்றுக் கசிவு

செவ்வாய்— பெருத்த தேங்காய் கண் குமிழியூற்று, பெருத்த முழங்கையளவு ஊற்று, ஆற்றூற்று.

புதன்—கெண்டி மூக்கு ஊற்று, பெருத்த கசிவாகத் தண்ணீர் உண்டாம்.

வியாழன்—எலிவாலூத்து, கெண்டி மூக்கு ஊற்று அதில் கசிவு.

வெள்ளி—கட்டை விரலளவு முதல் சிறுவிரலளவு வரையும் நிதான கசிவு. பேரூற்று குமிழி, பெருங்கசிவு கண்டக்கால் கட்டை விரலளவு நிதானக் கசிவு. எலிவால் கெண்டிமூக்கு அளவாம். ஆற்றூற்று பெருந்தாள், முழந்தாள், முழங்கைக் குமிழி பெருத்த கசிவு. கெண்டி மூக்கு ஓடையும்.

சனி—சுண்டுவிரல் சிறு கெண்டி மூக்கு எலிவால் அளவு கசிவு.

ராகு கேது சனிபோல் ஊற்று. பாறையில் ஊற்று. சலராசியானால் பெருவிரல் பேரூற்று.

.............. தேங்காய் உடைத்து கோழி, நாய், பலியிட்டாக் கால் தோட்ட நீர் வரவு ரெண்டு துலாவுக்கு வற்றாது என்பது.

## கிணற்றுக்குத் தொடக்க மாதங்களின் பயன்

சித்திரை வைகாசி ஆனியும் நீர் காட்டும்
உத்தமமாகப் பயன் அருந்தும் — மத்திபமாம்
ஆடியும் ஆவணியும் அல்லாத கோள்களால்
நாடியுரை கீழ்நீர் நயந்து

## பாடாவதி நாள்

வீடாலயந்தேர் விக்கிரகம் தோணிமடம்
கூடாது சந்தை குளம் கூவல்—பாடுவிதி
பாழாகும் சோதி முதல்மூலம் வரை சொற்பரணி
நாளாகா ஓணமொடு நான்கு

வெள்ளி சந்திரன் வியாழன் உதயமாய்
தள்ளிய புதன் ஆதித்தனோடு போய்
வள்ளலே வலுக் கோட்கள் வலுக்கினும்
வெள்ளமே பெரிதாக இருக்குமே

ஆதியும் யடுப்பு நாளும் அங்கவன் முடியச் சொல்லே
அனுடமும் கேட்டை நாளும் ஆனியும் நோவு சொல்லே
சோதியும் விசாகநாளும் வன் மரணம் சொல்லே
ஓணமும் சதையம் ஆனால் உயர்மனை கடந்து போமே

வேதன் அன்றழித்த இந்த மேதினி தன்னில் கீழ்நீர்
மோத உண்டு அதனில் பொருப்பிடைக் குறிஞ்சி நீக்கி
ஓதிடும் பாலை முல்லை ஒரு மருதம் கருகாழ் புல்லுக்கு
கோதில்லா மரங்கள் புற்று கோள் நலம் கண்டு கூறே

கிணற்றினில் ஆழந்தன்னை கயிற்றினில் அளந்துண்டு
குணமுடன் கயிற்றின் நீளம் கூபத்தின் பாச்சலாகும்
நினவுள்ள நீளம் தள்ளி நின்மனை எடுக்க நன்றாம்
கனமுடன் பாச்சல் நீக்கி கட்டிடம் கண்டு கூறே

கூரிய கூபம் தானும் கும்பமும் மீனம் மேடம்
தேரிய மனையில் நிற்கில் செல்வமும் பெருகி வாழும்
மீரிய பகையும் வெல்லும் வேந்தற்கும் உண்மையாகும்
சீரிய இவைகள் மாறில் சிகமதில் மனை பாழாகும்

---

பேராசிரியர் சேதுரகுநாதன் அவர்கள் கொடுத்துதவிய ஏட்டுப் பிரதி.

# கூவல் சாத்திரம்

காப்பு

I

செந்தமிழால் முன் உரைத்த சீர் தெரிந்து கூப நூல்
ஐந்து நிலம் பாத்து அறிந்து உரைக்கச் - சிந்தைதனில்
உற்பவித்து என் நாவில் உரை முருகன் பிறந்த
கற்பகத்தின் தாள் தொழுவேன் காப்பு

## நூலமைப்பு

1. ஐந்து நிலம் மருதம் அறிபாலை நெய்தல் முல்லை
வந்த குறிஞ்சி வகைப்படியே - சிந்தையுறப்
பாத்துத் தெளிந்து பகரும் நிலக்கருவால்
சீத்தம் உறச் சொல்வாய் தெளிந்து

2. தெளிந்து கிரகநிலை சிலாராசி நட்செத்திரம்
புகழ்ந்து உதையம் ஆருடம் பொற்கவிப்பால் — சிகந்தனிலே
புத்துப் புற்கருவும் பூமிதனில் உட்கருவும்
ஒற்றுட் புகல்வாய் உகந்து

## நீர் வகை

3. ஈராறு ராசி இருபத்தேழ் நட்செத்திரம்
பேரும் நவக்கிரகத்தின் பி(ப)லத்தால் — கூறுவாய்
நன்னீர் சிறுநீர் நல்லாறு பேராறு
சின்னீர் கயந்நீர்ச் செப்பு

4. செப்பு நிலம் ஒன்றில் சேரும் நிலம் ஐந்தும்
அப்பு நிலத்தை அறிந்து எடுத்து — இப்புவியல்
ஈர் நிலமும் ஓர் நிலமும் எல்லாம் அறிந்து கொண்டு
நீர் நிலத்தைப் பாத்து உரைப்பாய் நன்று

வேறு

5. அய்யன் அரி பிரமன் காத்து அனவரி நிருதி சோமன்
வயனமாம் வருணன் முள்ளல் வாடையே கொண்டை மீனம்
குவசமாம் கிணறு கூவல் குடதிசை வலத்தே எண்ணி
வயனமாம் திசையை உன்னி மயன் மதன் உரைத்த நூலே

நிருதி-எமன்

1. உத்த நல் தவத்தை உன்னி உகந்த அவ் எழுத்தைக் கேட்டு
வெத்தியே ஏழு பேற்கு வித்தெழுத் தேர்த்து நின்றால்
நத்தமாம் கிணறு கூவல் நத்திசை ஆயும் கும்பம்
அத்திசை தன்னில் ஊற்று வழக்கென நினைத்துக் கொள்ளே

2. நினைந்து பின் ராசி தன்னை நிலைதனில் கண்டு கொண்டு
மனத்தின்கண் மகிட்(ழ்ச்) சியாலே வடதிசை யடந்து நின்று
தினம் கரிமுகனை நோக்கித் தெளிந்து நல் தானம் கண்டு
நினைந்திடும் பிரமன் மேலே நினை (லை)த்திடும் கிணறு அம்மா

3. அம்மலே இம்மி மோதி அதிர்ந்து ஏழும் முழங்கும் போது
விம்மலாம் கவலும் மேவி இடம் கிடந்த இருங்கல்லும்
மும்மலே சீறும் போது முடுகவே தண்ணீர் உண்டாம்
செம்மலே விம்முமாகில் நீருந்தல் அப்பாரே

4. நீரது பார்க்கும் போது நின்றிடும் ராசி தன்னைப்
போர் வளி முறையின் எண்ணிப் பிறந்த நட்செத்திரம் கண்டு
தாருடன் சங்கு மேவித் தனுவிலே மோந்து நிண்டுவச் (நின்று அச்)
சீருடன் கிணறு வெட்டச் செய்தி என்று அறிந்து கொள்ளே

5. காணலாம் கன்னி நன்னீர் கன் கல்லுச் சொரியும் குப்பை
தீனுவாம் சிங்கம் தன்னில் திரண்டுமருன்றி வில்லும்
த(ா)னு(வ) துலாம் இவை தேதுவற்கு தயசாட்சி சொல்லும்
நானுந்தேன் நடுவே வெள்ளம் நடுக்கிணறு ஊறும் பாரே

6. பாருறு வருணன் மேலே பகலவன் சிவந்த கல்லாம்
நீரது கசிந்து விம்மி நிலம் அது கவர்ந்து மோதும்
கார் மழை போல ஆறு காற்றாவின் திசையைக் கண்ணில்
சீர்செறி கல்லதென்று தெளிந்து கொள் ஆகந்தானே

7. தானமே கூர்மை பார்க்கில் தாமதம் கும்பம் என்க
மீனமே நினைந்து நோக்கில் மேடமே கூவல்......
ஈனமாம் அரி பங்கவறு இடையிடை குமிழி ஊறல்
மானமே மேயும் கல்லு மகரம் நீர் அறிந்து கொள்ளே

8. கொள்ளலாம் கல்லதாகில் குறித்த நீர் நல்லதாமே
வெள்ளடைக் கல்லதாகில் வேலைநீர்த் துவக்கும் பாரு
தெள்ளரிக் கல்லதாகில் சீர்செறி நீரதாகும்
நள்ளிருட் கல்லதாகில் நன்னிதி வேண்டாம் தானே

9. தானமே எண்ணிவந்து தனித்திடும் வருணன் தன் மேல்
தேனமாம் குளவி பங்கன் தென்னையே இருந்து வைத்து
கானல் சேர் கரும்பு தேனுக் கண்டு சீனி சேர்த்து
ஆனதோர் கூபம் கல்லவர் ஆய்ந்து கொள் அறிவினாலே

10. அறிவினால் மலரைக் கொய்து ஐந்து முக் கடிகை நீக்கிப்
பறிமலர் தன்னைப் பார்த்தால் பலன்களே பெருக்கும் எனக்
குறிசிலே அவமே ஆகிக் குன்றியே கருகி நிற்கில்
மறித்த கரமேயும் ஆகில் மனத்துக்கம் என்று தானே

11. தானமாம் மிதுனம் சிங்கம் கன்னியே உன்னி ஏகில்
போனது ஓர் பொருளும் எய்தும் பொய்கையும் வெட்டும் இல்லை!
கான(ண)லாம் கடகம் வில்லுக் கடுஞ்சுனை மீனம் நன்னீர்த்
தானமாம் கூப நூலின் தன்மை என்று அறிந்து கொள்ளே

12. அறிந்திடும் கூவல் நீவ்வல் மத்திசையை நண்ணிப்
பிறிந்திடும் பிரமன் மேலே பெய்வளை தன்னை கரும்
பறிந்திடு முறையே நாடும் பலன்கள் இயல அறிந்து
சிறந்திடும் கயமே ஆறாகச் செவியினில் தீருந்தானே

13. அதிக நல் கூபம் தானும் மணல் சொரி கல்லதாகில்
குறிநிழல் தன்னைச் சீறிக் குறுகவே கறுக்கும் என்க
மதிநிழல் ஒளிவது ஆகில் மண்ணினில் தன்னில் பேசும்
பொதிமலை உயரம் அதாகில் புணரியல் பேசும் தானே

14. பேசுவோம் கூபம் தானும் பிரமனை முன்னே நோக்கி
நாசுறச் செவியை நீட்டி நல்திசை நாடி வந்து
சேய் சனி சோமன் விட்டுச் சிறந்த நல் வாரம் கண்டு
மாகயம் கூவ நூலை மயமகன் உரைத்த வாறே

## நிலவமைப்பு

15. உரைத்த நல் தானம் எல்லாம் உகந்து மண் கறுக்கும்போது
நிரைக்கள்ளே நெய்தலாகும் நிருதியில் பாரும் உண்டாம்
பருத்து உரத் திரண்ட மண்கள் பல நிலப் பாலையாகும்
குறுக்குஉளச் சிவந்த மண்கள் குறிஞ்சி என்று அறிந்து கொள்ளே

16. கொல்லலாம் குருகு நீரில் குளிர் மணல் தெரிந்து நஎருல்
கல்லலாம் கிணறு கூவல் கன்னியில் ஊற்றும் உண்டும்
அல்லலாம் கருமம் வந்து அடுக்கவே நின்றது ஆகும்
நல்லதாம் கும்பம் என்று நயனவன் உரைத்த நூலே

## பாலை

17. நால்குலம் அறிவு கேள்மின் நூல் குலம் பாலையாகில்
காலையே மேலே கசிந்திடும் ஊத்து அதாகும்
சீலமாம் கவறு மேவிச் சிறக்கவே அடைந்து மோதி
மால்அயன் அருளினாலே மயமகன் உரைத்த நூலே

## குறிஞ்சி

18. உரைத்த நல் நூலை ஆய்ந்து நல்கியே உவந்து கூறு
நிரைக்கலம் மேலதாகும் நீற்வுரை நடுவதாகும்
பாப்பதாய் அடுத்து மேயும் புணரியும் வருணன் மேலோர்
உரைக்கடல் அம்மி போலும் குறிஞ்சியின் நிலத்தின் நேரே

19. நேரலாம் கழுநீர் வண்டு நிரை திரை எருக்கு வண்டல்
ஏலரி ஆத்தி செகளிரை உடன் இலுப்பை நாவல்
தாலமாம் தலத்தே உன்னித் தாலமே நன்மை எனக்
கோலமாம் கிணறு கூவல் குறிப்புடன் ஆய்ந்து பாரே

20. அலர்குளி கழுநீர் வண்டு அலர் கவு தும்பை ஆகும்
தலைகுறி தவளை சின்னத்து அறை அறி அரம்பை நண்டு
நிலை பெறு முதலையோனா நீண்ட வெண் புத்து மேலில்
மலர்சேறி கயல்நீர் என்று மயமகன் உரைத்த நூலே

## வேறு

21. நூல் இவை அறிய வேண்டி நூல் பல தோன்ற தாக்கிச்
சாலவே தாளி தன்னில் தரித்த பன்னிரண்டு ராசி
மாலையே நேரம் தன்னில் மகரமாம் ராசி நோக்கிச்
சீலமாம் கிணறு கிள்ளச் சீருடன் சிறந்தது பாரே

22. பாரது அடுக்கும் போது பகலவன் திசையை நண்ணும்
நீரகல் அடுச்கும் போது நிறைமதி தன்னை உண்ணும்
சீரகல் அடுக்கும் போது செய்பிழை தன்னை உண்ணும்
கூர்பனை நல்லதாகில் கும்பத்தைத் தொடுவர் தானே

23. தானமே நன்மை ஆகில் தரித்திடும் மகரம் என்க
மீனமே உதையம் ஆகில் விளங்குதல் உண்டே என்னும்
ஊனமாம் பயமே ஆகில் உயிர் இல்லை மிதுனம் என்க
மானமே நிலையதாகில் வரிகல்லு மஞ்சளாமே

24. ஆமையே வண்டு நீள அடந்திடும் தேளது என்க
லூமை என்கின்றது ஆகில் உதறிட வேண்டாம் என்னும்
தூம நெஞ்சு அனையள் ஆகில் துலாத்திலே நாடும் என்க
தாமதம் மோதும் வெள்ளம் தனுவிது மகரமாமே

25. மகரமீன் வருணன் ஈசன் வடிவிலே வந்து நின்றால்
சிகரமாம் கிணறு கூவல் சீருடன் நவிலதாகும்
பகர்மதி மிதுனம் சிங்கம் படுவது பெரிதே கல்லு
அயர்நிலம் நண்டு குண்டை கட்டளை தேறுக்கால் தாமே

26. தேறுதல் நகைப்புமாகி திருந்தியது ஒருவன் வந்தால்
ஊறுதென் கிணறு கூவல் உரைத்திடும் வருணன் ஆகில்
மீறியே பின்னே ஏகி விரும்பியே நிற்பான் ஆகில்
கூறுதல் வேண்டாம் என்று கூவல் நூல் உரைத்ததாமே

27. உரைத்திடும் இராசி தன்னை ஒன்றுடன் ஒன்றதாக்கி
நிரைப்பட நின்ற ராசி தன்னிலே வந்து நின்றால்
புனர்ப்புரைக் களி(ழி)வும் உண்டும். புனல் சொரி அமுர்தம் எய்தும்
மருப்பு வாய் கூவல் நூலை மயமகன் உரைக்கின்றானே

28. நின்றவன் ராசிதன்னைச் சிங்கம் என்று உயர்ந்து நின்றால்
குன்றிலே கிணறு அதாகும். குறித்ததின் மேற்கே பள்ளம்
வென்திறல் பகை(வரு)வதுண்டு(ம்) வில் கருதல் அலைச்சல் எய்தும்
மன்றலம் குழலாய் சொல்ல மயமகன் உரைத்த நூலே

வேறு

29. நூல்முறை அறிவு கேள்மின் நொய் உயிர் கைமடித்துச்
சாலவே தலத்தைக் கீறிச் சஞ்சலப் பட்டு நின்றால்
காலனே அடுக்கும் கிட்டக்கண (மனை)வியும் பிரிவாள் என்கச்
சீலமாம் சிலையில் வந்தால் செய்தி என்று அறிந்து கொள்ளே

30. அறிந்த பேர் இவர்கள் கூடி அங்கியில் கவர்ந்து நின்றால்
செறிந்த நல் கருமம் செப்பில் தென்திசை தேவர் கோவில்
மறிதகர் தன்னில் வந்து மகிழ்ந்து உடன் நிற்பான் ஆகில்
குறி நெறி மு(றை)றமை என்று குழப்பம் வந்து ஏகும் என்றே

31. அடுக்கவே அடந்து வந்து வாந்தவேங் கும்பம் நன்னீர்க்
கடுக்கெனப் பேறு நின்று கசிந்து உடன் வந்து நின்றால்
இடுக்கமே வந்து எய்தில் இறுகுதல் உண்டும் தண்ணீர்
கொடுத்த நல் கிணறு தானும் தொன்மை என்று அறிந்து காணே

32. காணலாம் வெள்ளம் நன்று கசிந்து உடன் பேணி நின்று
பூணலாம் குழலாரோடே புதுமையைப் பறைவான் ஆகில்
கோணமாம் தெற்கே கூவல் குசவன்தன் மனையும் மேற்கேட்டு
சனமாம் சடருமாக இயம்பினார் தலத்தில் அம்மா

33. இயம்பிய ஒருவன் வந்து இடதுகால் முன்னே நோக்கில்
நயம்படக் கூவல் கல்லது அன்றது ஓர் கன்னி நன்றாம்
மயம்புனை ஊரும் மேவுமாம். அது வடக்கே நிற்கும்
பயம்படு பழியும் உண்டு பண்புடன் அறிந்து கூறே

34 கூறுமாம் துலாத்தில் வந்து குறுகியே நிற்பான் ஆகில்
சேறுசேர் சென்னல் மேற்கே சென்னிந்துமே குறுகுமண்ணாம்
வேறு பங்கு ஒருவற்கு உண்டாம். விருட்சிகம் தன்னில் நின்றால்
மாறுபோம் வழியும் உண்டாம். பண்புடன் அறிந்து பாரே

## கிரக நோக்கும் கதிர் நோக்கும்

சூரியன் கிழக்கு நோக்கும்
சுக்கிரன் தென் கிழக்கு நோக்கும்
செவ்வாய் தெற்கு நோக்கும்
பாம்பு தென் மேற்கு (நோக்கும்)
சனி மேற்கு நோக்கும்
சந்திரன் வடமேற்கு நோக்கும்
புதன் வடக்கு நோக்கும்
வியாழன் வடகிழக்கு நோக்கும்
என்று அறியவும்
லெக்கனாபதி நோக்கின்
திசையில் ஊத்து வரும்
என்று அறியவும்

| | |
|---|---|
| ஆதித்தன் | கதிர் 16 |
| சந்திரன் | கதிர் 4 |
| செவ்வாய் | கதிர் 10 |
| புதன் | கதிர் 9 |
| வியாழன் | கதிர் 7 |
| சுக்கிரன் | கதிர் 5 |
| சனிக் | கதிர் 21 |
| பாம்பு | கதிர் 15 |

இது உச்சத்தில் சாண், ஆட்சிக்கு 3, நட்பில் ஆள் மட்டு. பகை நீசம் தூரம்.

பூமி சல்லியம் (பூமிக்குள் இருப்பதை அறியும் ஆருடம்).
உண்டவப் பேர் அளந்த அடி நாலேழு
உறுதித்தன் பதினாறுக்கு ஈய்ந்த தலை யோடல்
இண்டியொடு கண்கள்ளி தெய்வம் சாம்பல்

கரிவனா சாமி பொன்கலம்
மண்டுபம் கொம்பு நாய்சால்
மான்றரு வினியாய்த் தோன்றும்

(எ-து) பூமிச்சல்லியம் வினவும் பொழுது அடி அளந்து அடியுடனே 28 கூட்டி 16 பேருக்குக் கொடுத்துக் கண்ட சேடம் எஞ்சிய பொருள்). 15-தலையோடு 25-எலும்பு, 35-இட்டிகை, 45-ஓடு, 55-விறகு, 65-தெய்வம், 75-சாம்பல், 85-கரி, 95-பிணம், 105 தானியம், 115-பொன், 125-கல், 135-தவளை, 145-இரும்பு, 155-நாய், 165-சால் - இவ்வகை 16 பொருள் சொல்லவும். முன்பு சொன்ன கோள்களின் கதிராலே இன்ன ஆழத்தில் கிடக்குதென்று சொல்லவும். வியாழன் நின்ற அறையில் பூமிச்சல்லியம் சொல்லவும். நீருகருச் சொன்ன நிலம் மழைக்காலம் வெச்சென்று இருக்கும். கோடைக் காலம் குளுந்திருக்கும்.

## உள்ளமுடையான் படி கதிர்

| | |
|---|---|
| ஆதித்தன் | கதிர்-5-8 |
| சந்திரன் | கதிர்-21-4 |
| செவ்வாய் | கதிர்-7-10 |
| புதன் | கதிர்-8-9 |
| வியாழன் | கதிர்-10-7 |
| வெள்ளி | கதிர்-16-5 |
| சனி | கதிர்-4-21 |
| ராகுக்கேது | கதிர்-4-15 |

லெக்கனாபதியும் 4- (மடமுடையவனாலே கிணறு ஆழம் சொல்வது).

மனைக்கும் கிணத்துக்கும் பொருத்தம் மனைக்குக் கிணறு கிழக்கு — புத்தி

| | | |
|---|---|---|
| வடகிழக்கு | — | இன்பம் |
| வடக்கு | — | சவுக்கியம் |
| வடமேற்கு | — | ஆயுசு மரணம் |
| மேற்கு | — | சம்பத்து |
| தென்மேற்கு | — | விருத்திஉண்டு |
| தெற்கு | — | தறிமாணும் |
| தென் கிழக்கு | — | புத்திரகாணி |

## தொடுகுறி

மேடம்-தலை, இடபம்-முகம், மிதுனம்-கழுத்து, கடகம்-மார்பு, சிங்கம்-தோள், கன்னி-முலை, துலாம்-முதுகு, விருச்சம்-வயிறு, தனுசு-அரை, மகரம்-துடை, கும்பம்-முழங்கால், மீனம்-அடி என்று அறியவும்.

## உள்ளமுடையான் பூமிச் சல்லியம்

பார் இதை நாலென்கீறிப் பனை வைத்துப்பன்னேள் நானச்
சூழ்ந்தோர் வலம் இதன் மேல் கீசன் முதல் வடக்கு ஒரு
நான்கு எண்ணிச்
சீர்மகம் அதன் மேற்காகத் தெற்கொடு கிழக்கும் எண்ணி
நீர்மதி நிறை நாள்பின் இறுதியில் நிறுத்த விட்டம்

(எது-) ரா (இரவு) முன்போது கிழக்கு நோக்கி இருந்து பகல் முன்போது கீறினால் போல சீறி வடமேல் மூலையில் காற்றி கையை நிறுத்தி எண்ணவும். பகல் பின் போது, ரா பின் போது போல கீறி வட கீழ் மூலை அறையில் மகத்தை வைத்து எண்ணிய வாறு முன்பு போல எண்ணிக் கொள்வது.

இராகு நின்ற அறையில் பழங்கிணரும் என்பது. வெள்ளி நின்ற அறையில் நீருண்டு என்பது. உத்திராடத்துக்குப் பின்பே அவசித்தை நிறுத்துவது. அடி அளந்து கடை அடி உடனே 28ஐக் கூட்டி, 16 பேருக்கு ஈய்ந்து மிச்சம் 1-தலையோடு, 2-எறும்பு, 3-இட்டிகை, 4-ஓடு, 5-விறகு, 6-(செ)தய்வம், 7-சாம்பல், 8-கரி, 9-சவம், 10-தானியம், 11-(ரு) பொன், 12 கண்ணு, 13-தவளை, 14-கரம், 15-(டு) நாய், 16-(டு)சால் என்று அறியவும்.

சிறுகாலே மேற்கு நோக்கி இருந்து கொண்டு ஒத்த நிலத்திலே கீழ் மேல் எட்டும் தென் வடல் சுவரையும் கீறினால்28 அறையாம். இந்த அறையிலே தென் கீழ் மூலையிலே அனுசத்தை நிறுத்தி வலமாகச் சுத்தி(ற்றி) மிறுக சீரிளம் வரைக்கும் எண்ணி மக(யி)ரத்தின் மேலே திருவாதிரையை நிறுத்தி வடக்குநோக்கி புணர்பூசம்-பூசம்-ஆயிலியத்தை அதின் மேலே-மகத்தை நிறுத்தி; வடக்கு நோக்கி மகம்-பூரம்-உத்திரம்-அத்தம்-சித்திரை நிறுத்தி; கிழக்கு நோக்கிச் சோதி-விசாகம் என்று எண்ணி வரவும். உத்திராடத்துக் குப்பின்பே அவசியத்தை நிறுத்தவும். 28 அடையும் சதி இராகு நின்ற அறையில் பழங்கிணறு என்பது வெள்ளி நின்ற அறையில் என்பது. நீர் உண்டு வியாழன் நின்ற அறையில் பூமிச் சல்லியம் உண்டு என்பது.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| பூரம் | உத்தி | அவி | திரு | அவி | சன | பூர |
| மூலை | சித்தி | அத்தம் | உத்திர | பூச | மக | உத்தி |
| கெ | சோ | திசெ | புண | பூ | ஆ | ரே |
| அனு | விசா | மூறு | ரோ | சா | பா | அசு |

பகல் பின் போது மேற்கு நோக்கி இருந்து கீழ் மேல் அ. ம. தென் நிலமூங் கீறி தென் மேல் மூலையில் அவிட்டத்தை வைத்து எண்ணி வரவும்.

| | | | |
|---|---|---|---|
| மிறு | திரு | புணர் | பூ |
| ரே | அனு | விசாகம் | ஆயி |
| காற | கேட் | சோதி | மகம் |
| பரணி | சல | சித்திரை | சாம |
| அசு | பூராடம் | அத்தம் | உத்தி |
| ரேபதி | உத்திர | அவிச | திரு |
| உத்திரட்டாதி | பூரட்டாதி | சதையம் | அவி |

பகல் முன் போது போவார் முன் போலே கீவுறம். பகலான போது போலே ராவின் போது கீற்று.

## தொடுகுறி

சிரசு தொடில் 9 சாணில் வெட்டு விடப்படும். 18 சாணில் பெரு நீர் உண்டு. களம் தொடில் 11 சாணுக்குமேல் 22 சாணுக்குள்ளே

பெரு நீர் உண்டாம். நெத்தி தொடுகில் வெட்டு வலிது.நீர் அற்பம். 22 சாணுக்கு மேல் அற்பம்.

வாய் தொடுகில் 10 சாணுக்கு மேல் கருமலை தோன்றும் அதின் கீழ் அஞ்சு சாணுக்கு மேல் 9 சாணுக்குள்ளே பெருநீர் உண்டாம.

மார்பு தொடுகில் 22 சாணில் நீர் உண்டு என்பது. வலது மார்பு தொடுகில் பத்து சாணில் குமிழி ஊத்து உண்டு. அதின் கீழ் பெருநீர் ஓடை தோன்றும் என்று அறிகவும்.

தொடுகுறி பின்னும் ஒரு சாத்திரப்படி மூக்குத் தொடில் நீர் உண்டாம். முகம் தொடில் நீர் இல்லை. நெத்தி தொடில் வெட்டு வலிது. நீர் அற்பம்.

வயறு தொடில்...''கீழ்'' 3 முழத்தில் நீர் உண்டாம். உந்தி தொடுகில் குமிழி ஊத்து என்றும் அதில் வடமேல் மூலையில் குமிழி தோன்றும். குறுக்கு, முன்கால், செவி, பிடரி, தொடுகில் நீர் இல்லை. நெஞ்சு தொடுகில் பாறை வெட்டு வலிது. நீர் அற்பம். குதவளை தொடுகில் சிறுநீர் உண்டாம்;

மேடம் - தலை, இடபம்—முகம், மிதுனம்—கழுத்து, கடகம்—மார்பு, சிங்கம்—தோள், கன்னி—முலை, துலாம்—முதுகு, விருச்சிகம்—வயறு, தனுசு—அரை, மகரம் –துடை, கும்பம்—முழங்கால், மீனம்—பாதம்.—இவ்வண்ணம் ராசி அறியவும்—தொடுகுறி பாட்டு ராசியினால் பலன்.

தலை, நெத்தி—சின்னீர், முன்னம், தளவாய், முதுகு, முலை, வயறு, தொப்புள், துடை, முன்னங்கால் இத்தானம் தொடில் பெருநீர் உண்டாம். செவி, கழுத்து, நெஞ்சு, தொப்புள், அரை உள்ளங்கால் வகை—இவை தொடில் நீரில்லை என்று அறியவும்.

மேடம்—பார்; சிங்கம்—பாறைகள், கன்னீர், (கல்நீர்?) நன்னீர், மிதுறுபான், கடகம்—வெள்ளம், துலாம்—பார் உண்டு(ம்), விருச்சிகம்—பழங்கிணறு, தனுசு—சின்னீர், மகரம்—நன்னீர்.

பன்னிரண்டு சிறு கீறி உதையமான ராசியினாலே பலன் சொல்லவும்.

உதையமான ராசியினாலே பலன்.

மேடம்—பாறை;கல்லு—இடபம் தொட்டல்;சிங்கம், மிதுனம்—நீர் இல்லை; கடகம்—நீர் பெரிது; சிங்கம்—கல்லூற்று; கன்னி—நீர் பாயும்; துலாத்தில்—பார்; விருச்சகம்—சித்தூத்து; தனசு—மலை; மகரம்—பார்; கும்பம்—பெருநீர் உண்டு(ம்);மீனம்—பெருக நீர், புருசாள் நீர் பாபாசற சேர்விளை ீறற்வுலியாயும். ஆயுதம் வானத் தங்கிய பன்றியோடு தப்பனம் சகர் மத்து விளறியும், கும்பம்—முக்கால் நீர், இரண்டே கால் புருசம் தோன்றும். விருச்சிகத்தில் மூன்றே கால் புருசம் தோன்றும்.

துலாம்—முழுநீர் இரண்டே கால் புருசம் தோன்றும். சிங்கத்தில் பார் உண்டு(ம்). நீரில்லை கற்கடகத்துக்கு முழு நீர் உண்டு(ம்). இரண்டு புருசத்தில் தோன்றும். மேடம் வெண் கல்லு. நாலு பஞ்சமி தின (தனுசு) சிறு கல்லு பதினஞ்சு புருசம் தோன்ற என்று அறிவது. இடபம் கன்னி மூன்று புருசத்தில் தோன்றுவது.

பாலை, குறிஞ்சி, மருதம், முல்லை, நெய்தல் என்று சொல்லப்பட்ட அஞ்சு நிலமும் 9 அறியும்படி.

பாருள்ள இடம்—குறிஞ்சி--மலைச் சார்வு; பெருமணல் உள்ள இடம்—நெய்தல்—கடல் சார்வு; இன(ள)ம் பாருள்ள இடம்—முல்லை—காடுசார்வு; சேறு அணைந்த இடம்—மருதம் நாடு சார்வு; வெள்ளைச் சரலோடை நிலம் பாலை. இதில் நெய்தல் நிலமும் குறுஞ்சி நிலமும் நீர் அற்பம். பாலை நிலமும், முல்லை நிலமும் மருத நிலமும் இந்த மூன்று நிலமும் பெருக நீர் உண்டு(ம்).

## நிலக்கரு அறிய வகை

அறுகு, தெற்பை புல்லு, கஞ்சாங் கோரை, குறுஞ்சடைப் புல்லு, கோரை கூத்தான், பீளை குறுந்தட்டி, வெப்பூலா, கருப் பூலா, நீர்ப்பூலா, வேம்பு, கரந்தை, பொடுதலை, பஞ்சாத்திப் புல்லு, சாறணை, நாயுருவி, குறுஞ்சடை, புல்லு, செங்கோரை, மா விலங்கு—இவை உள்ள இடம் மருதநிலம். உவ்வா, இலுப்பை, நொச்சி மா விலங்கு புங்கு, அரசு, கல்லத்தி—இவை பாலை நிலக்கரு, பாலை, பூலாத்தி, வஞ்சி, அரசு, அத்தி—இவை முல்லை நிலக்கரு.

## புற்றுக்கரு

கொடிப்புற்று, பிடாரிப்புற்று, ஆமைப்புற்று, அப்புப்புற்று, புட்டுப்புற்று, ஊமைப்புற்று, உருவப்புற்று இப்படி நிலக்கரு, புற்றுக்கரு உள்ள இடத்தில் நீருண்டு(ம்) என்று அறியவும்.

நீருள்ள இடம் 'சங்கு, துடரி, சூரை, செங்கத்தாரி, செங் கோலறுகு, சிறுபூளை, சென்னாயுரிவி, பிடார் முயக்கி பொட்டல் இப்படி யொற்ற நிலத்தில் நீர் உண்டு என்று அறிவது. நீருள்ள இடம் மழைக்காலம் வெச்சென்று இருக்கும். கோடைக் காலம் குளுந்திருக்கும் என்றறியவும். இப்படி நீருள்ள இடத்திலுள்ள விருட்சம், பூடுகள் கோடைகாலம் குளிர்ந்திருக்கும். மழைக் காலம் வெச்சென்று இருக்கும் என்று அறியவும்.

இதில் அஞ்சு பீடு, ஏழு பீடு நின்ற இடத்தில் கிணறு வெட்டவும்.

## புற்றுக்கரு அறிய

கொடிப் புற்றாவது தினம் தினம் மண் செய்யும். அதின் கீழ் அஞ்சு முழத்தில் நீர் தோன்றும். அஞ்சு முழத்தில் ......த்தந் தோன்றில் ஒன்பது முழத்தில் பெருகநீர் தோன்றும்.

ஆமைப் புற்றாவது கண்திறவாமல் பேழை போன்று இருக்கும். அதின் கீழ் நாலு முழத்தில் நீர் தோன்றும். கரும்பார் வருகில் (வந்தால்) பன்னிரண்டு முழத்தில் பெருகநீர் தோன்றும். அதில் காக்கைப் பொன்னூரச்சியும் தோன்றும்.

பலவளிப் புற்றாவது இடம் தோறும் கண்திறந்து இருக்கும். அதின் கீழ் அஞ்சு முழத்தில் பெருக நீர் தோன்றும் அந்தத் தலத்தில் தூர்த்தழுத்த புங்கு நின்றால் அஞ்சு முழத்தில் பெருநீர் தோன்றும். அந்தத் தலத்தில் கட்டப்பரிசை விட்டு ஆரத்தில் சிலந்திநூல் இருக்கில் அஞ்சு முழத்தில் நீர் தோன்றும். அதின் கீழ் வடக்கடைய உண்டைப் பாரம் ரெண்டுண்டு(ம்). அதில் மூன்று முழத்தில் செம்பாம்புத் தாரை தோன்றும். அதில் வெள்ளெருக்கு நிற்கில் பெருகநீர் தோன்றும். அதில் புங்குபுராய் நிற்கில் வட மேற்கடையிருந்து ஆறு தலை வைத்து வரும். ஆகையால் நிலக் கருவும் அதற்கு ஆழமும் அறிந்து சொல்லவும்.

III

## பொருட்சம் பாட்டு

ஈண்டும் ஓர் கண்டத்து எலும்பு முளைபாம்பு
கண்ட வனத்தேயும் கதிரையுள்—தூண்டிய
நிலம் செய் காரிய வாக்காவில்
நிற்கிலாலி பிரமார்க்கி சாரம்

1. காரி யிரவி செய் காணும் காண நீர் இல்லை. ஈர்மதி புந்தி இரு கூடுகும் பொன்னிருள்வாம். சால அத்தாழ் கீழ் ஊற்றுக் காணும். நாலாம் இடத்தில், மேலூற்றுப் பத்தாம் இடத்தால்.

2. முல்லை கருமை. முழுப்பாலைதான் வெளுப்பு. கல்லாம் குறிஞ்சி சிவப்பாகும். நல்ல மருதம் பெரு மணலாம். வார்நெய்தல் நீர்க் கசிவாம்.

### பாலை நிலம்

பாலை நிலத்துக்கு நாளாவது (நாள்) ரோகணி பக்கம் அமர பட்சம், திசமி இராசி—கும்பம், அங்கிசம்—வெள்ளாளன். கிழமை—வெள்ளி, சீமை—செவ்வாய், பட்சி—வல்லூறு, இந்த நிலத்துக்கு மண்கட்டம் சாண் 6, அதில் சவளை உண்டு(ம்) வெள்ளைப்பார் சாண் 8. கொப்புரப் பவளப்பார் சாண் 4. கருங்கல்லும் கிட்டமும் 4 சாண். முற்றுக் கல்வம் பொன்னிறக் கல்லும் 2 சாண், ஆக 24 வெட்டுவது பாலை நிலம் முற்றும்.

### மருத நிலம்

மருத நிலத்திற்கு நாளாவது உத்திரட்டாதி. ராசி—துலாம். கிழமை—வெள்ளி, குலம்—செட்டி, புதன்—உதையம், இந்த நிலத்துக்கு மண்ணும் சரலும் சாண் 6. சிலக்குப்பார் சாண் 2, கொப்புர வண்ணப் பார் சாண் 2, மைபவளக் கல்லும், அடுக்குப் பாரும், முத்துக்கல்லும், விரால் வண்ணக் கல்லும் சாண் 6, சரல் சாண் 2. ஆக 18 சாண் வெட்டுவது—மருதநிலம் முற்றும்.

### குறிஞ்சி நிலம்

குறிஞ்சி நிலத்துக்கு நாளாவது திருவாதிரை. இராசி—கன்னி, பக்கம்—ஏகாதேசி, குலம்—இராசா, கிழமை—திங்கள். சனி—உதையம். தெற்கு, மண்கட்டம் சாண் 8, சரலும் வெண்

கல்லும் சாண் 4. கருங்கல்லு சாண் 4. பொன்னிறக் கல்லு சாண் 4. முத்துக்கல்லு சாண் 4. சரல் சாண் 2. ஆக 26 சாண் வெடடுவது. குறிஞ்சி நிலம் முற்றும்.

## முல்லை நிலம்

முல்லை நிலத்துக்கு நாளாவது திருவோணம், இராசி—மேடம், பக்கம்—ஏகாதேசி. கிழமை—வியாழன், குலம்—பிராமணன், புதன்—உதயம், பட்சி—காகம், ஊர், மண்கட்டம் சாண் 6, சரல் சாண் 2, சுக்குப்பாரும் கடுக்கிட்டப் பாரும் சாண் 10· மூற்றுக் கல்லும், கருங்கல்லும் மைப்பவளக் கல்லும் விரால வண்ணக் கல்லும், கொப்புரா வண்ணக் கல்லும் சாண் 16. ஆக 34 சாண் வெட்டுவது. தண்ணீர் துவத் (ர்) திருக்கும். முல்லை முற்றும்.

## நெய்தல் நிலம்

நெய்தம் நிலத்துக்கு நாளாவது—திருவோணம் இராசி—மிதுனம். பக்கம்—துவாதேசி, குலம்—சுண்ணியகுலம் (அன்னிய) கிழமை—சனி, இராசி—கற்கடகம், உதையம்—வியாழன், பட்சி—கோழி, மண்ணும் சரலும் சாண் 6, சுக்காம் பாரும் கருங்கிட்டப் பாரும் சாண் 16, கொப்புர வண்ணப் பார் சாண் 3, கடுக்கென்ற பார் சாண் 3, முற்று கல்லு சாண் 3. ஆகசாண் 31 வெட்டுவது. நெய்தல் நிலம் முற்றும்.

## இராசியின் மட்டு அறிய வகை

மேடம் பார்ச் சாண் 19
இடபம் நீர் முழம் 7
மிதுனம் உவர் மூனு 9
கற்கடகம் மூனு 6
சிங்கம் மலை மூனு 10
கன்னி மூனு 10
துலா மூனு 7
விருச்சகம் முழம் 7
தனுசு மூனு 7
மகரம் மூனு 12
கும்பம் பார் மூனு 5
கன்னி (மீனம்?) களி...5

## நிலத்தில் நிதானம் அறியும்படி

காடு சார்வு நிலம் முல்லை, நாடு சார்வு நிலம் மருதம், மலை சார்வு நிலம் குறிஞ்சி, நீரன்றி வேனிற்கேறு நிலம் பாலை, வன்பரல் குறிஞ்சியும் பாலையும் ஆகும்.

பொருட் சம்பாற்கார்சி, சில (நீர்) ராசி யாகிலும், சிலக் (நீர்) கோள் நோக்கிலும் நீருண்டு என்பது. அல்லாதவை நீரில்லை என்பது. சுபக்கிரகம் நிற்கினும் நோக்கினும் நீர் உண்டு என்பது.

ஆருடம் உதையத்துக்கு நாலா மடம்......ராசியாகிலும், சிலக் கோள் நிற்பினும், சிலக்கோள் நோக்கிலும் நீர் உண்டு என்பது. சுப நோக்கிலும் நீர் உண்டென்பது.

அல்லாது பாவக்கிரகம் நிற்கில், நோக்கில் நீர் இல்லை என்பது. கோளுக்கும் ராசிக்கும் அடைத்த திக்கில் ஊத்து என்பது.

வேத்து (வேற்று) ராசியும் சிலக் கோளுமாகில் மேலூற்று என்பது. அல்லாதவை கீழ் ஊற்று என்பது. கபிப்பு சில ராசியில் ஆகில் மேலூற்று. லெக்னாபதி இருந்த திசையின் ஊற்று என்று சொல்லவும்.

## மண் நிறம் கிரகத்தினால் நிறம் சொல்ல

செவ்வாய்—செம்மண்
புதன்—வண்டல்
வியாழன்—விரவு மணல்
ஆதித்தன்—செமம் பருக்கைமண்
சனி, பாம்பு—களிமண்

## பாத்த கோள் இருந்த கோள் நிறம் சொல்லவும்

உதையம்—சபிடம், எமடம்,—யமிடம். சில ராசி ஆகில் நற் கோள் நோக்கில் நீர் உண்டு(ம்). பாவ(ா) நோக்கில் நீரில்லை நீர் உண்டாகில் ஏு உண்டு. பாவ(ா) நோக்கில் கிணத்தில் பாறை உண்டு(ம). பனியும் உண்டு.

கிணறு பார்க்கும் இடத்தில் யமிடம் சில ராசியாகினும் 'சிலக் கோள் நோக்கினும் சிலக்கிரகம் இருக்கினும் ஆற்றுவரவு சொல்லறுலூற்று வரவு வார இடம் வாய்வு மூலை சோனு கன்னி மேற்குவ்வன்.

ஊற்று வரும் ஒரு வேளை தெற்கே இருந்தும் அக்கினி மூலை யினாலேயும் ஆறு வரும் என்றறியவும்.

## IV

கவி முல்லை குறிஞ்சி முழுப்பாலை நேயத்துடன் அன்னி மருத நிலம் அஞ்சாகும். வெள்ளி முடி சேடன் இவை எனவே கூறுவதுவே விளம்பு நூல்

இன்னம் ஒரு சா……படிவுரை

### முல்லை நிலம்

முல்லை நிலம் ஆவதுவே புல்லும் பொட்டலும் பருமணலு மாக இருக்கும். இந்த நிலத்தில் கடலாடி, தெற்பை, கோரை, புட்டுப்புத்து, அப்புப்புற்று மருங்கு மணலுமாக இருக்கும். இந்த நிலம் சிலம் உண்டு என்று அறிவது. மண் கட்டம் சாண்பு (5), அதின் கீழ் சுருளைப்பாரும் தண்ணீரும் சாண் 5 ஆக 24 (3) வெட்டவும்.

### குறிஞ்சி நிலம்

குறிஞ்சி நிலம் உவர் கொண்ட மண்ணும் மணல் பொட்டலும் ஆக இருக்கும். இதற்த மணல் சரல் போன்றதாக இருக்கும். மண் கட்டம் சாண் 3, அதின் கீழ் அடுக்கு வரி அறண் சாண் 5, அதின் கீழ் குருவ மண் சாண் 7, அதின் கீழ் சுருளைப் பார் சாண் 3. அதின் கீழ் பலகைப் பார்வரி நீளமாகச் சாண் 7. ஆக சாண் 25 நீர் அற்பம் என்றும் கற்க நீர் என்றும் கோசலம் கடுத்த தண்ணீர் சில மூன்று முழத்தில் ஓடை தோன்றும். அதில் நண்டு, தேரை, தவளை இருக்கும். அதின் கீழ் அஞ்சு முழத்தில் குழி தோன்றும். சிறிது நீராக வரும். அதின் கீழ் ஏழு முழத்தில் பெரு வெள்ளம் உண்டாம். பீடு, பீளை, தும்பை உண்டு (ம்) அது அறியவும்.

முற்றும்.

### பாலை நிலம்

பாலை நிலத்துக்கு வகை காடு கொண்டதாகச செம்மண்ணும பருத்திக்கொட்டைப் பாரும், வேங்கை நிறமாக இருக்கும். இதற்த மேல நிலப்பீடு அத்தி, வெப்புலா, இசந்த உருவப் புத்து, ஆமைப்

புத்து, வளைந்த பூமியுமாக இருக்கும். அந்த நிலத்தில் சிலம் உண்டு என்று அறியவும்.

இதற்கு மண் கட்டம் சாண் 5 அடுக்கு மாங்கொட்டைப் பார் சாண் 3, வெள்ளைச் சீனிப்பார் சாண் 2, வரிச்சுறுணைப் பார் சாண் 5, ஆக பார் சாண் 15........அதிலறைவு போலே தோன்றும். சிறுநீராக வரும் அதின் கீழ் வென்றலைப்பாரும் செம்மண்ணு மாகச் சாண் 6. அதின் கீழ் சுறுணைப் பார் சாண் 7 ஆக சாண் 28 உம் சத்த சமுத்திர வச்சிர வச்சிர கெங்கா சிலம் தாரை விழும். அதில் பெருநீர் உண்டாம். பாலை நிலம் முற்றும்.

## நெய்தல் நிலம்

நெய்தல் நிலமாவது கரிசலும் வெப்பலும் பொட்டலுமாக நூலாம் பாசி சுற்றியிருக்கும். மழைக்காலம் வெச்சென்று இருக்கும். கோடை காலம் குளுந்திருக்கும். இதற்கு மண் கட்டம் சாண் 5, மாங்கொட்டை பார் சாண் 6, வெள்ளை மயிலைப் பார் சாண் 3, கரும்புள்ளிப்பார் சாண் 5, சுருணைப் பாரும் மண்ணுமாக சாண் 5, ஆக சாண் 24 உம் பீடு பீளை, தும்பை, சிறுகீரை, நாயுருவி, கருப்புலா, கடலாடி, வெள்ளைச் சிலம் பால் போன்ற தண்ணீர். முற்றும்.

## மருத நிலம்

மருதநிலம் பெருமணலும் சிப்பியும் சல்லியும் களச்சிக் கல்லு மாக இருக்கும். அந்த நிலத்தில் யெலியும் வெள்ளை நுள்ளியும் பாற்குறட்டையும் பவளக் கொடியும் தாளையும் முளைத்திருக்கும். மண் கட்டம் சாண் 11. குருவமண்சாண் 5 விர........ சல்லி சாண் 9, அதின் கீழ் ஈரம் பொறை மணலுமாக இருக்கும். இதில் பாசி நிற பார் இருக்கும்.சாண் 5 அதில் 7 சாணில் வெள்ளம் தோன்றும் இதின் கீழ் 11 சாணில் பெரு வெள்ளம் உண்டாம். ஆக சாண் 48 மருத நிலம முற்றும். குமர நாயகன் துணை.

## வேறு

இடபம் கடகம் விருச்சிகம் கும்பம் மீனம் துலாம் இந்த ராசி யும், சுக்கிரன், சந்திரன், ராகு இந்த மூன்று கோளும் சிலராசி, சிலக்கோள் என்றறிகவும்

சில (நீர்) நட்செத்திரம்

மகயிரம் கேட்டை, அலை (மூலம்?), சித்திரை, சோதி, விசாகம், திருவோணம், அவிட்டம், சதையம், உத்திரட்டாதி, ரேபதி, அசுபதி, புணர்தம், பூசம், ஆயிலியம் இந்த பதினஞ்சு நட்செத்திரம் சில நட்செத்திரம் என்றறிவது.

கோட்டுக்கு மாவுத்தன், குதிரைக்கு லாடம், குறியறிந்து மாட்டுக்குச்சூடு மனிதர்க்கு மகிழ்ந்திருக்கும் வீ(ட்)டுவிருச்சத்துக்கு எள்ளுப்பொடியை விரவியதில் போட்டு பிரட்சையைப் பாரென்று விளை பூமியிலே........

முற்றுப் பெறாதது.

---

கேரளப் பல்கலைக் கழகத்தின் சுவடிகள் நூல் நிலையத்தின் 11402. எண் உள்ள ஏடு.

உ

# கூப சாஸ்திரம்
# (கூபம் சாத்திரம்)

## காப்பு

இந்து ரவி சூழ் ஆழி இயல் புவியில் யானும்
பந்.........பதினெண் ரிஷிகள் பாத பயன் பார்த்து
சிந்து புவி கெங்கைதனை சிறந்த பலன்தான் உரைக்க
தந்த முகத்து ஐங்கரன் தாள் காப்பு

1. பார்க்கும் இந்த நிலம் தனக்கு பாலை முல்லை பகருமே
குறிஞ்சி நெய்தல்
மார்க்கமாய் மருது சேர்ந்த மகிமையால் நிலங்கள் எல்லாம்
ஆர்க்குமேல் நிலங்கள் தன்னில் அருளுடன் கருவும் தேர்ந்து
பார்க்கவே பூமி தன்னில் பரிசனம் பார்த்துச் சொல்வோம்

## பாலை

2. பரிசனமாம் பாலை நிலக் கரு ஏது என்னிம்
பகருவேன் வெள்ளைமண் வெண்சரல் உடைவெள்ளை
தெரிசனமாம் வெண் பொட்டல் வெள்ளெருகு இசங்கு
தேருவாய்ப் பால்குறண்டி ஆவாரை பிரண்டைக்
கரிசனமாய் ஆத்து பூச்சி கடுங்கரு நண்டுக் குழி வேனல்
நண்டு
கனத்த புல்லு மொத்தையுடன் உவரும் செவ்வல்
பரிசனமாம் கரிசல் தானும் கலந்துடன் கிடக்கும் பூமி
பலன் மிகும் கிணறு வெட்டப் பாரினில் செலம்
உண்டாமே

## முல்லை

3. ஆமென முல்லை தன்னில் அளருமே கரிசல் செம்மண்
தாமென அளலே அளிசல் சுருண்டுதான் களி மண்ணாகும்
ஆமென கண்ணு பூளை மடக்கள்ளி எருக்கு வெள்ளெருக்கும்
ஆகும்
ஆமென கடலாடிகள் பிரண்டை ஆவரை வெள்ளோடை
யாமே

4. வெள்ளைதான் சிறு கத்தாளை விரவிய பெருத்தக் கல் மண்
கிள்ளைதான் இலுமிச்சை இலுப்பை கிளம்பிய மரமாம்
தென்னை
பிள்ளைனாம் குளங்கள் காணும் பேணிய கீழ்நி......கொள்ள
தள்ளை தானங்கள் பார்த்து தயவுடன் கிணறு கொள்ளே

## குறிஞ்சி

5. கொள்ளவே குறிஞ்சி காடு குணம் இல்லை கோளாம் கல்லு
தள்ளவே பரும்பு காடுத் தருமணம் சீனிக் கல்லு
மெள்ளவே படலை புத்து மிகும் விடலி கருந்தும்பை
துள்ளவே செடிகள் பூடு துகை வகை இல்லாதாமே

6. ஆமெனக் கரிசல் செவ்வல் அழி பொட்டல் கலந்து காணும்
தாமென சிலது பூமி பாலையில் கரிசல் தோன்றும்
நாமென கீழ் நீர் கொள்ள நல்லதோர் பயிர்கள் செய்ய
காமென கூபம் கிள்ளக் கனச் சதிர் முகனும் ஆகார்

## நெய்தல்

7. ஆகுமென முனிவர் சொன்ன ஆனதோர் நெய்தல் தன்னில்
பாகுமென மண் சிகப்பாம் பருமணல் கலந்தே தோன்றும்
ஆகுமே வெள்ளி பொன் போல் அருள் மினிமினியாய்த்
தோன்றும்
போகுமே குடைபுத்து உண்டாம் பூமி மாக்கல் உண்டாமே

8. உண்டுமே வெள்ளறுகு இலந்தை கள்ளி உகந்த விடணி
பூலா
கண்டு பொருப்பரு குனில் குமிழி க(ா)த்தபே யுள்ளி சூரி
பண்டு துாற் பருத்த அண்டல் பிணை பின்னல் கொடி அறுகுத்
துண்டு பார் செந்தாந்தை புத்த......துயில் வெள்ளை
களிமண......மே

9. ஆகுமே கீழ் நீர் கொள்ள ஆத்துட.........
.........குழலாள்...... . வளருமே நன்றாம் பூமி
கோகுலத் தவர்கள் தேவி குணமுடன் கிடாச்சம் உண்டாம்
ஆகுமே கீழ்நீர் நன்னீர் அருளுடன் கூபம் நன்றே

## மருதம்

10. நன்று தான் மருது ஏது என்னில் நல்ல பால் பொட்டல்மண் சிகப்பு
குன்றுதான் ஓடை போக்காம் இயல் மணல் பொடி மாக்கல்லு
சென்று தான் இருக்கும் நாட்டறுகு கோரை சிலந்தி நாயுருவி சாரணைகள் சூரி
மன்றினில் கூறு வேல் கட்டு கொடி உடன் மரமாம் பாலை

11. பாலை செடி வெள்ளோடைக்களிமண் வில்லைப் பால் புல்லு
காலைசேர்க்க கண்ணுப் பூளை கடலாடி கோரைப் புல்லு
மாலை சேர் கீழ்க்காய் நெல்லி மகிழும் செங்கோலறுகுதுத்தி
வேலை சேர் நாங்குளங்கள் உச்சி வேனலில் தளையும் பூமி

12. பூமிகள் கீழ்நீர் கொள்ள புகழ்ந்திடும் பயிர்கள் தானும்
தாமிதம் இல்லா வேளை தளைத்திடும் கூபம் நன்றாம்
நாமிதில் நான்கு சாதி வகை நல்ல கருக்கள் தேர்ந்து
ஆமிதென்று உலகில் நல்ல அருள் கூபம் வகுத்தோர்
(நூலோர்)

## மிளுகு பாலை

13. நூல் விளிமாதே கேளாய் நுவன்றனர் மிளுகுபாலை
மால் வெள்ளை நிறம் கலந்து மண் பொட்டல் புங்கு மண்கள்
கால் பலகறுப்பில் வெண்மை கண் பொட்டல் பொடியா மண்கள்
ஆல்வேல் விழியின் மாதே அன்புடன் தயவாம் பூமி

14. தயவதாம் நெரிஞ்சி வேனல் நண்டு தார் குழிகள் தோணும்
நயமுடன் செங்கு ஆவாரை நாடியே ஈந்து கூட்டம்
வயமுள்ள பாலாட்டம் குளை வளர்ந்துமே படர்ந்து நிற்கும்
புயபெல வெண் கொளுஞ்சி புனல் நாணல் நொச்சி பூலா

15. பூலாவுடன் குப்பை மேனி பொருள் சாரணத்தி பூளை
தீதிலா கொடி அறுகு வட்டத்தெரு துத்தி நிலப் பனைகள்
ஆலமால் கிரந்து வில்லை ஆதளை பால் கொரண்டி நத்தை
பால சீர் செங்கழுநீர் கோரை மகிழ்ந்த பொன்னாங்காணி பூடே

16. பூடோடு பொடுதலை நசி நசிற் பூமி புகந்தோடை உருண்டமாக்கல்லுப் பாசட்டி
காடோடு புங்கு மண் பொடி மணல் ஊச்சி கூடு கண் வெள்ளை கருப்பு நீலம்
தோடோடு போலே நீண்டு தோணுமே வால்கள் போலே
நாடோடு கீழ் நீர் வெள்ளம் நல்ல மண் பார்களாமே

வேறு

17. ஆகுமே குறிஞ்சி பாலை அம்புலி நெய்தல் பாலை
ஏகுமே பூர்வசேமன் இயல் மிளுந அதுவாம் பாலை
போகுமே மருது பாலை புகழ்ந்திடும் குசனே ஆகும்
ஏகுமே புந்தி நெய்தல் இசைந்திடு மருதாம் என்னே

18. என்னவே முல்லை நெய்தல் இயல்புடன் குருவே ஆகும்
துன்னவே சுங்கன் பாலை துய்ந்திடு மிளுகு பாலை
அன்னமே குறிஞ்சி நெய்தல் அருள் சனிக்குத் (தப்) பாலை
சொன்ன மெளுகு பாலை சூழ்ந்திடும் மிளகாம் பாலை

19. பாலை சேர் குறிஞ்சி காடு பறம்பொடு கேதுவாகும்
வாலை சேர் கண்ணாய் இந்நூல் வகையுடன் தேர்ந்து பார்த்து
ஆலை சேர் நீர்கள் மெத்த அருள் பாலை தன்னிலே தான்
மாலை சேர் கெங்கை தன்னை மசிந்திட வகுத்தார் நூலோர் நீர் தோன்றுமிடம்

20. வகுத்திட்டார் பாலை தன்னில் வளரும் சாண் இருபத்திரெண்டில்
தொகுத்திட்ட முல்லை தானும் துயறந்த சாண்.இருவத்தஞ்சு
வகுத்திட்ட குறிஞ்சி சாண்கள் வளர்து(தொ)கை நாலெட்டாகும்
வெகுத்திட்ட நெய்தல் தானும் வினவு மூ வெட்டதாமே

21. ஆகுமே மிருது சாண்கள் ஆனதோர் இருபத்தஞ்சும்
வாகுசேற் மிளுகு பாலை வளரு மூவ்வாறு ரெண்டாம்
பாகுநீர் ஆழம் எல்லாம் பார்த்துமே மிகநூல் தேர்ந்து
ஆகுமே சுற காலங்காள் அருளுடன் செப்பல் உற்றேன்

22. செப்பிய மரியாள் தேளும் சேரும் சாண் இருபத்தாறு
ஒப்பிய நண்டு கோலு...மூ ..ற்கு'-ம் மூவெட்டாகும்
தப்பிய ஏது மானும் தனி துகை இருபத்த அஞ்சாண்
இப்புவி அரிவில் சாண்கள் இயம்பும் நால் எட்டதாமே

23. எட்டுடன் உபயம் சன்னி இருக்கும் சாண் இருபத்தேழு
கட்டுடன் மீன்றி கருதும் சாண் இருபத்தி ரண்டாம்
மட்டுடன் குழலாய் கீழ் நீர் மிகிந்திடும் இச்சாண் கீழே
தொட்டுடன் கார் காலத்தில் துகை தெரிந்து உரைகள்
கூறேன்

24. கூறிய கதிரோன் புந்தி குணமுடன் இருபத்தஞ்சாண்
தேரிய சோமனாற்கு திருந்தும் சாண் இருபத்திரண்டாம்
சீரிய பூர்வ சோமன் சேர்ந்த சாண் மூவாறாகும்
வாரிய பூமன் பொன்னோன் வளர் நாக மூவெட்டாமே
சோமன் - சந்திரன், பூமன் - செவ்வாய்

25. வெட்டவே சுங்கனாவிற்கு வினவும் சாண் இருபத்திரண்டாம்
குட்டவே சனியொன் கேது குணமுள்ள குளிகனாற்கும்
இஷ்டமாய் நால் எட்டாக இசைந்திடும் சாண்கள் தானும்
மட்டமாய் நீர் ஆழங்கள் மணமுடன் தொகுத்தார் நூலே

சுங்கன் - சுக்கிரன்; குளிகன் - காணாக் கோள்களில் ஒன்று.

26. நூல்விளி மாதே கூபம் நுவன்ற பார்க்கசிவு நீர்கள்
கால் பல தார்க்கால் லகள் கவிப்புவாரூட் கோளக்கல்
சால் பல ராசி நோக்கு...புவிக் கருக்கள் தேர்ந்து
கோல் விழி மாதே கீழ்நீர் குணமுடன் வகுத்து உரைப்பாம்

## கீழ்நீர்

27. உரைப்பது உச்சக்கோள்கள் முகந்...நநீர் சமீபம் சாண்கள்
அரைப்பது ஆச்சிகோள்கள் அதுக்குள்ள சாண்கள் நீராம்
நிரைப்பது நட்புகோள்கள் நின்ற சாண் நாலில் மூன்றாம்
விரைப்பது பகை நீசக்கோள்கள் வெட்டவே கீழ்நீர் தூரம்

28. தூரமில்லை ரவி உதிக்கில் பூமி சாரம்
துவண்ட சென் பருக்கை மண்ணாம் சரல் சாண் ஆறு
காரமுண்டு மாங்கொட்டை கடும்பார் சாண்தான்
கனத்த சறம் சிவந்து உருளும் சாண்கள் மூணு
பாரமில்லை செம்பருக்கை அடுக்கு பார்கள்
பர்ந்த சாண் நாலின்மேல் பொன்னிற பார்சிகப்பே
ஆகும்
சாரமுடன் நாலுசாண் அதின் மேல் கெற்பம்
சார்ந்திடுமே சுக்காக்கல் சாண்தான் ரெண்டே

29. ரெண்டே சாண் தாண்டிப்பார் புத்து பாரும்
ரேகித்த புறப்பார் சாண்கள் ரெண்டு
செண்டே ந்ர் பெருக உண்டாம் சிவந்தடுக்கு
சேர்ந்திடும் நீர் சாண்கள் ரெண்டாம் செலுழும் காணும்
வண்டே கேள் கீழ்நீர்கள் கூபம்தானும்
வளர்ந்திடுமே பயிர்கள் மெத்த வாழ்வும் உண்டாம்
பண்டே நான் புவியின் உள்ளே கடுக்கள் பார்கள்
பகர்ந்திட்டேன் மேதியினில் கீழ்நீர் காணேன்

30. காணவே அமரமதி மணங்கள் தானும்
கனத்த உவர் சிகப்புடனே சாம்பல் மேனி
தோணவே அளிதுயர்ந்த பொட்டல் வெண்மை
துயர்ந்திடுமே சாண்நாலு சரல் பார் நாலு
பூணவே சுக்காங்கல்லு அடுக்கு பார்கள்
பூட்டிறேன் சாண் நாலு புகந்தே நீராம்
ஊணவே வெள்ளைப்பார் நீருமாக
உகந்திடுமே சாண் நாலு ஊணிப்பாரே

31. பாரதுவே அண்ட பார்கள் பகர்ந்திட்டேன் சாண்மூன்று சேர்த்து பாரும்
தேரதுவே சாண்கள் ரெண்டு பிண்டி பாரும் திரமுடனே கீழ் நீரும் தோன்றும் பாரு
கூறதுவே சாண்கள் மூவெழு தன்னில் குணமுடனே வெட்ட வெகு நீராம் கூபம்
தாரதுவே தளைத்திடும் பார் தயவாம் பூமி தரதலத்தில் வேத முனி உரைத்த நூலே

## பூர்வமதி நிலம்

32. நூலதுவே பூர்வமதி நிலந்தான் சொல்ல நுவன்ற
வெண்பார் பொட்டலுடன் பொடியே மண்கள்
காலதுவே புங்குமண்கள் கலப்பு வெள்ளை கருத்துடனே
சாண் மூன்றா......பேர்க்கு
வேலதுவே உப்பு வெள்ளை சரல் சாண் ரெண்டு
வினவும் டே......ர்ந்து பார் வெள்ளை நால்சாண் ஆறும்
சாலதுவே வெள்ளைபார் சாம்பல் பாரும் சரல்
நவின்ற சுண்ணாம்பு பார் சாண் நாலே

33. நாலுடனே நீர்பாரும் சேர்த்துப் பாரும்
நயமுடனே சாண்கள் ரெண்டு நவின்று பாரு
மாலுடனே அடுக்குபார் அப்புபாரும்
அதின் கீழே சேர்த்து பார் நீருமாகும்
சாலுடனே பெருநீராய் சமுத்திரம் போல
சாதகமாய் கீழ் நீரும் தோன்றும் பாரு
பாலுடனே கிணற் பாக்கியம் வாய்க்கும் நல்ல
பயிர் முதலாய் சிரிதேவி வா(ய்)க்கும் பாரேன்

34. வாய்க்குமே செவ்வாய்க்குப் பூமி தானும் வந்திடுமே
சிவந்த மண்கள் சாண்கள் அஞ்சாம்.
தாக்கிமே மஞ்சள் சரல் சாண் தான் ரெண்டு தயவாக
அடுக்கு மஞ்சள் பார்தான் காணும்
ஆய்க்கிமே சாண்தான் நாலு குங்குமப்பார் அன்பாக
அப்புப்பார் சாண்கள் நாலு
தேய்க்கிமே சிவந்தடுக்கு பாரு சாண் மூணு திறமாக
வரிப்பாரும் ரெண்டு சாணே

35. சாணே பார் சிப்பிப்பார் சிவந்தடுக்குச்
(சா)ந்திடுமே ரெண்டுசாண் அதிந்தன் கீழே
வீணேதான் போகும் அந்த கீழ்நீர் ஊற்று
வினவுமே சேர்த்து பார் நீரும் ஆகும்.
ஆணே கேள் சாண்கள ரெண்டில் அருளும் கெங்கை
அன்பாக வாருதி போல் தோன்றும் கீழ்நீர்
கோனேரும் தென்மலை சார் முனிவோர் சொன்ன
குறிப்பதுவை... குணமாய் செப்பே

## புந்தி நிலம்

36. செப்பியதோர் புந்தி நிலம் புவியில் சொல்ல
சேர் வண்டல் மண்கள் புத்து மிகவே காணும்
உப்பியதோர் சரல் மண்ணும் சாண்கள் ஆறு
உகந்திடுமே மாங்கொட்டை சாணே ரெண்டு
தப்பியதோர் வெண்பார்கள் சாண்கள் மூணு
தரித்திடுமே முத்துப்பார் சாண்ரண்டாகும்
அப்பியபார் மாவெள்ளை சாணே மூன்று
ஆனதொரு வரிப்பார் சாண்நாலு தானே

37. தானே கேள் அதின் கீழே பொன்னிறக்கல்
தயவாக அடுக்குப் பார் நீர்உள் அஞ்சாண்
வானே கேள் பாறடுக்கு சிப்பி யாக
வகுத்திட்டேன் சாண் நாலு சேர்த்து பார்கள்
நானேது சிந்துநீர் போல் நல்ல ரெண்டு
சாண்...வில் நன்னீர் காணும்
மானேரும் குவிமுலையாய் பெருநீர் உண்டாம்
மகத்தான கும்பமுனி கூவல் காணேன்

38. காணவே பொன்னவர்க்கு நிலமே வண்டல்
கனமணலும் கலந்து இருக்கும் சாண்கள் நாலு
ஊணவே சரல் ரெண்டு இருகுத் தாங்கல்
ஊட்டினேன் மெல்லினமாய்ச் சாண்கள் நாலு
தோணவே அடுக்குபார் மஞ்சள் பார்கள்
தொடுத்திடுமே நாச்சாணும் சுக்கா கல்லு
கோணவே விரவி...சோர் முச்சாண் நீரும்
கூரடுக்கு வரிபாரும் முச்சாண் ஆகுமே

39. ஆமேபார் பொன்னிறத்துத் தகட்டு பார்கள்
அன்பான நீர்பாரு முச்சாண் நீளம்
தாமே கேள் சிவந்தடுக்கு நீர்பார் நன்னீர்
தயவாக கெற்பவரி பிண்டி பாரும்
போமே சாண்ரெண்டு மட்டும் புகலு நன்னீர்
வெட்டு எளிதாம் பூமி வலு நன்றாய்க் கேளு
நாமே தான் கூபம் உரை நன்றாய் தேறி
நாட்டினேன் புவியோர்க்கு நன்றாய் தேறேன்

## புகற் நிலம்

40. நன்றதுவே புகற்நிலந்தான் நாட்ட கேளு
நல்லநிறம் வெண்கழுகு கீறி வெள்ளை
நின்றதுவே சாண் நாலு சுறல் சாண் ரெண்டு
நிலைத்திடுமே வெள்ளை பார் சாண் மூன்று ஆகும்
சென்றதுவே மாவெள்ளை பார் இரு சாண் சுக்காங்கல்லு
சேர்ந்திடுமே சேர்த்துப்பார் நீரும் நாச்சாண்
வென்றதுவே களிகெற்பம் புறப்பாரும்
விரவி முச்சாண் நீளமதில் வெள்ளம் காணேன்

41. காணவே சிலராசி சுங்கன் மீன் கோல்
கண்டிடவே மண்சரலும் சாணே நாலு
தோணவே நீர்பாரும் நீரும் அஞ்சாண்
து(தொ)டர்ந்து இருசாண் புறப்பாரும்
பூணவே பேர் உள்ளம் வெட்டு எளிதாம்
பூட்டினேன் சுங்கனை போல் மதியும் அப்பா
காணவே நல் கூபம் தானே ஓடும்
கனமாக வோரை ரெண்டு கரையில் போமே

42. ரெண்டுபார் முடவன் பூமி ரிணங்களி வறண்ட மண்கள்
வண்டல் சேர் கருங்களிமண் வறண்டதோர் களிமண் ஏழு
பண்டு கூறும் மணிசரல் தான் ரெண்டு பகருவாய் செங்
கொட்டை மிளகு பாராம்
கண்டு தேர் சாண்கள் இரண்டு கருப்புபார் இருசாண் கூறே

43. கூறவே காக்காய் பொன்பார் குணமுடன் சாண்கள் மூன்று
தேறவே சாம்பிறாணிப்பார் திறமுடன் சாண்கள் மூன்று
சாரவே நீர்பார் ரெண்டு சாத்தினோம் அடுக்கு பார்கள்
வாரவே சாண்கள் ஒன்று வகுத்திட்டார் பெருநீர் ஆமே

வேறு

44. ஆகு மெளுகு பூமி அனல் களிர் உண்ட மண்கள்
போகுமே சாண்கள் நாலு புகல் ரெண்டு சரல் சாண் ஆகும்
ஏகுமே மாங்கொட்டை பார் இயலுடன் இரு சாண் ஆகும்
வாகுசேர் காக்காய்பொன்பார் வகுத்திட்டார் சாண்கள் நாலே

45. வகுத்திட்டார் முத்துக்குத்துப்பார் வளர்ந்திடும் சாண்கள் நாலு
தொகுத்திட்ட கொப்பரைப்பார் தோன்று முச்சாண் ஆகும்
மிகுத்திட்ட வரிப்பார் நாலு மிளுகுபார் சாண்கள் ரெண்டு
வகுத்திட்டார் சேர்த்த அப்புபார் நீர் வளர்ந்திடும் சாண்கள்
நாலே

46. நாலுடன் கேதுவாகில் நயமில்லை உவர்மண் பூமி
மாலுடன் கருங்கல் போத்தை மகிழ்ந்திடும் களிமண் புத்து
காலுடன் நீர்கள் தோன்ற கடினமே வலுபாராட்டும்
சாலுடன் தண்ணீர் அற்பம் சாத்தினோம் புவியில்வெட்டேன்

47. வெட்டவே சிலராசி தன்னில் வினவும் முன் கோள்கள் காணில்
வெட்டவே எளிதாம் பாரை...... நன்னீர் காணும்
வெட்டவே பார்கள் எல்லா வினவுவாய் இளக்கமாகும்
வெட்டவே கடகராசி விளங்கிடாது என்று செப்பேன்

வேறு

48. செப்பவே கடகராசித் தன்னிலே செலக்கோள் நின்றால்
ஒப்பவே வலுவாம் பாறை உடைத்திடில் நன்னீர் காணும்
இப்பவே செலராசி தன்னில் இருந்திடும் பார் கோள்ஆதில்
தப்பவே கருங்கல் பாறை தடுத்திடும் கூபம் நன்றே

49. நண்டு மான் எருது கோல்மீன் நல்குடம் திங்கள் வெள்ளி
கண்டு பார் நாகம் நன்னீர் கனதினம் கேட்டை நான்கும்
பண்டுமோ ணங்கள் மூன்று பகரும் உத்திரட்டாதி மூன்றும்
செண்டு மான் தலையே பூசம் செப்பம் உண்டாம் புணர்தம்
ஆயில்

50. ஆயில் ரோகணியே சோதி ஆன தோர் உருத்திராடம்
பாயில்கேள் சதயம் விட்டம் பரும்பிடி அத்தம் ஓணம்
சேயில் பார்இரு பூசங்கள் சேர்ந்திடும் சிலராசி தன்னில்
வாயில் நீ கூப......கள் வகுத்திட தினமும் கூறேன்

51. கூருமியாள் எருது நண்டு கூரரி மேடவீதி
பாருநீ தகர் மீன் கோல் பெண் பகர்ந்திட்டார் இடபவீதி
தேருநீ குடமான் வில் தேள் தேர்ந்திடு மிதுனவீதி
ஆருனீ கிரகப்பாதை அருந்தியே அருக்கன் கூறே.

52. அருந்தும் ஆருடம் தன்னால் ஆதித்தன் வீதி எண்ணி
திருந்துமாம துகையைக் கண்டு தேர்ந்தார் காலம் தன்னால்
பொருந்தும் முற்துகையே எண்ணா புகழ்ந்திடக் கண்ட ராசி
இருந்துமேல்...... மிராசி இயல்புடன் அறிந்து பாரேன்

வேறு

53. பார்க்கவே கார் காலத்தில் பகருவேன் உதித்த ராசி
ஏற்கவே சரமே மேல்நீர் இயலுடன் திரமே கீழ்நீர்
மார்க்கமாய் உபயம் அய்ய மகிழ்ந்திடும் பெரு நீராகும்
சேர்க்கவே கசிவு ஊத்து சே...ந்தனை பார்த்து சொல்லே

54. சொல்லிய உதித்த ராசி சுகம்தரும் நாலாம் ராசி
மெல்லியக்க.. ராசி மிகு ஆருட ராசி
புல்லிய சுபக்கோள் நிற்க நோக்கிட புகலும் நன்னீர்
வல்லிய பாவக்கோள்கள் வந்திட துவர்ப்பு நீரே

55. நீரதில் பாவக்கோள்கள் நின்றிட பகை நீசங்கள்
பாரதில் மிகவே தோன்றும் பலன் அதில் கசிவே காணும்
கூரதில் சுபக்கோள் கூடில் குணமில்லை முன் போல் நீராம்
காரதில் கலந்தே கோள்கள்கன்றிட தண்ணீர் அற்பம்

56. அற்பமே கேது மாந்தி அனல் கரி சிலத்தில் நிற்க
சொற்பமாய் தண்ணீர் காணும் சுகமில்லை துவர்ப்பு உப்பாம்
கற்பமாய் சிலக்கோள் கூடில் கனம் வெகு துவர்ப்பு நீராம்
சிற்பமாம் சிலக்கோள் தன்னைச்சேர்ந்திட துவர்ப்புதண்ணீர்

57. தண்ணீர் பெருகும் கோள் நண்டு தறமான் குடம்மீன் இடபமுமாம்
நன்னீர் சுங்கன்னார் ஓடை நல்ல மதியோன் பெருநீராம்
பன்னீர் ஒழுகும் பொன்புந்தி பாம்பும் பெருநீர் அமரமதி
கண்ணீர் உப்பும் ரவி கரியோன் கறும்பார் கேது குளிகனுமே

58. அனுவாம் பொன்னு மதி ஒன்றில் அருந்த நன்னீர் மிக உண்டாம்
மனுவாம்வெள்ளி மதிஒன்றில் மருவ பெருநீர் ஊத்துஉண்டாம்
தனுவாம் பாம்பு வெள்ளி மதி தயவாய் கூடில் மிகப் பெருநீர்
அனுவாம் புந்தி ராகுவுடன் அருந்தக் குருவும் பழங்கிணறே

வேறு

59. கிணற்றின் அரைதான் உரைகேளு கீழ்மேல் முதலாய் அரை ரெண்டு
மணத்தில் வரையே தென்வடலாய் மனமாய்க்கீறு வரை ரெண்டு
செணத்தில் இந்திரன் யமன் வரைக்கும் சேரும் வருணன் பேரணுடன்
குணத்தின் வரைதான் நாங்கக்கும் (நான்கிற்கும்) கொண்ட ஈசன் கன்னிவரை
...... குணமாம் வாயு ஆக்கினியே

60. ஆக்கினி அருளும்வரைபத்தாய் ஆகும்இராசிபன்னிரண்டாம்
போக்கினி வகுத்தென் நாள்கள் தன்னை புரவி கிழவன் மரி தனிலாம்
வாக்கினில் ஆரல் ரே॥கணியும் வளரும் மான்தலை !ஏருதில் தாம்
நீக்கினி ஆதிரை புணர்தமொடு நின்றே ஆளில் ஆகுமதே.

61. ஆமே பூசம் ஆயில்லியமும் ஆன் நண்டில் ஆகுமென பார்
போமே மகமும் பூரமுடன் பொருந்து சிங்கம் தனில் ஆகும்
ஏமே உத்திரம் அத்தமுடன் ஏத்த கன்னி தனிலாகும்
தாமே பயறு சோதி முதல் தனித்த முறமும் துலாம் அதுவே

62. அதுவே அனுசம் கேட்டை முதல் ஆனதேளில் அடைந்திடுமாம்
இதுவே மூலம் வாவியுடன் இசைந்த தனுவில் இருந்திடுமாம்
பொது உத்திராடம் ஓணமுடன பொருந்தும் விட்ட மகரம் அதாம்
எதுவே சதயம் பூரட்டாதி ஏத்த கும்ப ராசியதே

63. கும்பமாம் உத்திரட்டாதி குணமுள்ள ரேபதியும்
வம்புசேர் மீனராசி வாளதின் மிருபத்தேளாய்
இம்பமாய் கூபம் பார்க்க இசைந்திடும் கார் காலத்தில்
அம்புவி மாதே கண்டு அருளும் நீர் திசைகள் சொல்வோம்

64. திசையுடன் கார் காலத்தில் தெரிய சரமே கண்டால்
வசையுடன் குதிரை நாளாய் வகையுடன் எண்ணி பாரு
இசையுடன் திரமே காணில் இயல் மகம் முதலாய் எண்ணு
விசையுடன் உபயராசி வேண்டியே மூலம் எண்ணே

65. எண்ணிய துகையைக்கண்டு இசைந்த அத்தினநாள்எண்ணி
பண்ணிய கண்ட நாள்கள் பகருவாய் சோமன் கூறாய்
புண்ணிய மாகக் கீழ்நீர் போகுமே ஊத்துக் கண்கள்
